ஜூன் 2025

# ஞானம்

கலை இலக்கியச் சஞ்சிகை

301



விலை
ரூபா 100/=

## பல்துறை ஆளுமையாளர்

பேராசிரியர் கலாநிதி
**கந்தையா ஸ்ரீகணேசன்**

பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !

# ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை

வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிப்பெருக்கும் மேவுமாயின்,
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம்
விழிபெற்றுப் பதவிகொள்வர்.

301

ஒளி : 26 சுடர் : 01

ஸ்தாபகர், ஆலோசகர் : தி. ஞானசேகரன்

ஆசிரியர் : ஞானம் பாலச்சந்திரன்
இணை ஆசிரியர் : ஞானம் ஞானலக்ஷ்மி
ஓவியர் : கிறிஸ்டி நல்லரெத்தினம்

ஞானம் பதிப்பகம்
3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு 6. இலங்கை
தொலைபேசி: + 94 11 258 6013
+ 94 71 736 2862
மின்னஞ்சல்: editor@gnanam.info

சந்தா விபரம் : இலங்கை Rs. 1500/=
வெளிநாட்டுச் சந்தா $ 100
(தபால் செலவு உட்பட)

வங்கி விபரம்
G. BALACHANDRAN
Acc. No. - 009020348846
Hatton National Bank,
Wellawatha Branch.
Swift Code : HBLILKLX


## இதழினுள்ளே.....

### கவிதைகள்


- செல்லையா சுப்ரமணியம் 12
- கமலா தாஸ் / ஸ்ரீ பராக்கிரம கொடித்துவக்கு / எம்.எம்.மன்ஸூர் 18
- என். நஜ்முல் ஹுசைன் 40
- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் 46
- கலாநிதி ஜீவகுமாரன் (டென்மார்க்) 52


### கட்டுரைகள்


- தமிழ்மணி அகளங்கன் 02
- ஞானம் பாலச்சந்திரன் 19


### பத்தி


- பேராசிரியர் துரை. மனோகரன் 55


### சிறுகதைகள்


- ஆவூரான் (அவுஸ்திரேலியா) 09
- வீ. என். சந்திரகாந்தி 13
- கார்குழலி (இந்தியா) 17
- சங்கர சுப்பிரமணியன் (அவுஸ்திரேலியா) 37
- உ. நிசார் 41
- சி. மௌனகுரு 47
- முனைவர் புதுவை மனுநீதி 53


பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம் !


- ஞானம் சஞ்சிகையில் பிரசுரமாகும் படைப்புகளின் கருத்துகளுக்கு அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்பானவர்கள்.
- புனைபெயரில் எழுதுபவர்கள் தமது சொந்தப் பெயர், தொலைபேசி எண், முகவரி ஆகியவற்றை வேறாக இணைத்தல்வேண்டும்.
- பிரசுரத்திற்குத் தேர்வாகும் படைப்புகளைச் செவ்வைப்படுத்த ஆசிரியருக்கு உரிமையுண்டு.
- படைப்புகள் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு மின்னஞ்சலில் அனுப்பப்படவேண்டும்.
- ஞானம் சஞ்சிகையானது பொதுவெளி (Public Domain) பதிப்புரிமையை உடையது.

ஆசிரியர் பக்கம்...




# நலன் பாரா சாரதிகள்

இந்த வருடத்தில் நாடளாவியரீதியில் வாகன விபத்துகளும் அதனால் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளதாகப் புள்ளிவிபரங்கள் தெரியப்படுத்துகின்றன. கடந்த ஐந்து மாதங்களில் ஏறத்தாழ 950 விபத்துகளில் 1000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் அறிக்கை விடுத்துள்ளனர். அதாவது நாளொன்றுக்கு 6–8 வரையிலானோர் வாகன விபத்தில் 'கொத்துகொத்தாக' உயிரிழந்தவண்ணம் உள்ளனர். காயமடைந்தோரின் எண்ணிக்கை சில ஆயிரங்களைத் தாண்டிவிட்டது.

அதிவேக வீதிகள், வாகனப் பராமரிப்பின்மை, சாரதிகளின் கவனயீனங்கள், மது – போதைவஸ்துகளின் பாவனை, வீதிப் போக்குவரத்துச் சட்டங்களை மதியாது வாகனங்களைச் செலுத்துதல், போக்குவரத்து விதிகள் பற்றிய விழிப்புணர்வு இன்மை, கால்நடைகள் குறுக் கிடுதல் எனப் பல்வேறு காரணிகள் வாகன விபத்துக்கள் அதிகரிப்பதற்குப் பங்களிக்கின்றன.

பல காரணிகள் இருப்பினும் **வாகனச் சாரதிகளின் உதாசீனமும் பொறுப்பற்றதன்மையும் அதிக பங்கினை வகிக்கின்றது** எனலாம். அயர்ச்சி மற்றும் நித்திரையைப் பொருட்படுத்தாது இரவு நேரங்களில் வாகனங்களை செலுத்துதல், கைப்பேசியில் கவனம் வைத்துக்கொண்டு வாகனத்தை ஓட்டுதல், தமது அதிகார மமதையில், வீதி ஒழுங்குகளை பின்பற்றத் தவறுதல், தமக்குள்ள பெரிய இடத்துத் தொடர்புகளால் வீதி ஒழுங்கையும் மீறலாம் என எண்ணுதல், பிற சாரதிகளுடன் போட்டிபோட்டுக்கொண்டு வாகனத்தைச் செலுத்துதல் எனச் சாரதியின் உளரீதியான பல காரணிகள் விபத்துகளுக்கு தாக்கம்செலுத்துகின்றன.

சாரதிக்குரிய இருக்கையில் அமர்ந்ததும் தன்நிலை மட்டும் கருதாது, வாகனத்தில் இருக்கும் அனைத்து பயணிகளின் உயிர்களும் தமது கரங்களில் தங்கியுள்ளன எனும் விழிப்புணர்வு அவர்களுக்குள் வரல்வேண்டும். அத்தனை பயணிகளினதும் கனவுகள், அபிலாஷைகள், எதிர் காலத் திட்டங்கள் என்ற அனைத்தையும் ஒரு நொடியில் சிதைத்து, அழித்து, உருத்தெரியாமல் ஆக்கிவிடக்கூடாது எனும் தார்மீகப் பொறுப்பும் அவர்களுக்குள் பரவிடல்வேண்டும்.

இந்நோக்கத்தில் சாரத்தியம் பற்றிய விழிப்புணர்வானது இன, மத, மொழி வேறுபாடுகள் கடந்த நிலையில் அனைத்து மட்டங்களிலும் மீண்டும்மீண்டும் மேற்கொள்ளப்படல் வேண்டும். வீதி பாதுகாப்புச் சட்டங்கள் சரிவர அமுல்படுத்தப்படல் அவசியமாகும்.

மகாபாரதத்தில் கிருஷ்ணனே அரசன் எனும் தன்நிலையிலிருந்து மாறி **சாரதி**யெனும் பொறுப்பை ஏற்றுக்கொண்டான். குருச்சேத்திரப் போரில் **பார்த்தசாரதி**, தேரில் மேற்கொண் டிருக்கக்கூடிய நொடிப்பொழுது அசைவும், மகாபாரத இதிகாசத்தையே மாற்றியமைத்திருக்கும்.

சாரதி என்பது அத்துணை பொறுப்பான பணியாகும்.

நாங்களோ.. நலன் பாரா சாரதிகளாக இருக்கின்றோம்.

❍❍❍

அட்டைப்பட அதிதி

# ஈழத்துக் கலை இலக்கியத் துறையில் பல்துறை ஆளுமையாளர்

## பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்



எழுத்தாளர், நாடகக் கலைஞர், மொழி பெயர்ப்பாளர், விமர்சகர், கவிஞர், பேச்சாளர், தொகுப்பாசிரியர், ஓயாத இலக்கியச் செயற் பாட்டாளர் எனப் பல் பரிமாணங்களைக் கொண்டவர் பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்.

### பிறப்பு, கல்வி, தொழில்

யாழ்ப்பாணத்து இணுவில் கிராமத்தில் அமரர்களான ***கந்தையா தங்கேஸ்வரி*** தம்பதிகளின் மகனாக 5 சகோதரிகள், 3 சகோதரர்களுடன் பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன் 03-01-1961இல் பிறந்தார். இவரது தாய் தந்தை இருவருமே ஆசிரியப் பணி புரிந்தவர்கள். தந்தையார் அதிபராகி ஓய்வு பெற்றவர்.

இவர் இணுவில் மத்திய கல்லூரி (முன்னாள் இணுவில் அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை), சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், மானிப்பாய் இந்துக் கல்லூரி ஆகியவற்றில் கல்விகற்று, யாழ். பல்தொழில்நுட்பக் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமா பட்டம் பெற்றார்.

1982இல் ஆங்கில ஆசிரிய நியமனம் பெற்று கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி பிரதேசத்தில் கௌதாரிமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, மற்றும் பூநகரியிலுள்ள வேரவில் இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, முரசுமோட்டை முருகானந்த மகா வித்தியாலயம், மற்றும் இயக்கச்சி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் பணியாற்றினார்.



தமிழ்மணி அகளங்கன்

பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆங்கிலப் பயிற்சி பெற்றார். பின் யாழ்ப்பாணப் பல் கலைக்கழகத்தில் ஆங்கிலம், மொழியியல் மற்றும் நாடகமும் அரங்கியலும் ஆகிய பாடங்கள் படித்து பொதுக் கலைமாணியில் சிறப்புப் பட்டம் பெற்றார்.

பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழி கற்பித்தல் பிரிவில் போதனாசிரியராகப் பதவி பெற்றார். பின்னர் வவுனியாவில் இயங்கிய வடமாகாண இணைக்கப்பட்ட பல்கலைக்கழகக் கல்லூரியில் விரிவுரையாளராகப் பதவி ஏற்று அக்கல்லூரி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தோடு இணைக் கப்பட்டு வவுனியா வளாகமாகச் செயற்பட்ட காலத்தில் ஆங்கிலமொழி கற்பித்தல் அலகில் பல்கலைக்கழக விரிவுரையாளராக 1997இல் உள்வாங்கப்பட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆங்கிலமொழி கற்பித்தல் அலகில் பதினெட்டு வருடங்கள் பணியாற்றி, பத்து வருடங்கள் முதலில் இணைப் பாளராகவும் பின்னர் தலைவராகவும் பொறுப் பேற்றுக்கொண்டார்

பேராசிரியர் சு.சுசீந்திரராசாவின் வழி காட்டலில் "பல்கலைக்கழக மட்டத்தில் ஆங்கில மொழி கற்பித்தலில் இலக்கியத்தின் பயன்பாடு" என்னும் தலைப்பில் ஆய்வு செய்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் M.Phil (முதுதத்துவ மாணி) பட்டத்தை 1999இல் பெற்றுக்கொண்டார். இந்தியாவின் ஆந்திரா (இன்றைய தெலுங்கானா) மாநிலத்தின் ஐதராபாத் நகரத்திலுள்ள ஆங்கிலமும்

வெளிநாட்டு மொழிகளுக்குமான பல்கலைக் கழகத்தில் ஆங்கில வகுப்பறைகளில் அரங்கச் செயற்பாடுகள் மூலம் ஆங்கில மொழித் தேர்ச்சியை மேம்பாடடையச் செய்தல் என்னும் தலைப்பில் ஆய்வு செய்து தனது கலாநிதிப் பட்டத்தை (Ph.D), 2009இல் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழி கற்பித்தல்துறை சிரேஷ்ட விரிவுரையாளராக நியமனம் பெற்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் புதிதாகத் தொடங்கப்பட்டு வளர்ந்துவரும் துறையான "மொழிபெயர்ப்புக் கற்கைகள்" துறையின் இணைப்பாளராக நியமனம் பெற்று நாலரை வருடங்கள் பணியாற்றினார். "ஆங்கில மொழி கற்பித்தல்" பாட இணைப்பாளராகவும் மூன்று வருடங்கள் பணியாற்றினார்.

அதனை விசேட பட்டதாரி கற்கை நெறியாக மாற்றும் மூலப் பாடவிதானத் திட்டத்தை வரைந்து முன்மொழிந்து உருவாக்கினார். இன்று இப் புதியதுறை நூறு மாணவர்கள் பயிலக்கூடிய ஆங்கில மொழிக் கற்பித்தல் விசேட துறையாக பரிமளிக்கிறது.

இவரது சகோதரர்களான திரு ஸ்ரீகந்தவேள் M.A., M.Ed (அதிபர் தரம்—1) வவுனியா சிதம்பர புரம் ஸ்ரீ நாகராஜா வித்தியாலயத்தில் அதிபராகப் பணியாற்றுகிறார். திரு. ஸ்ரீநந்தகோபன். M.Ed (அதிபர்.தரம்—3) வவுனியா நெளுக்குளம் கலைமகள் வித்தியாலயத்தில் பிரதி அதிபராகப் பணியாற்றுகிறார். கலாநிதி ஸ்ரீகருணாகரன் கிழக்குப் பல்கலைக்கழகத்தில் ஆங்கில மொழித்துறையில் தலைவராகவும் சிரேஷ்ட விரிவுரையாளராகவும் பணியாற்றுகிறார்.

திரு.ம. திருவருட்செல்வம், நாகேஸ்வரி தம்பதிகளின் புதல்வியான **செல்வகுமாரி** அவர்களைத் திருமணம் செய்து வவுனியா இறம்பைக்குளத்தில் வாழ்ந்து வந்தார். தற்போது சுதுமலை வடக்கு என்னும் இடத்தில் மனைவியோடும் இரண்டு பிள்ளைகளோடும் வாழ்ந்து வருகிறார்.

இவரது மகள் **சஸ்மீரா** கொழும்பு பல்கலைக்கழகத்தில் முதல் பட்டத்தைப் பெற்று இப்போது அமெரிக்காவில் கொலராடோ பல்கலைக் கழகத்தில், மூலக்கூற்று உயிரியலும் உயிரியல் இரசாயனமும் என்ற துறையில் கலாநிதிப் பட்ட ஆராய்ச்சி மாணவியாக (Ph.D Research) கல்வி பயிலுகிறார். மகன் **நதிஸ்கர்** கிளிநொச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொறியியல் மாணவனாகக் கல்வி பயிலுகிறார்.

## நூல்கள், பரிசுகள், விருதுகள்

இவர் தமிழ் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நூல்களை வெளியிட்ட இரு மொழிப் படைப்பாளி.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், இணுவில் கலை இலக்கிய வட்டம், வவுனியா ஆங்கிலச் சங்கம், யாழ்ப்பாண ஆங்கிலச் சங்கம் ஆகியவற்றின் மூலம் தனது **பதினொரு நூல்களை** வெளியிட்டவர்.

***நிதர்சனத்தின் புத்திரர்கள்*** (நாடக எழுத்துருக்கள் - 2001), ***ஈழத்துக் கலை இலக்கிய உலகு***, (விமர்சனக் கட்டுரைகள்-2010), ***சுதந்திரம்*** (தென்னாசியக் கவிதைகள்) மொழிபெயர்ப்பு-2018, என தனது ***மூன்று வகையான மூன்று நூல்களுக்கு அரச இலக்கிய விருதுகள்*** பெற்றவர். இவற்றில் முதல் இரண்டு நூல்களும் மாகாண சிறந்த நூற் பரிசுகளையும் பெற்றவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவற்றை விட,

யாழ்ப்பாணத் தமிழ் நாடக அரங்கு,1997,

நாற்று மேடை(பத்தி எழுத்துக்கள்),-2008, ஆகிய தமிழ் நூல்களையும்

மற்றும்,

My Choice - Sri Lankan Tamil Poetry in English.(2018), Using Theatre to Enhance Learner Language in English Classrooms, - A Sri Lankan Experiment,-(2019), English Language Teaching through Literature at University Level - (2020), Breaking Barriers (A Selection of English Poems), - 2020, Literature in the English Classroom, (2020), Grammar Through Theatre Tasks (2021) ஆகிய ***ஆறு ஆங்கில நூல் களையும்*** தனது தொழில்துறை சார்ந்து ஆக்கி வெளியிட்டவர். இவற்றுள் Breaking Barriers என்ற நூல் 2021இல் கொடகே தேசிய சாகித்திய விருது பெற்றது.

வவுனியா நகரசபையின் ***நாடக நெறி எழில்*** (1998). ***வவுனியா மாவட்ட இலக்கிய விருது*** (2008), ***வவுனியா பிரதேச செயலக விருதான முத்தமிழ்க் கலைச்சுடர்*** (2010), ஆகிய பட்டங்களைப் பெற்றவர்.

பிராந்திய ஒத்துழைப்புக்கான தென்னாசிய (SAARC) நாடுகளின் சங்க எழுத்தாளர்களின் அமைப்பு 2023இல் நடத்திய இலக்கிய விழாவில் வழங்கப்பட்ட இலக்கிய விருதான ***சார்க் இலக்கிய விருதும்*** பெற்றவர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் இவருக்கு 2024 டிசெம்பரில் ***இலக்கியத்திற்கான கலை ஞாயிறு விருது*** வழங்கிக் கௌரவித்தது.

### அரங்கச் செயற்பாடுகள்

நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தை தனது பட்டப் படிப்பில் ஒரு பாடமாகப் பயின்ற இவர் ஈழத்தின் இரு பெரும் நாடக ஆளுமைகளான **குழந்தை ம.சண்முகலிங்கம்**, **பேராசிரியர் சி.மௌனகுரு** ஆகியோரின் பல நாடகங்களில் நடிகராக இயக்குநராகப் பணி யாற்றியிருக்கிறார். (சக்தி பிறக்குது, புதிய தொரு வீடு), **பேராசிரியர் கா. சிவத்தம்பி**யிடம் தமிழ் நாடகம், விமர்சனம் என்பவற்றைக் கற்றார்.

1990களில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் இந்து நெறி பயிலும் மாணவர்களுக்கும், கிறிஸ்தவ மாணவர்களுக்கும் கொழும்புத் துறை கிறிஸ்தவ குருத்துவக் கல்லூரி மாண வர்களுக்கும் சித்த வைத்தியத்துறை மாண வர்களுக்கும் ''திரிசங்கு சொர்க்கம்'' ''தாயுமாய் நாயுமானார்'' ஆகிய நாடகங்களை பழக்கி மேடையேற்றினார்.

1992இல் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் சேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகத்தைப் பழக்கினார்.

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர்களுக்கு ஜே.எம். சிங் எழுதிய ஆங்கில நாடகமான Riders to The Sea நாடகத்தை ''காற்றோடும் அலையோடும்'' என்ற பெயரில் பழக்கி தமிழில் மேடையேற்றினார். இராமநாதன் கல்லூரி பொன் விழாவிலும், வலிகாமம் கல்வி வலய சங்கீத நடன ஆசிரியர்களுக்கும் மௌனகுருவின் ''நம்மைப் பிடித்த பிசாசுகள்,'' குழந்தை சண்முகலிங்கத்தின் ''ஒற்றுமையின் சின்னம்'' ஆகிய நாடகங்களை நெறியாளுகை செய்து மேடையேற்றினார். மற்றும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் தொடர்ந்து மூன்று வருடங்கள் தமிழ் விழாக்களுக்கு குழந்தை சண்முகலிங்கத்தின் ''பள்ளி எழுந்திடுவீர்'' மற் றும் சுய ஆக்க நாடகங்களையும் பழக்கினார்.

வவுனியா வளாக மாணவர்களுக்கும் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கும், வவுனியா பிரதேச செயலக பெண்கள் அணியினருக்கும், பாடசாலை மாணவர்களுக்கும், சாயி சமித்தி முதலான பல நிறுவன மாணவர்களுக்கும் பல தமிழ் நாடகங்களை பழக்கி மேடையேற்றியிருக்கிறார்.

வாற்பேத்தைகள்'' ''தாயுமாய் நாயுமானார்'', ''கர்ணன்'', ''நிதர்சனத்தின் புத்திரர்கள்'', ''சர்வதேச அடிமைகள்'' ''அன்பென்று கொட்டு முரசே'' ''சிங்க ராஜா'', ''கைகள் உண்டு கால்கள் உண்டு'', ''வாத்தியார்'', ''வெள்ளம் வந்தது'', ''தீக்கோழிகள்'' முதலான பல நாடகங்களைக் குறிப்பிடலாம்.

வளாக மாணவர்களுக்கு நாடகங்களைப் பழக்கி மேடை ஏற்றியும் அவற்றை ஒளிப் பேழைகளாக உருவாக்கி வெளியிட்டும் வவுனி யாவில் குறும் படங்கள் வெளிவருவதற்கு முன்னோடியாகச் செயற்பட்டார். இவற்றில் வவுனியா வளாக மாணவர்கள் பங்குகொண்ட உறவுகள், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் எழுத்தாளர் வவுனியூர் இரா உதயணன் அவர்களின் நிதி உதவியோடு வெளியிட்ட ஏடு, மற்றும் முல்லைமணியின் பண்டார வன்னியன் ஆகிய குறும்படங்களையும் விசேடமாகக் குறிப்பிடலாம்.

### மொழிபெயர்ப்பாளர்

மொழிபெயர்ப்புத் துறையில் இவரது பங்களிப்பு முக்கியமானது. ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கு மட்டுமின்றி தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் மொழி பெயர்ப்புக்களைச் செய்துள்ளார். அவற்றில் ஈழத்துத் தமிழ்க் கவிதைகளை ஆங்கிலத்துக்கு மொழி பெயர்ப் புச் செய்து இவர் வெளியிட்ட *My Choice— Sri Lankan Tamil Poetry in English* நூல் முக்கியமானது.

வீ. ஜீவகுமாரனின் கோமதி என்ற தமிழ் நாவலை எஸ்.விஸ்வேஸ்வரன் அவர்களுடன் இணைந்தும் பாரம்பரிய மொழி கற்பித்தலின் பல் பண்பாட்டிடைவினை ஆற்றலை மேம்படுத் தல் என்ற நூலினை பேராசிரியர் அ. சண்முக தாஸ் அவர்களோடு இணைந்தும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.

வவுனியாவில் நாங்கள் உருவாக்கி இரண்டு பதிப்புகள் கண்ட முக்கியமான வர லாற்று ஆவணநூலான *A Manual of The Vanni Districts (Vavuniya and Mullaittivu — By J.P.Lewis)* என்ற நூலின் தமிழாக்கமான இலங்கையின் வன்னி மாவட்டங்கள் ஒரு கையேடு நூலின் சில பகுதிகள் இவரின் மொழிபெயர்ப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### தொகுப்பாளர்

*Santhan's World in Flash (A Collection of Criticism) 2008, Classroom Theatre Scripts - 2006, Try a Little Kindness (Drama Scripts) -*




2010, SOPAs Miscellany (Collection of Essays and Papers) - 2019, ஆகிய ஆங்கில நூல்களின் தொகுப்பாசிரியராகவும், ஈழத்துப் பண்டிதமணி (பேராசிரியர் சு.சுசீந்திரராசாவின் கட்டுரைகள்) - 1999, நாடக வழக்கு - (குழந்தை ம. சண்முகலிங்கம் எழுதிய அரங்கக் கட்டுரைகளும், நேர்காணல்களும்) - 2003, மௌன குருவின் நேர்காணல்கள் - 2012, முதலான தமிழ் நூல்களின் தொகுப்பாளராகவும் பணியாற்றியிருக்கிறார்.

## இணை ஆசிரியர், ஆசிரியர்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வெளியிட்ட அமுதகங்கை (வன்னியூர்க் கவிராயர் எழுதிய கவிதைகள், சிறுகதைகள் தொகுப்பு), மற்றும் மாருதம் சஞ்சிகையின் 21 இதழ்களுக்கும் என்னோடும், சோ.ப.-75 - சோ.பத்மநாதன் பாராட்டு மலர்-2014, பஜனைப் பாமலர் (இணுவில் தியாகராஜா சுவாமிகள் நூற்றாண்டு மலர்) - 2018, வவுனியா ஆங்கில சங்கம் வெளியிட்ட Oasis ஆங்கிலச் சஞ்சிகையின் முதல் இரண்டு இதழ்களின் இணையாசிரியராகவும்-2000,2020, மூன்றாவது இதழின் ஆசிரியராகவும்-2017, பணியாற்றியிருக்கிறார்.

Journal of Science and Management, (Vavuniya Campus of the University of Jaffna –2010), Sri Lanka Journal of South Asian Studies, (Faculty of Arts, University of Jaffna 4 Issues 2018—2021) ஆகிய ஆராய்ச்சி இதழ்களின் ஆசிரியராகவும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப் பீட சிந்தனை என்ற ஆராய்ச்சி இதழின் ஆசிரியர் குழு உறுப்பினராகவும் (2016—2018) பணியாற்றினார். 1995இல் வவுனியாவில் இயங்கிய இணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரியின் ஆங்கில ஆசிரிய மன்றம் வெளியிட்ட SHUTTLE என்னும் ஆய்வுச் சஞ்சிகையை தொகுத்து வெளியிட்டமை ஒரு முன்னோடி நிகழ்வு எனலாம்.

## கலை இலக்கிய மன்றங்கள்

இணுவில் கலை இலக்கிய வட்டத்தின் செயலாளராக 1986—1993 காலப்பகுதியில் பணியாற்றினார். தொடர்ந்தும் 2018 இன்பின் தலைவராகப் பணியாற்றி வருகிறார் சுதுமலை இந்து சமய விருத்திச் சங்கத்தின் தலைவராக 2022இலிருந்து பணியாற்றி வருகிறார்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் செயலாளராக 1997 இலிருந்து இன்றுவரை பணியாற்றி வருகிறார். வவுனியா ஆங்கிலச் சங்கத்தின் இணைச் செயலாளராகவும் 2001 முதல் பணியாற்றி வருகிறார். யாழ்ப்பாண ஆங்கிலச் சங்கத்தின் தலைவராக 2017 முதல் பணியாற்றி வருகிறார்.

## மதிப்பீட்டாளர்

1998 இலிருந்து இலங்கை மத்திய அரசின் கலாசார அமைச்சின் கவிதை, நாடகம், நாவல், சிறுகதை, மொழி பெயர்ப்பு நூல் மதிப்பீட்டாளராகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இருந்த காலத்தில் அதன் பண்பாட்டலுவல்கள் திணைக்கள சிறந்த நூல் மதிப்பீட்டுக்குழு உறுப்பினராகவும் 1998 முதல் பணியாற்றியிருக்கிறார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்ட பின் வடக்கு மாகாண, மற்றும் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களங்களின் சிறந்த நூல் தேர்வு மதிப்பீட்டாளராகத் தொடர்ந்து ஈடுபட்டுவருகிறார்.

வடக்கு மாகாணம் பிரிந்த காலத்திலிருந்து வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக் களத்தின் ஆலோசனைக் குழு உறுப்பினராகவும் தொடர்ந்து பணியாற்றி வருகிறார்.

## சர்வதேச அரங்கில்

கனடாப் பல்கலைக் கழகங்களான ஒட்டாவ, கொன்கோடியா, ரொறான்ரோ,

யோர்க் ஆகிய பல்கலைக் கழகங்களில் நடைபெற்ற மொழிபெயர்ப்புக் கற்கைகள் சம்பந்தமான பயிற்சி நெறியில் பங்குபற்றி அந்த நடை முறைகளை எமது நாட்டுப் பல் கலைக்கழகங்களில் பயிற்சிப் பட்டறைகள்மூலம் அறிமுகம் செய்துவருகிறார்.

ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆங்கில இலக் கியம், மொழி கற்பித்தல், மொழிபெயர்ப்பு ஆகியவற்றுக்கான கலாநிதிப் பட்ட ஆய் வேடுகளின் மதிப்பீட்டாளராகப் பணியாற்றி யுள்ளார்.

தமிழ் நாடு திண்டுக்கல் காந்தி கிராம பல்கலைக் கழகத்தில் ''ஆங்கிலம் கற்பிப்பதில் இலக்கியத்தின் பயன்பாடு'' என்ற தலைப்பில் உரையாற்றினார்.(2014),

இங்கிலாந்தில் நடைபெற்ற லண்டன் சைவமுன்னேற்றக் கழகத்தின் சைவ மாநாட்டில் ''திருமந்திரம்'' பற்றி ஆங்கிலத்திலும், தமிழிலும் உரையாற்றியிருக்கிறார். லிவர்பூல் (Liverpool) பல்கலைக்கழகம் நடாத்திய ''மொழியியல் நிலவரைவு'' மாநாட்டிலும் கலந்துகொண்டார்.

கனடா யோர்க் (York) பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற தமிழர் தகவல் மையத்தின் வருடாந்த மாநாட்டில் ''இலங்கைத் தமிழ்க் கவிதைகளின் ஆங்கில தமிழ் மொழிபெயர்ப்பு'' பற்றி உரையாற்றினார்.

இந்தியா, சேர்பியா, ஜேர்மனி, சுவிஸ்லாந்து, டென்மார்க், நோர்வே, பிரான்ஸ், லண்டன், கனடா ஆகிய நாடுகளில் மொழி கற்பித்தல் சம்பந்தமான உரைகளை ஆற்றியுள்ளார்.

தமிழ் நாடு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக் கழகத்தில் ''ஆங்கிலம் கற்பிக்கும் முறை'' ஒரு மீள் பார்வை உரை (2017), இந்தியாவின் ஆந்திரா மாநில விசாகப் பட்டினத்திலுள்ள ஆந்திரப் பல்கலைக்கழகத்தில் ஆங்கிலமொழிக் கற்பித்தல் ஆய்வுமுறை உரை (2017), மற்றும் இந்தியாவின் தமிழ் நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, டில்லி மாநிலங்களில் பத்திற்கும் மேற்பட்ட கல் லூரிகளில் உரைகள் ஆற்றி எமது நாட்டுக்குப் பெருமை சேர்த்துள்ளார்.




புது டில்லியில் நடைபெற்ற சார்க் இலக் கியத் திருவிழாவில் 2013 முதல் ஏழுமுறை கலந்துகொண்டு ''ஈழத்து தமிழ் இலக்கிய ஆங்கில மொழிபெயர்ப்புகள்'' பற்றிய உரைகள் ஆற்றியிருக்கிறார்.

*Unheard Melody, Journal of English Literature (2004/2005), Delhi India, Cape Comorin (Multi – Disciplinary, Peer -reviewed)Journal, Kanya kumari, Tamil Nadu INDIA(2019—2024)* ஆகிய சர்வதேச ஆய்வு இதழ்களில் ஆசிரியர்குழு உறுப்பினராகப்பங்குகொண்டுள்ளார்.

## ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் செயற்பாடுகள்

கொழும்பில் நடைபெற்ற இலங்கை ஆங்கிலமொழி ஆசிரியர் சங்க மாநாடுகளிலும், கிழக்குப் பல்கலைக்கழகம், தென் கிழக்குப் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகம், மற்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் மாநாடுகளிலும் ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாக 4 ஆவது ஆய்வு அமர்வையும் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக ஆங்கிலமொழிக் கற்பித்தல் துறையின் முதலாவது ஆய்வு அமர்வையும் ஒருங்கிணைப்பாளராக கடமை ஏற்று நடத்திவைத்தார். தொடர்ந்து 2025 ஓகஸ்டில் நடைபெற உள்ள சர்வதேச ஆங்கில மாநாட்டு ஒருங்கிணைப்பாளராகக் கடமை ஆற்றிவருகிறார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை நடத்திய முதலாவது (2015) மற்றும் நான்காவது (2023) மாநாடுகளில் முறையே ''சைவசமய பாடல்கள் ஓர் ஆய்வு,'' பெரிய புராணகதைகள் ஊடாக ஆங்கில மொழி வாசிப்பை ஊக்குவித்தல் ஆகிய தலைப்புகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளார்.

2000ஆம் ஆண்டில் மன்னார் வலய கல்வித் திணைக்களத்தின் ஆதரவில்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வவுனியா வளாகம் நடத்திய ஆங்கில தராதரப்பத்திர பயிற்சிநெறி விரிவுரைகளை மன்னாருக்குச் சென்று நடத்தினார்.

யுத்த காலத்தில் புதுக்குடியிருப்பு, மல்லாவி, அக்கராயன், முதலான பிரதேசங்களில் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கு ஆங்கிலப் பாடத்தைக் கற்பித்தார். தொடர்ந்து வடக்கு-கிழக்கு மாகாண பண்பாட்டு அமைச்சின் ஆதரவில் வன்னி மாவட்டங்களில் மூன்று நாடகப் பயிற்சிப் பட்டறைகளை முல்லைத்தீவு, துணுக்காய், கிளிநொச்சி, கல்வி வலயங்களில், 2000ஆம் ஆண்டு ஆரம்பத்தில் நடத்தினார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ஆங்கில ஆசிரியர்களுக்கு ஆங்கில நாடகப் பயிற்சிப் பட்டறையை வள அணியினருடன் வட்டுக்கோட்டையிலும், திருகோணமலையிலும் 2010ஆம் ஆண்டில் நடத்தியிருந்தார்.

2013இல் கிளிநொச்சி விஞ்ஞான மன்றம் நடத்திய ஆரம்பப்பிரிவு ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பயிற்சி நெறியை வழி நடத்தினார்.

2013 முதல் 2019 வரை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் நடத்திய ஆங்கில வகுப்புகளில் ஆலோசகராகப் பயிற்சிப் பட்டறைகளையும் ஆங்கில வகுப்புக்களையும் நடத்தினார்.

2017இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வவுனியா வளாகத்தினால் நடாத்தப்பட்ட வவுனியா மன்னார் மாவட்ட ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆறுமாத பயிற்சி நெறியின் இணைப்பாளராக இருந்து வழிநடத்தினார்.

போர்க்காலத்தில் இடம்பெயர்ந்துவந்த ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சியை வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் 2007/2008, 2008/2009 ஆகிய இரு குழுவினருக்கும் வழங்கினார்.

## காணொளி வெளியீடுகள் (2010)

*A Classroom Theatre for Language Proficiency, Communication and Seminar Skills. Four Plays on Stage, Impromptu Speech and Speech on the platform.* ஆகிய காணொளிகளை ஆங்கிலம் கற்பித்தல் தொடர்பாக வெளியிட்டுள்ளார். உறவுகள் (1994), சர்வதேச அடிமைகள்(1998), ஆகிய தமிழ் நாடகங்களையும் வெளியிட்டார்.

## பாடவிதான மதிப்பீட்டாளர்

இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழக ஆங்கில பட்டதாரி பயிற்சிநெறி பாடவிதானம், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக பொறி யியல் துறை மாணவர்களுக்கான ஆங்கில இலக்கிய அறிமுகம் பாடவிதானம் இந்தியத் தமிழ் நாடு கோயம்புத்தூர் பாரதியார் பல்கலைக்கழக ஆங்கில இலக்கிய முதுகலைமாணி கற்கை நெறிப் பாட விதானம் ஆகியவற்றின் மதிப்பீட்டாளராகக் கடமையாற்றினார்.

## பிற செயற்பாடுகள்

வவுனியாவில் இயங்கிய வட மாகாண இணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரியின் கலை கலாசார மன்றப் பொறுப்பாசிரியராகப் பணியாற்றி தடம் சஞ்சிகை வெளியீட்டுக் குழுவின் ஆலோசகராகவும் வன்னி ஓடை(1998), வன்னி அருவி (2000), வன்னி ஊற்று (2003), ஆகிய புத்தாக்க மெல்லிசைப் பாடல்கள் கொண்ட இறுவட்டுக்களின் வெளியீட்டுக் குழு ஆலோசகராகவும் பணியாற்றினார்.

உயர்கல்வித் தரத்தை உயர்த்தும் இலங்கைச் சங்கத்தின் ஆட்சிக்குழு அங்கத்தவராகப் பணியாற்றினார். (2009/2010),

இந்திய ஆங்கில மொழி கற்பித்தல் சங் கத்தின் வாழ்நாள் அங்கத்தவராகப் பணி யாற்றி வருகின்றார். மற்றும் இலங்கை ஆங்கில ஆசிரியர்கள் சங்க வாழ்நாள் உறுப் பினராகவும் உள்ளார்.

இங்கிலாந்தின் ஆங்கிலத்தை வெளி நாட்டு மொழியாகக் கற்பிக்கும் ஆங்கில ஆசிரியர் சங்க உறுப்பினராகவும் கனடாவின் ஆங்கில ஆசிரியர் சங்க உறுப்பினராகவும் (2009/2010), இயங்கியுள்ளார்.

## வவுனியாவில்

சிறந்த நாடகக் கலைஞராகவும் நாடகமும் அரங்கியலும் என்னும் பாடத்தை தனது பட்டப்படிப்புப் பாடங்களில் ஒன்றாகப் படித்த வருமான இவர் வவுனியாவில் பணியாற்றிய காலத்தில் பல பயிலரங்குகளை நாடக ஆர்வலர்களுக்கும், பாடசாலை மாணவர்களுக் கும், தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர் களுக்கும், வளாக மாணவர்களுக்கும் நடத்தி நாடகக் கலையைப் பெரிதும் வளர்த்துள் ளார். க.பொ.த. உயர்தரத்தில் நாடகம் பயிலும் மாணவர்களுக்கு வகுப்புகள் நடாத்தி மாணவர் களுக்கு வழிகாட்டியாகவும் விளங்கினார். பல



பாடசாலை மாணவர்களுக்கு சேக்ஸ்பியரின் நாடகங்களைப் பழக்கியதுடன் ஆங்கில அறிவையும் நாடகப் பயிற்சியையும் வழங்கினார்.

பாடசாலை மாணவர்களுக்குப் பழக்கிய ஆங்கில நாடகங்கள், *William Shakespeares Plays-Julis Caesar, Hamlet, Othello, King Lear, Magbeth, A Mid Summer, Nights Dream, Mer chant of Venice, Romeo and Juliet, Twelfth Night.*

வடக்கு கிழக்கு மாகாண கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டு கோளின்படி நாடகப் பயிற்சிப் பட்டறைகளை பல பிரதேசங்களில் நடத்தி நாடகத்துறைக்கு புதியத் தென்பு ஊட்டினார். தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அழைப்பில் பத்திரிகையாளர்களுக்கான மொழிப் பயிற்சிப் பட்டறையும் (2007), வவுனியா தெற்கு வலய ஆசிரியர்களுக்கான கவிதை, நாடகம், பாடலாக்கம், முதலான துறைகளில் பயிற்சிப் பட்டறைகளும் (2008), வவுனியா வடக்கு மற்றும் தெற்கு வலய ஆசிரியர்களுக்கான ஆங்கில மொழிமூல பயிற்சி வகுப்புக்களையும் (2011), பற்றுறுதியோடு வழங்கியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

வவுனியா வளாக விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த இவரும் (கந்தையா ஸ்ரீகணேசன்) வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றிக் கொண்டிருந்த திரு.ந இரவீந்திரன், அவர்களும், நானும் (அகளங்கன்) இணைந்து 1997 மாசி மாத முழுநிலா நாளன்று தொடங்கிய வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 237 மாதாந்த முழுநிலா நிகழ்வுகள் கடந்தும் இன்றும் தொடர்கிறது. இது இவரை வவுனியாச் சமூகத்தோடு பின்னிப் பிணைத்தது.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் செயலாளராக இன்றுவரை பணியாற்றிக் கொண்டிருக்கும் பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் வவுனியா மாவட்டத்துக்குச் செய்த கலை, இலக்கிய கல்விச் சேவைகள் மிகப் பெரிய அளவில் பாராட்டப்படத்தக்கன.

இவர் 2009 இல் வவுனியா மாவட்ட கலாசாரக் குழுவின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு சிறப்பாகச் செயற்பட்டார் என்பது விசேடமாகச் சொல்லத்தக்கது. வவுனியாவில் ஓர் ஆங்கிலச் சங்கத்தை உருவாக்கியும், ஆங்கில வகுப்புகள், கருத்தாடல்கள், நாடகப் பட்டறைகள் நடத்தி அவற்றின் ஊடாகவும் ஆங்கில மொழிப் புலமையை வவுனியாவில் உருவாக்கினார்.

Oasis என்ற பெயரிலான ஆங்கிலச் சஞ்சிகையை வெளியிட்டதோடு, பத்துக்கும் மேற்பட்ட புத்தக வெளியீடுகளையும் நடத்தி யுள்ளார். முப்பதிற்கும் மேற்பட்ட ஆங்கில அமர்வுகளை நடாத்தி வவுனியா மாவட்டத்தின் ஆங்கிலத் தரத்தை பெரிதும் உயர்த்தியுள்ளார் என்றால் அதை மறுப்பார் யாருமில்லை.

பேராசிரியர் கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் ஆங்கிலக் கல்விப் புலத்திலும் தமிழ் கலை இலக்கியப் புலத்திலும், விமர்சனத்துறையிலும் என்றும் மனம் கொள்ளத்தக்க சாதனையாளர் என்பது எல்லோரும் ஏற்றுக்கொள்ளத்தக்க உண்மையாகும்.

இவரது கலை இலக்கிய கல்விப் பணிகள் உலகளாவிய ரீதியில் தொடரவும் இவர் இன்னும் சிறப்பான வகையில் அதிகமான அளவில் கலை இலக்கிய கல்விப் பணிகளை ஆற்றவும் நல்ல ஆரோக்கியத்தோடும் மகிழ்ச்சியோடும் இவரும் இவரின் குடும்பத்தினரும் நீண்டகாலம் வாழவும் வாழ்த்துவோம்.

**(நன்றி–மாருதம்)**

“என்னப்பா உங்கிட பிரச்சனை”?

“ஐயோ இந்தக் கேள்வி தானுங்க எல்லாப் பிரச்சனைக்கும் காரணம். என்னால முடியாது இனியும் நான் இங்க இருந்தால் என்னை ஏதாவது ஒரு மன நோயாளிகள் வைத்திய சாலையில் தான் கொண்டு போய் சேர்த்து விடுவார்கள் இவர்கள் இது நடக்கும் இவ்வளவு நாளும் நான் வேலை, வேலை என்று ஓடி, வேலையும் வீடும் என்றும் இருந்தனான் நாலு மாதத்துக்கு முன்தான் பென்சன் எடுத்து வீட்டோட நிம் மதியா பிள்ளையளோட இருக்கலாம் என்று எவ்வளவோ கனவுகளோடும் திட்டங்களோடும் எப்படி எல்லாம் இருக்கவேணும் என்று இருந்த எனக்கு சத்தியமா பைத்தியம் பிடிக்கும் போல தான் இருக்கு.”

பிள்ளைகள் வளரும் காலத்தில் அதுக் களோடு நேரம் செலவழிக்க முடியவில்லை என்ற ஏக்கமும் கவலையும் எப்போதும் இருந்து கொண்டே இருந்தது.

பிள்ளைகளின் பாடசாலையில் நடக்கும் நல்ல நிகழ்ச்சிகளில். பங்கு பெறுவதில்லை.

ஒரு பூங்கா பாக் என்று கூட்டிக் கொண்டு போனதில்லை.

வடிவா சமைக்கத் தெரிந்தும் சமைச்சு கொடுக்கவில்லை

இனி சமைச்சுக் கொடுக்கவேணும் மேசை யில் அதுகள் இருந்து சாப்பிடும் போது நிறையக் கதைக்கவேணும் என்று எவ்வளவு... எவ்வளவு ஆசைகள் மனதில் நிறைஞ்சு மிதந்து கொண்டிருந்தது.

முன்பெல்லாம் “எப்ப அப்பா உங்களுக்கு நேரம் இருக்கும்” என்று மகன் கேட்டிருக்கிறான் இதை எல்லாம் நிறைவேற்றவேணும் என்ற கனவுகளோடு இருந்த நான் எல்லாம் போச்சு.

“எங்கட காலத்தில் சொந்த நாட்டில் வாழ முடியாத நிலை வந்த போது எங்காவது கண் காணாத நாட்டுக்கு ஓடிவிட வேண்டும் என்று படாதபாடு பட்டு இந்த நாட்டில வந்து இறங்கி சொல்லொணாத் துன்பங்களுக்கு மத்தியில் ஒரு நிரந்தர வேலையை எடுத்து, தங்காவைக் கல்யாணம் கட்டி இரண்டு பிள்ளைகளையும் பெற்று வளர்த்து நிமிர்ந்த போது வயதும் 65 தொட்டு இப்ப நிற்கிறேன்”.

மனைவி தங்கா சமைக்கிறாள். மேசை யில் சாப்பாடு இருக்கு நல்லாப் போட்டுச் சாப்பிடுகிறேன். தோட்டத்தில் வேலை செய்யிறன், நாயைக் குளிப்பாட்டி அதன் கழிவுகளை எல்லாம் துப்பரவு செய்து, நாயை நடக்கக் கொண்டு போய்வாறன். மூன்று பேரின்ர கார்களையும் கழுவி வைக்கிறன். குசினி, குளியல் அறை எல்லாவற்றையும் சுத்தமாக வைக்கிறன். மனைவி உடுப்புக்களை துவைத்துக் காயப்போட நானே அதனை எடுத்து மடித்து சில நேரம் அயன் பண்ணியும் வைக்கிறேன். “தந்தையர் தினத்துக்கு” வெளி யில கூட்டிக்கொண்டு போய் சாப்பிடுறம்.

“அப்பா ...என்ன பிரச்சனை. எல்லாம் ஒழுங் காத்தானே இருக்கு. நாங்களும் சந்தோசமாக இருக்கிறோம். அப்பா உங்களையும் சந்தோச மாகத்தானே வைத்துப் பார்க்கிறோம்.” இரண்டு பிள்ளைகளும் என்னைப் பார்த்துக் கேட்குதுகள்.

அது நியாயம்தான் ஆனால் இதுவா வாழ்க்கை, இது பிழைப்பு. சில நிமிடங்களாக இருந்தாலும் வாழ்க்கையை வாழ்க்கையாக வாழவேணும் என்பது எனது வாதம்.



**ஆவூரான்**
**(அவுஸ்திரேலியா)**




# “யாரோடு தான்”



“வாழ்க்கை வாழ்வதற்கே”

எனக்கு இது….. இது கொடுமை. எப்படி நான் இதில் இருந்து விடுபடுவன். ஏன் மற்ற வர்கள் போல நானும் மாறக் கூடாது.

“என்னப்பா உங்கிட பிரச்சனை?”

இந்தக் கேள்வியை இவ்வளவு நாளும் பிள்ளையள்தான் கேட்டுக் கொண்டிருந்தார்கள். இன்று மனைவியும் கேட்டுப்போட்டாள்.

பிள்ளையள் காதுக்குள்ள கெட்போன் போட்டுக் கொண்டு படிக்கிறம் எண்டு சொல் லுங்கள். கிட்டப் போய்க் கேட்டால் சினிமாப் பாட்டுக் கேட்கும். அந்த நேரம் மகனிட்டையோ, இளைய மகளிட்டையோ ஏதும் கேட்டால்

“இப்ப ஏனப்பா கத்துறியள்” என்று என்மீது பாயுங்கள். யாரோடும் கதைக்க முடியவில்லை. யாரும் என்னோட கதைக்குதுகளும் இல்லை.

நாங்கள் யாரு கதைச்சுக் கதைச்சு காலம் கடத்திய வரலாற்றுப் பரம்பரை.. வரலாற்றை கடத்திக் கொண்டு போக வேண்டி நான் யாருமே என்னோடு கதைக்காட்டி எப்படி இருக்கும்.

“தங்கா… தங்கா… தா..ங்..கா”

குசினிக்குள் சமைத்துக் கொண்டிருந்த மனைவி தங்காவை கூப்பிட்டுக் கூப்பிட்டுப் பார்த்தன் ஒரு பதிலும் வரவில்லை என்பதால் போய் எட்டிப் பார்த்தால், நீங்க நம்பமாட்டீங்க மனைவி தங்காவும் காதில ஹெட்போன் போட்டுக்கொண்டு ஏதோ நாடகமோ ஏதோ பார்த்துச் சமைக்கிறாள்.

நான் கூப்பிட்டதற்கு பதில் வராததால் அவளைத் தொட்டு கதை கேட்டுப் போட்டேன்.

உடன ஒரு பாய்ச்சல் பாஞ்சு “என்னப்பா உங்கிட பிரச்சனை” எண்டு கேட்டுப் போட்டாள்.

அவள் கேட்டதும்தான் நான் சரியா உடைஞ்சு மனம் பதறி மேலெல்லாம் நடுங்கிப் போனன். இந்தப் போன் வந்தது பிரச்சனை இல்லை இந்த ஹெட்போனைக் கண்டு பிடித்ததுதான் பிரச்சனை. எல்லாக் கெற் போணையும் எடுத்து உடைச்சு அடுப்பில போட்டா என்ன எண்டுதான் மனதில தோன்றிக் கொண்டிருக்கு.

நான் என்ன கதைக்கப் போனேன் என்று ஒரு கேள்வியும் கேட்காமல் “இந்தாங்கோ வெயிலுக்கு நல்லம் குடியுங்கோ”

எண்டு எதையோ கொண்டு வந்து தந்தாள். இதைத் தான் youtubeஇல் பார்த்து செய்தவள் போல கிடக்கு.

தோட்டத்தில உள்ள பெரிய கருகப்பில மரத்தோட நான் கதைச்சு அந்த மரமே அடியோட பட்டும் போச்சுது. அதோட நாயோடையும் கதைச்சுக் கதைச்சு நாய்க்கு நல்லாத் தமிழ் புரிஞ்சு போச்சு. நல்ல வெய்யில்தான் அடிக்குது

வெளியில நானும் போக பக்கத்து வீட்டு கிறீஸ் நாட்டுப் பொம்பிளப் பிள்ளை 2 வயதுப் பிள்ளையையும் கொண்டு நடக்கப் போக வெளிய வந்தாள். அந்தப் பிள்ளையோட கொஞ்சம் பேசலாம் என்ற ஆவல் மேலோங்க ஆர்வமாக நடந்து முன்னுக்கு வந்தால்,

ஐயோ அந்தப் பெட்டையும் காதில ஹெட் போனை போட்டுக் கொண்டு குழந்தைப் பிள்ளையின் காதிலையும் ஹெட்போன் போட்ட படி வண்டிலுக்குள் இருந்து iPad ஐ பார்க்கத் தொடங்கிற்று. பின்னாக வந்த நாயின்ர காதை எட்டிப் பார்த்தேன் என்ன கொடுமை

“நாய்க்குகூட கெற்போண் மாரித்தான் ஏதோ போட்டிருக்கு?

அடா கொடுமைய வாயில கைவைச்சு நிமிருறன். மகள் தான்..

“அப்பா…. அப்பா…. வாங்கோ அம்மா சாப்பிடக் கூப்பிடுகிறா” என்று மகள் கூப்பிட நானும் ஆவலாக மேசைக்குப் போய் எல்லோ ரோடையும் சேர்ந்து பேசிக் கதைத்துக் கொண்டு சாப்பிடுவம் என்று மேசையில் இருந்தால், மகள் மடிக் கணினியுடனும், மகன் iPad உடனும், மனைவி யாருடனோ போனில் chat பண்ணிக் கொண்டும் சாப்பிடத் தொடங்கினார்கள். எனக்கு கோபம் தலைக்கேறித் தாண்டவம் ஆட

“எல்லாத்தையும் நிப்பாட்டுங்கோ சாப்பிட வந்த இடத்திலையும் கெற்போண் போட்டுக் கொண்டு சாப்பிட்டா என்ன சாப்பிடுறம், என்ன கோப்பையில் இருக்கு எண்டு தெரியாமல் சாப்பிட்டுக் கொண்டு போறியளே” நான் கத்திக் கொண்டு எழும்பி வெளியில போகிறேன்.

“அப்பா உங்களுக்கு என்னப்பா பிரச்சனை”? என்ற வார்த்தைகளுடன் பிள்ளைகளும் எழும்பி அவரவர் அறைகளை நோக்கிப் போய் விட்டார்கள்.

“வடிவாகச் சமைத்து வைக்க அதைச் சாப்பிடாமல் செய்து போட்டியளே….” என்று மனைவி சொன்னதும் நானும் மனங் கசிந்து தான் போனேன். கவலையாயும் போச்சுது.

“அம்மா… அப்பாவைக் கூட்டிக் கொண்டு போய் சீனியர் சிற்றிசன் ஆட்களோடு சேர்த்து விடுங்கோ. அங்க சாம் அங்கிளைப் பார்த் தாவது திருந்தட்டும். சாம் அங்கிள் எப்படி துள்ளிக் குதித்துக் கொண்டு சந்தோசமாக இருக்கிறார். அவரோட சேர்த்துவிடுங்கோ” என்று சொல்லிக்கொண்டு மகள் வெளியே வந்தாள்

நான் இவ்வளவு நாளும் குதிரைக்கு கண்ணைக் கட்டி விட்டமாதிரித்தான் இருந்திருக் கிறேன். வேலை, வேலை முடிய வீடு, அதன் பின்பு சாப்பிட்டுவிட்டு TV பார்த்துவிட்டுத் தூங்குவது. ஒரு இயந்திர வாழ்வுதான் வாழ்ந்திருக்கிறன் என்பது அப்ப புரிஞ்சுது.

“அப்பா வாங்கோ கடைக்கு போய் வரு வோம் என்று மகள் கேட்டாள் நானும் சந் தோசமாக காரில ஏறி இருந்து கொண்டு “மகள் மன்னிச்சு கொள்ளுங்கோ மதியம் சாப்பிடும் போது நான் கொஞ்சம் கோவப்பட்டுப் போனன்” நான் கதைக்க ஆரம்பிக்கிறன் பார்த்தா அவள் தலையை ஆட்டுறாள்.

அது எனக்கில்லை அவள் மற்றக் காதில போட்டிருக்கிற கெற்போணில கேட்கிற பாட்டுக்கு என்பது நான் எட்டிப் பார்த்த போது தான் தெரிந்தது.

**கேள்வி:** சிறுகதை இலக்கியப் படைப்பில் தங்கள் நோக்கில் தொழில் நுணுக்கங்களாக எவற்றைக் கூறுகிறீர்கள்?

**மௌனி பதில் :** எந்த அம்சம் தொழில் நுணுக்கம் என, நான் என் சிறுகதைப் படைப்பில் கையாண்டேன் என்பது சொல்லும் வகைக்கு தெளிவாக உணர்வு கொள்ளவில்லை. ஆனால், ஒன்று சொல்லலாம் என நினைக்கிறேன். எதைச் சொல்கிறோம் என்பது, எப்படிச் சொல்லுவது என்ற உணர்வுடன் கலந்து உருவாவதுதான் இலக்கியம். ஒன்றைவிட்டால் இரண்டும் கெட்டு ஒன்றுமே இலக்கியம் எனும் தோற்றம் உண்டாகாது.






– மௌனி

## பகலவன்

உலகம் உய்ய  ஒளிதந்து
பகல் முழுக்க தகதகத்து
கண்கூசும்‘நிர்வாணம்’!
இப்பமட்டும்
மஞ்சள் முகில் துகிலால்
அல்லாடை தானணிந்து
குடதிசையில் பதுங்குவதேன்?
பதுங்கவில்லை
உலகம் உருண்டையப்பா
மறுபக்க மாந்தரையும்
மலர்விக்கப் போகிறேன்பா
பகன்றான் பகலவன்

## சுனாமி

கரை தொட்ட அலை
கடுப்பில் இருந்தது
அடுப்பில் கொதிக்கும்
உலையாய் இருந்தது
நிரை நிரையாய் வந்து
நித்தமுனை முத்தமிட்டேன்
ஆனால் நீ.....?
கரிசனை இல்லாக் கரையே
கரைந்து விடு
சத்தமிட்டுக்
குத்தி முறிந்தது அலை

**செல்லையா சுப்ரமணியம்**

மகள்தான் கையை நீட்டி வெளியில் பார்க்கச் சொல்லி சைகை செய்யிறாள். வெளியில பார்த்தா.. நான் திடீர் என்றுதான் இந்த உலகத்தைப் பார்க் கிறன்போல. நூற்றுக்குத் தொண்ணூறு வீதமான வர்கள் ஹெட்போன் போட்டிருக்கிறார்கள், தனியப் பேசுகிறார்கள் தலையை ஆட்டிக்கொண்டு போகி றார்கள், தனிய நின்று கையை மேலையும் கீழயும் காட்டி ஆட்டிக் கதைக்கிறார்கள் பெரிதாக வாய் விட்டுச் சிரிக்கிறார்கள்.

என்றோ பார்த்த சார்ள்ஸ் வாத்தியாற்ர நாடகம் மாதிரி இருக்குது.

இப்படியே நானும் இருக்கேலாது.  இது ஒரு புதிய உலகம்  இந்தக் காட்டுக்குள் வழி தவறி வந்தவன் மாதிரி. நான் நின்று கொண்டு  இருக்கிறன் இப்படி இருக்க முடியாது நானும் மாறவேண்டும். முடியுமா?..

இந்த நவீன உலகம் அபாரமான வளர்ச்சி யில் நிற்கும்போது நானும் என் போன்றோரும் மூடத்தனமான எதிர்வாதங்களையும் அடாவடித் தனங்களையும் செய்து மாற்றலாம் என்று ஒரு காலைத் தூக்குவது கவிஞர் வாலி சொன்ன மாதிரி “எல்லோரும் அம்மணமாக நிற்கும்போது நான் மட்டும்….. ”

ஆனால் இதை எதிர்த்து இதில் இருந்து விடுபட்டு தனிய எல்லோரும் ஒரு நிலைக்கு வரவேண்டும் என்ற புதிய பிரதிவாதக் கருவூலம் உருவாகும் அப்போ,,,,,

சங்கரின் திரைப் படம் மாதிரி, அப்படி ஒரு நிலையை எண்ணிப் பார்த்து மனதுக்குள் சிரிக்கிறன்.

ஒரு கடையின் முன்னால். காரை. நிறுத்தி எனக்கொரு ஹெட்போன் வாங்கிக் கொண்டு வந்து தந்தாள் மகள். என்ர போனில் இருந்து ஏதோ செற் பண்ணி விட்டு காதில் போட்டு விட்டாள்.

என்ர போனில் இருந்து
“காதோடுதான் நான் பாடுவேன்
மனதோடுதான் நான் பேசுவேன்”

என்ற அருமையான பாடல் ஒலிக்க மகள் நிதானமாக கரை ஓட்டிக் கொண்டிருந்தாள்.

பாடல் முடியவும் வீடு வந்து சேர்ந்ததும் மனைவி ஓடிவந்து எட்டிப் பார்த்து வாயில கை வைத்து. நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டு உள்ளே போய் கைப் பெருவிரலைத் தூக்கி மகனுக்குக் காட்டிக் கொண்டு போகிறாள் நான் இன்னொரு பாட்டுக் கேட்க போனை எடுத்துப் பார்க்கிறேன்.

❍❍❍

மெஜிக்கல் ரியாலிச சிறுகதை



# பிரபஞ்ச இரகசியம்



கலாபூஷணம்
திருமலை வீ.என்.சந்திரகாந்தி

சிறுவயது முதலே நான் மிகவும் சுறு சுறுப்பானவனாக இருந்த ஞாபகம் என்னை இப்போதும் மகிழ்ச்சி கொள்ள செய்யும். எனது நினைவாற்றலும் அன்று போலவே என்னை மகிழ்ச்சியின் எல்லைக்கோ அல்லது கவலையின் அந்தத்திற்கோ இட்டுச்செல்வதை என்னைச் சார்ந்த வர்களும் உணரவே செய்வார்கள்.

எனது பேரப்பிள்ளைகளான அகிலா மற்றும் “கிலா இரட்டைக் குழந்தைகள். அவர்களுக்கு அடிப்படை ஆங்கில அறிவை பாடசாலையின் 10ம் வகுப்பிற்கு கிஞ்சித்தும் குறைவில்லாமல் எளிதில் புரியும்படி புகட்டுவேன்.

அதை தவிர நான் கவலைப்படும் படியாக.. எனது வயதின் முதிர்ச்சியை வெளிப்படுத்தும் சம்பவங்களாக நான் எனது அனுபவங்களை ஒரு ஞாபக மறதியாக திரும்ப திரும்ப மற்றவர்களுக்கு வெளிப்படுத்துவதை அவர்களே சுட்டிக்காட்டும் போது நான் அசூயை அடைவேன்.

எனது ஆரோக்கியம் பாராட்டும் படியாக இருந் தாலும் என்னை ஒரு தளர்வு தள்ளாட வைப்பதை நான் மற்றவர்கள் உணராதவாறு சமாளித்துக் கொண்டிருந்தேன்.

இரவில் பத்து மணித்தியாலத்திற்கு அதிகமான நேரம் தூக்கத்தில் செலவிடுவேன். ஆனால் நாளை ஏதாவதொரு பொறுப்பான கடமை அல்லது சம்ப வத்துக்கு முகம் கொடுக்க வேண்டி இருந்தால் எனது ஆழ்ந்த தூக்கத்திற்கு பங்கம் உண்டாகும்... எனது செயற்றிறனை வைத்து என்னால் இலகுவாக அதனை நிறைவேற்றிக்கொள்ள முடியும் என்று நம்புகின்ற வேளையில் நல்ல தூக்கம் என்னை ஆட்கொண்டுவிடும்..

கடந்த 18 வருடங்களாக நான் (அரச பணி நிமித்தம் ஆற்றிய சேவைக்காக) ஓய்வூதியம் பெற்றுக்கொண்டிருந்தாலும், அந்த வருவாயும் செலவும் ஒன்றை ஒன்று கொஞ்சிக்குலாவி கொண்டுதான் இருந்தன...!

எனது மகன் எனக்காக ஒரு மடிக்கணனியை வாங்கி வழங்கியிருந்தான். அதிகாலை தியானம் நிமித்தம் எனது தூக்கம் கலையும் போது மடிக் கணனி எனக்கு அதிகம் கைகொடுத்தது!

தூக்கத்திலும் சரி... தியானத்திலும் சரி... மடிக் கணனியை பார்வையிடும் போதும் சரி இரண்டு விடயங்கள் எனக்கு உறுத்தலாக இருந்தன... ஒன்று இந்த பிரபஞ்சத்தின் அவிழ்க்க முடியாத முடிச்சுக்கள்... இரண்டாவது கருந்துளையின் மர் மங்கள்...! மற்றும் சக்திகள்!

பிரபஞ்சம் என்றால் பால்வெளி.. சூரியன்.. நட்சத்திரம்.. உபகோள்கள்.. கோடிக்கணக்கான விண்கற்கள்.. எரிகற்கள்.. நட்சத்திரங்கள் என இவையனைத்துமே எமது அறிவுக்கும் கற்பனைக் கும் அப்பாற்பட்டு விரிந்து பரந்துள்ளதை நான் அறிந்தே இருந்தேன்!

ஒளியின் வேகத்தை காட்டிலும் பெரு வெடிப்பின் விரிவின் வேகத்துக்கு ஆகாயம் ஈடுகொடுப்பது எங்ஙனமோ என்று நான் வியப்பேன்..

நாம் வாழும் பூமியில் உள்ள மனித இனங்களை பிரபஞ்ச உடுக்களுக்கு ஈடாக கற்பனை செய் வேன்.. அமெரிக்கர், பிரித்தானியர், ஜப் பானியர், சீனர், நீக்ரோ, மொங்கோலியர், எஸ்கிமோவினர், இந்தியர், மலேசியர், இந் தோனேசியர்... இன்னும் இன்னும் என்று நீண்டு கொண்டே போகின்றதல்லவா...

அப்படியாயின் பிரபஞ்சத்தில் உள்ள ஒளியைக் கூட விழுங்கிவிட கூடியதான கருந் துளைகளை எவருடன் ஒப்பிடக்கூடும்?

ஏன் இருக்கவே இருக்கின்றார்கள். மானிட சமுதாயத்தின் கேட்டுக்கே வித்தான போதைப் பொருள் கடத்தல்காரர்கள்!

"தாத்தா, தாத்தா'' என்ற சொல்கேட்டு விழிப்புணர்வு அடைந்தேன்... எனது மகள் வழிபேரன்கள் இருவரில் ஒருவராக இருக்கலாம் என்ற எனது எண்ணம் சரியாகத்தான் இருந்தது..

"கபிலன்.. என்ன விஷயம் சொல்லுங்கோ..'' நான் வினவினேன்

சந்தேகம் என்று வந்துவிட்டால் அவர்கள் இருவருமே அவர்களது அம்மா அப்பாவிடம் வினவமாட்டார்கள்...

அதே சமயம் அவர்களது சந்தேகங்கள் ஆசிரியர்கள் மூலமாகவோ பாடநூல்களூ டாகவோ தீர்க்கமுடியாதவைதான் !

இப்போ கபிலன் பேசினான்..

"தாத்தா இந்த பிரபஞ்சத்திலேயே அதிக ஆச்சரியமானது எது? சொல்லுங்கோ தாத்தா..."

இந்த சிறுவனிடம் தோன்றிய இந்த கேள்வியே ஆச்சரியமானதுதான். அதை நான் அவனுக்கு கூறி அவன் சமாதானமாக போவ தில்லை என்பதை நான் அறிவேன்!

எனது மனம் சுழன்றது. பிரபஞ்சமே சுழன்று கொண்டுதானே இருக்கின்றது! சிந்தித்தேன்.. சில உண்மைகளை வரையறுத்துக் கொண் டேன்.. பின் கூறினேன்..

"கபிலன்.. எனக்கு தற்சமயம் மனதை உறுத்தும் இரண்டு விடயங்களை உனக்கு சுட்டிக்காட்டுகின்றேன். ஒன்று இந்த எல்லையற்ற பிரபஞ்சத்தில் பூமி அமைந்துள்ள வதிவிடம்... இரண்டாவது பூமியில் உயிரினங்கள் என்ற வகையில் இலட்சோப இலட்சம் கருக்களின் வகிபாகம்..."

நான் நிறுத்திக்கொண்டேன்..

கபிலன் வினாவினான்..

தாத்தா "பிரபஞ்சத்தின் விரிவும் எல்லை யற்ற கால நீடிப்பும்தான் ஆச்சரியத்திற்கு காரணமா?"

நான் விடையிறுத்தேன்..

"இல்லை.. எமது ஆச்சரியத்திற்கு காரணம் மனம்தான்! எம்மால் முப்பரிமாணத்தை மட்டும் தான் உணரவும் சிந்திக்கவும் முடியும்.. நாற் பரி மாணத்தையோ அதற்கு அப்பாலோ எம்மால் சித்திக்க முடியாது! செயற்படவும் முடியாது!"

கபிலன் தலையை பக்கவாட்டில் ஆட்டியபடி சிரித்தான். அதன் பொருள் ஆம் என்பதா இல்லை என்பதா என்பது புரியவில்லை!

எனது வயதின் உச்சத்திலும்... மேலும் மேலும் எனக்கு 'போனஸ்' வருடங்கள் தொடர்ந்து கிடைப்பதற்கு காரணம் என்னில் தனது உயிரை வைத்திருக்கும் மனைவி... எனது பாசமிகு மகன்.. மகள்... இருவரது ஒழுக்க மும் நற்பண்பும்... அவர்களுக்கு ஏற்றால் போல் எனது மருமகன், மருமகள்... என்னை மாமா என்று பார்க்காமல் தந்தையாக கருதும் அவர்களது பாசம்... எனது பேரன்மார்கள் இருவர் பேத்திமார்கள் இருவர்...என்னுடன் செல்லம் கொஞ்சி மகிழும் அவர்களுடைய என் மேலான பாசம்...

பலருக்கும் கிடைக்காத ஏதாவதுதொன்று உங்களுக்கு கிடைத்தால் நீங்கள் மகிழ்ச்சியில் துள்ளி குதிக்க மாட்டீர்களா?

இன்று எனக்கு அப்படி ஒரு வரம் கிடைத் திருக்கின்றது. எனதும் மனைவியினதும் ஐம்ப தாவது திருமணநினைவு வைபவம் இன்னும் சில மாதங்களில் அண்மிக்கவுள்ளது...

எனது அனைத்து சொந்தங்களுடனும் இணைந்து அந்த நாளை மகிழ்ச்சியாக பயன் தரும் வகையில் கொண்டாடவேண்டும்.

பூமியில் ஈர்ப்பு விசைக்கு அப்பால் நாசாவின் 'வெப்' தொலைக்காட்சி விண்வெளியில் 360பாகையில் நிலைநிறுத்தப்பட்டதன் பயனாக



அது காலப்பயணம் செய்து எமது பூமியில் டைனோசர்கள் வாழ்ந்தமையை 'வீடியோ' பண்ணிக்காட்ட முடியுமாயின் சில தசாப்தங்கள் என்னுடன் வாழ்ந்து கொண்டாடி உறவு பூண்டு மறைந்த எனது சொந்தங்களை ஏன் நினைவு கூர முடியாது...?

இந்தியா எம் மக்களுக்கு உதவி செய்யப் போவதாக உறுதி சொல்லி அமைதிப்படை என்ற பெயருடன் வந்த காலம்...

காங்கேசன் துறையில் இருந்து இந்திய இராணுவத்தினரால் ஏவப்பட்ட எட்டு ஏவு கணைகள் அச்சுவேலி பிரபல குமாரசுவாமி குருக்களின் காணியில் தஞ்சம் புகுந்த எனது அக்காவின் உயிரையும் மருமகளின் உயிரையும் அந்த இடத்திலேயே காவு கொண்டது.

துன்பகரமான இந்த நினைவலைகளிலிருந்து விடுபட்டால்தான் என்னால் எனது ஐம்பதாவது திருமணநாளை மகிழ்ச்சியாக கொண்டாட முடியும் என எனது உள்ளுணர்வு உறுத்தியது...

எனது மனைவி கொண்டாட்டங்களில் அதிகம் ஆர்வம் காட்டுபவளல்ல... ஆனால் எதனையாவது சாதிக்கவேண்டும் என்று தீர்மானித்துவிட்டால் யாராலும் விஞ்சவும் முடியாது!

ஏனைய நகரங்களில் போலவே எங்கள் நகரிலும் 'கார்கில்ஸ் பூட் சிற்றி' அமைந்திருந்தது. இது ஒரு பல்பொருள் அங்காடி...

எங்கள் வீட்டுத்தேவைகளை எல்லாம் சிக்கனமான முறையிலும் உயர்தரத்துடனும் வழங்க அந்த நிறுவனத்தால் முடியும்.

ஓரிரு தினங்களில் நடாத்தப்பட இருக்கும் எமது திருமண நினைவு நிகழ்வுக்கு தேவையான பொருட்களுக்கு பட்டியல் ஒன்றை போட்டுக் கொண்டோம். குளிர்சாதன பெட்டியில் வைத்து பராமரிக்கவேண்டிய சமையல் வகை களை அன்றைய தினமே வாங்குவதென தீர்மானித்துக்கொண்டோம்.

நாங்கள் சொந்த கிராமத்திலிருந்து தொழில் நிமித்தம் இந்த நகருக்கு இடம் பெயர்ந்திருந்தாலும் வசதியான வீடுகளை கட்டியிருந்தோம்...

கொண்டாட்டத்தை எமது குடும்ப அங்கத்தவர் களுக்குள்ளேயே வரையறுத்துக்கொண்டோம்...

நண்பர்களை தவிர்த்தோம்...

எனது உடன் பிறந்த சகோதரி வெளிநாட்டில் வசிக்கிறாள் தொலைபேசியில் இடைக்கிடையே கதைப்பாள்... ' மெசேச்' போடுவாள். அவளுக்கு முகநூல் இல்லை.. ஆனால் 'வட்சப்' இருந்தது. அதையும் அண்மையில் அநாவசியப் பிரச்சனை என்று மூடிவிட்டாள்!

உடன் பிறந்த தம்பி ஒருவன் வெளி மாவட் டத்தில் வசிக்கிறான்... குடும்ப கட்டுப்பாட்டை கடைப்பிடிக்கவில்லை... எனவே ஆடம்பர வாழ்க்கைக்கு வருமானம் போதுமானதாக இல்லை!

அவனுக்கு மூத்த சகோதரன் வெளிநாட்டில்..! அவனது ஒரே சிந்தனை தனது ஒரே மகளுக்கு வயது ஏறுகின்றதே... என்பதே!

எனது மனைவிக்கு தெரியும் எங்கள் குடும்ப உறுப்பினர்களுக்கு எது பிடிக்கும் எது பிடிக்காது என்பது.

‘சிக்கன் பிரைட் ‘ரைஸ்’ முதல் ‘ஐஸ்கிறீம்’ வரையான உணவு வகைகள் என தீர்மானிக் கப்பட்டது.

திருமண திகதியை அச்சொட்டாக தெரிவு செய்யாமல் அண்மித்த விடுமுறை நாளை தெரிவு செய்தோம்.

காலை முதல் மாலைவரை பேரப் பிள்ளைகள் மருமகள் என்று அனைவரும் சேர்ந்து பழகுவதற்கும் அது இடமளித்தது…

அன்றைய தினமும் மலர்ந்தது… மரு மக்களும் மகளும் மனைவிக்கு ஒத்தாசையாக அனைத்து செயற்பாடுகளிலும் முன்னின்று உழைத்தார்கள்…

எனது பேரப்பிள்ளைகள் நால்வருமே வாழும்கலை அமைப்பில் பயிற்சிகள் பல பெற்றிருந்தார்கள்… ‘ரெய்க்கி' என்று ஒரு சுகப்படுத்தல்முறை இருக்கின்றது. நானும் மனைவியும் கூட அந்த பயிற்சியை எடுத் திருந்தோம். முதலாம் தீட்சை, இரண்டாம் தீட்சை இரண்டும் எமக்கு ஆசானால் வழங்கப்பட்டது…

தீட்சை பெற்று சில வாரங்களிலேயே எனது உள்ளங்கைகள் இரண்டிலும் பிரபஞ்சம் தோற்றம் காட்டியது….

‘சோ…கு…ரேய்’ என்பது மூன்று சிம்பல்களில் முதலாவது. சுய சுகப்படுத்தலுக் கும் எதிரில் இருப்போரின் சுகப்படுத்தலுக்கும் இசைவானது இரண்டாம் மூன்றாம் ‘சிம் பொல்லை’ தெரிந்திருந்தால் தொலை தூர சுகப்படுத்தலும் முடியும்!

மதியம்…. அனைவரும் மேசைக்கு வந்து விட்டார்கள்…! மனைவி, மகள், மருமகள் மூவருமே விரைந்து பரிமாறினார்கள்… ஒரே மகிழ்ச்சி…

காரம் சற்று அதிகம் போலும்… பிள்ளை களின் கண்ணாலும் மூக்காலும் நீர் சிந்தியது.

ஐஸ்கிரீம் அதற்கு பரிகாரமானது…

பெண்கள் பாத்திரங்களை கழுவி ஒதுக்கிய பின்னர்தான் சாப்பாட்டில் கைவைத்தார்கள்… என்னே எங்கள் கலாச்சாரம்!

பேரப்பிள்ளைகள் என்னை சுற்றி வளைத்துக் கொண்டார்கள்.. கேள்விகளுக்கு மேல் கேள்வி கேட்டு தங்களது சந்தேகங்களை தீர்த்துக் கொண்டார்கள்...

கபிலன் மட்டும் சற்று யோசனையுடன் ஒதுங் கியிருந்து அவதானித்துக் கொண்டிருந்தான்..

‘ரெய்கி’ பற்றி விளக்கங்கள் கேட்டான்.. பிரபஞ்சம் பற்றி அதிகம் சிந்திப்பவன் அல்ல அவன்.. எனது கைகளுக்குள் பிரபஞ்ச சக்தி வருகின்ற தென்பதும் அதன் மூலம் சுகப்படுத் தலையும் ஆசியையும் வழங்கலாம் என்பதும் அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது..

முன்னர் ஒரு தடவை பிரபஞ்சத்தில் எதெல்லாம் ஆச்சரியம் என்று அவன் வினவிய போது.. நான் பூமியின் வகிபாகமும் உயிர்களின் தோற்றமும் என பதிலிறுத்திருந்தேன்..

அப்போது அவன் பக்கவாட்டில் தலை அசைத்து சிரித்தமை எனக்கு நினைவுக்கு வந்தது.. அப்போது அவன் ‘ஆம்’ என்கின்றானா ‘இல்லை’ என்கின்றானா என்பது எனக்கு புரியாமல் இருந்தது!

இப்போ அவன் அந்த சந்தர்ப்பத்தை நினைவு கூர்ந்தான்..

“தாத்தா இப்போ சொல்லுங்கோ.. உலகில் ஆச்சரியமானது எது?”

பேத்திமார் உட்பட அனைவருமே என்னை யும் அவனையும் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்..

அவனது நினைவாற்றலை கண்டு உள்ளூர மகிழ்ந்தேன்.. பின் விடையிறுத்தேன்..

‘கபிலன்’ அணு முதல் அண்டம் வரை மட்டுமன்றி தொலைவில் உள்ள நட்சத்திரங்கள் பால் வெளிகள், கருந்துளைகள் இவற்றில் ஏற்படும் மாற்றங்கள்.. நிகழ்வுகளை விளங்கி கொள்வது வரை மனித மூளை காட்டியுள்ள, வெளிப்படுத்தியுள்ள திறமைகள் வியக்கத் தக்கவை !

கபிலன் முகம் வெளித்தது.. ஆனந்தக் கண்ணீர் பிரவாகித்தது.. எழுந்து என்னை நோக்கி ஓடிவந்தான்.. என்னை இறுகக் கட்டிப் பிடித்து அணைத்துக்கொண்டான்.

அன்று ‘ஆம் என்கின்றானா’ இல்லை என்கின்றானா என்று புரியாமல் தடுமாறினேன்..

இன்று என்னில் தடுமாற்றங்கள் இல்லை

அவன் ‘ஆம்’ என்றுதான் சொல்கின்றான்!




# மது

**கார்குழலி** (சென்னை - தமிழ்நாடு)

அந்திசாயும் நேரம் ஓட்டமும் நடையுமாக வீட்டை நோக்கி போய்க் கொண்டிருந்தாள் கிருஷ்ணவேணி. அவள் முன் நெற்றியில் வகிடிற்கு இரண்டு பக்கமும் இருந்த நரை முடிகள் அவள் வயது நாற்பத்தைந்துக்கு மேல் இருக்கும் என்பதை நமக்கு உணர்த்தியது. வழியில் இவளைப் பார்த்த பங்கஜம்,

“என்ன வேணி உன் மகளும் மருமகனும் வந்திருக்கிறாக போல, இப்ப என்ன கேக்க வந்திருக்கானோ? போ போ என்னைக்கு உனக்கு விடிவு காலமோ” என்று அலுத்துக்கொண்டாள்.

கிருஷ்ணவேணி பதிலொன்றும் சொல்லாமல் வீட்டைநோக்கி விரைந்தாள். வீட்டை நெருங்கும் போதே மனசெல்லாம் பட படவென அடித்துக் கொண்டது. புருஷன் செத்து 15 ஆண்டுகள் ஆகிவிட்டது. கல்யாணமாகி ஐந்து ஆண்டுகள் ஆகியிருந்த நிலையில் குடிப்பழக்கத்துக்கு அடிமையான அவள் கணவன் மஞ்சக்காமாலை வந்து போய்ச் சேர்ந்து விட்டான். கையில் ஒரு குழந்தையும் வயிற்றில் ஒரு குழந்தையுமாக நிர்க்கதியாக நின்ற அவளுக்கு அவள் மட்டுமே துணை. பிறந்த வீட்டிலும் எந்த ஆதரவும் இல்லாததால், தன் குழந்தைகளை வளர்க்க பக்கத்திலிருந்த அரிசி மில்லில் வேலை பார்த்து வயிற்றைக் கழுவினாள். பிள்ளைகள் பெரிதாக வருமானம் பத்தாததால் இடையிடையே காட்டு வேலைக்கும் சென்றாள்.

மூத்தவள் மல்லி அவளுக்குத் திருமணமாகி மூன்று ஆண்டுகள் ஆன நிலையில் 30 தடவையாவது மூக்கைச் சீந்திக் கொண்டு வந்திருப்பாள். நல்ல இடமென்று புரோக்கர் சொன்னதை நம்பி மகளைக் கட்டிக் கொடுத்தாள். அவனும் ஒரு அலுவலகத்தில் பியூனாக வேலை பார்த்தான். ஆயினும் அந்தப் பாழாய்ப்போன குடிப்பழக்கம் அவனையும் விடவில்லை. அடிக்கொருதரம் உன் அம்மாவிடம் அதுவேண்டும், இதுவேண்டும் வாங்கி வா என அடித்து அனுப்பி விடுவான். இப்பொழுது அவனும் சேர்ந்து வந்துள்ளான். என்ன விசயமாக இருக்கும் என எண்ணிக்கொண்டே வீட்டிற்கு வந்த அவள் வாசலில் குறுக்கும் நெடுக்குமாக நடந்து கொண்டிருந்த மருமகனைப் பார்த்து,

“வாங்க மாப்ள, எப்ப வந்தீங்க? நல்லாருக் கீங்களா? வீட்ல எல்லோரும் எப்படி இருக் காங்க?” என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தாள். அவளை ஏறிட்டுப் பார்த்த கதிரேசன்,

“ம்..ம்.. இருக்கட்டும் எல்லாம் நல்லாருக் காங்க”

என்றான் தெனாவெட்டான பார்வையோடு. உள்ளே சென்ற கிருஷ்ணவேணியைப் பார்த்ததும் மூலையில் அழுதபடி உட்கார்ந்திருந்த மல்லி முகத்தைத் திருப்பிக் கொண்டாள். பக்கத்தில் அழுதுகொண்டிருந்த அவளின் இரண்டு வயது மகனைத் தூக்கிக்கொண்ட வேணி பேரனைக் கொஞ்சியபடி,

“என்ன சாமி பசிக்குதாப்பா இரு பாட்டி பாலாத்தித் தாரேன்”

என்று அடுப்பங்கரைக்குள் சென்று இருந்த பாலில் தண்ணி கலந்து குழந்தைக்கும் மீதமிருப்பதை இருவருக்கும் காப்பி போட்டு எடுத்து வந்தாள். அப்பொழுது வீட்டிற்குள் நுழைந்த மகன் சேகரை,

# எனது பாட்டியின் வீடு

ஒரே ஒரு வீடு
நெடுந்தொலைவில் உள்ளது
நான் அன்பை பெற்ற
அந்த இடத்தில் என் பாட்டி
இன்று உலகில் இல்லை
பாழடைந்த வீட்டில் பாம்புகள்
புத்தகங்களின் மீது தவழ்ந்து செல்லலாம்

அக்காலத்தில் பெரும் குறும்புக்காரனாக
நான் இருந்தேன்
அவ் வீட்டில் எனது இரத்தம்
நிலவின் குளிர்ச்சியாய் இருந்தது

பலமுறை நான் அங்கு
செல்ல எண்ணியிருந்தேன்
திரைச்சீலை வழியாக பார்க்க,
பனி வீசும் காற்றின் ஓசை கேட்க,
தனிமைக்கான இருளின்
ஒரு துண்டை பெற்று வந்து
என் படுக்கை அறை வாசலில்
ஒரு நாய் படுத்திருப்பது போல
படுத்துக்கொள்ள.

புகழ்பெற்ற மலையாள கவிஞை
**கமலா தாஸ்**

சிங்களத்தில்
**ஸ்ரீ பராக்கிரம கொடித்துவக்கு**

தமிழில்
ஸ்ரீ கலாபூஷணம் மாவனல்லை
**எம்.எம்.மன்ஸூர்**



"எங்கடா ஊர்சுத்த போன வீடு தங்காத" என்று கடுமையான குரலில் திட்டி விட்டு,

"இந்தா குழந்தைய எங்கனா வெளில கொண்டு போயி அழுகைய அமத்து"

என்று அவன் கையில் திணித்தாள். சேகர் பத்தாம் வகுப்புவரை படித்து விட்டு பத்தாம் வகுப்பில் பெயில் ஆனதால், வெட்டியாக ஊரைச்சுற்றிக் கொண்டிருந்தான். இதில் வேண்டாத சேர்க்கை வேறு. அவ்வப்போது தம் அடித்து வேணியிடம் மாட்டிக்கொண்டு அடியும் வாங்குவான். அவன் சென்ற பின்பு மெதுவாக மல்லியிடம் சென்று பேச்சை ஆரம்பித்தாள்.

"இப்ப என்னாச்சுடி" என்று கேட்டது தான் தாமதம் மடைதிறந்த வெள்ளமாய் மல்லி புலம்பி அழ ஆரம்பித்தாள்.

"நா என்னத்தச் சொல்ல இவர் குடியினால இருந்த ஒரு வேலையும் போச்சு எனக்குன்னு பாத்து கட்டி வச்சுருக்கியே. இதுக்கு என்ன நீ பாழுங்கிணத்துல தள்ளியிருக்கலாம்" என ஓவெனக் கதறியழுதாள். இதைக்கேட்ட வேணிக்கு மயக்கமே வரும்போல இருந்தது.

"இப்ப என்ன பண்ணலாம்னு இருக்கீங்க"

என்றதும் இதற்காகவே காத்துக் கொண்டு இருந்ததுபோல் அங்கே வந்த கதிரேசன்,

"அதான் அத்த ஒரு மளிகைக்கடை வைக்கலாம்னு இருக்கோம். நீங்க கொஞ்சம் பண உதவி செஞ்சா போதும்" என்று அசடு வழிந்தான். இதைக்கேட்ட கிருஷ்ணவேணிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மல்லி திருமணத்திற்காக இருந்த ஒரு காரை வீட்டையும் அடமானம் வைத்துவிட்டாள். அந்தக் கடனையே இன்னும் கட்டாத நிலையில் இனி எதை வைத்துக் கொடுப்பாள். இந்தக் குடிப் பழக்கத்தினால் எத்தனை குடி கெடப் போகிறதோ என்று தன் நிலையை எண்ணி மனம் வெதும்பினாள்.

○○○

யாழ்ப்பாணப் பொது நூலகம்
தீக்கிரையாக்கப்பட்டதை
(1981ஆம் – ஜூன்)
முன்னிறுத்தி ஜூன் மாதம்
இக்கட்டுரை பிரசுரமாகிறது

# மறைந்துபோன ஈழத்துப் புராணங்கள்

ஞானம் பாலச்சந்திரன்

மறைந்துபோன நூல்கள் பற்றிக் கிடைக்கப்பெறும் சொற்பச் செய்திகளும் தமிழ் இலக்கிய வரலாற்றைச் செம்மைப்படுத்த உதவுகின்றன. மயிலை சீனி. வேங்கடசாமி அவர்கள், மறைந்துபோன தமிழ் நூல்களாக 197 நூல்களைப் பட்டியலிடுகிறார். இப்பட்டியலில் ஈழத்து நூல்களாக 5 மாத்திரமே அடையாளம் காணப்பட்டிருந்தன. இவ்வரிய முயற்சி ஏற்படுத்திய தாக்கம், மறைந்துபோன ஈழத்துத் தமிழ் நூல்களின் விபரங்களைச் சேகரிக்கும் முயற்சிக்கு வித்திட்டது. இப்பயணத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட மறைந்துபோன ஈழத்துத் தமிழ் நூல்களை எம்மால் இதுவரை அடையாளம் காணமுடிந்தது. அப்பட்டியலில் 25 நூல்கள், புராணங்கள் எனும் தலைப்பில் அமைந்தவை. அவை பற்றிய ஓர் அறிமுகத்தை வழங்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வெள்ளிவிழா
ஞானம்
கலை இலக்கியச் சஞ்சிகை
சிறப்புக் கட்டுரை

## 01. கட்டுரையின் நோக்கம்

கிடைக்கப்பெறும் இலக்கிய ஆதாரங்களின் மூலமாகவே **இலக்கிய வரலாறு** கட்டி எழுப்பப்படுகிறது. புதிய ஆதாரங்கள் கிடைக்கப்பெறும்போது ஏற்கனவே எழுதப் பெற்ற வரலாறுகள் செப்பனிடப்படும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**மறைந்துபோன நூல்களின்** வாயிலாக இலக்கிய உலகிற்குக் கிடைக்கப்பெறும் சொற்பச் செய்திகளும் தமிழ் இலக்கிய வரலாற்றைச் செம்மைப்படுத்த உதவி புரிவதைக் காணலாம். இலக்கிய உலகம் எவ்வாறு பயணித்துள்ளது? எவற்றை ஏற்றுக்கொண்டுள்ளது? எவற்றைப் புறக்கணித்துள்ளது? என்பதை ஊகிப்பதற்கு இவை துணைபுரிகின்றன.

நூல்கள் மறைந்துபோனமைக்குப் பல காரணங்களை நாம் பட்டியலிடலாம். கடற்கோள் போன்ற இயற்கை அனர்த்தங்கள், படையெடுப்புகள், நூலக அழித்தல் போன்ற திட்டமிடப்பட்ட செயற்பாடுகள், தனிநபர் கோபதாபங்கள், கொள்கைசார் புறக்கணிப்புகள், 'கள்ள மௌனம்' பூண்டு கண்டுகொள்ளாமை, பாதுகாக்காமை, சமயப்பகை, மூடநம்பிக்கைகள், காலத்தின் புறக்கணிப்பு என இப்பட்டியலில் நீளும்.

ஓர் உதாரணம் காண்போம் : ஈழத்தறிஞர் **கரோல் விஸ்வநாதப்பிள்ளை** (1820 - 1880) எழுதிய **காலதீபிகை** எனும் நூலின் மூல ஓலைச்சுவடிப் பிரதியை, விஸ்வநாதப்பிள்ளையின் மரணத்துக்குப் பின்னர் அவரின் உறவினர்கள் தீக்கிரையாக்கினார்கள் எனும் செய்தியை வாழ்க்கைக் குறிப்புகளில் காணலாம். கத்தோலிக்க சமயத்திலிருந்து சைவ சமயத்துக்கான விஸ்வநாதப்பிள்ளையின் சமய மாற்றம் இச்செயலைச் செய்வதற்கு காரணமாய் அமைந்தது என்பர்.

மறைந்துபோன நூல்கள் பற்றிய சிந்தனைக்கு **மயிலை சீனி. வேங்கடசாமி** அவர்களின் **மறைந்துபோன தமிழ் நூல்கள்** (1959) எனும் நூல் பெரும்பங்கு வகிக்கின்றது. இவர் மறைந்துபோன தமிழ் நூல்களாக 197 நூல்களைப் பட்டியலிடுகிறார். அரியதொரு முயற்சி. இப்பட்டியலில் மறைந்துபோன **ஈழத்துத் தமிழ் நூல்களாக ஐந்து நூல்கள் மாத்திரமே** குறிப்பிடப்பட்டுள்ளன. இருநூல்கள் மாத்திரம் எப்படிச் சாத்தியமாகும், எனும் அருட்டுணர்வு மனதில் உதிக்க, 'மறைந்துபோன ஈழத்துத் தமிழ் நூல்கள்' எனும் ஒரு பட்டியலைத் தயாரிக்கும் முயற்சியில் கடந்த சில வருடங்களாக இயங்கி வருகிறோம். இம்முயற்சியில் **மறைந்துபோன ஈழத்துத் தமிழ் நூல்களாக ஏறத்தாழ 300க்கும் மேற்பட்ட நூல்களின் பெயர்களை** எம்மால் இதுவரை அடையாளம் காணமுடிந்துள்ளது. அவற்றில் மறைந்துபோன ஈழத்துப் புராண நூல்கள் பற்றிய விபரங்களை எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## 02. ஈழத்துப் புராணங்கள்

ஈழத்து இலக்கியப் பரப்பில், புராணங்களின் வகிபாகத்தை துணியும் குறிப்பிடத் தக்க முயற்சியாக **எவ். எக்ஸ். சி. நடராசா**வின் **ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு** (1970) எனும் நூல் அமைகின்றது. இந்நூலில் மொத்தமாக 21 புராணங்கள் நிரற்படுத்தப்பெற்றுள்ளன என்பது கவனிக்கத்தக்கதாகும். நடராசா நிரற்படுத்தியுள்ள 21 புராணங்களில் **6 புராணங்கள் மறைந்துபோன நூல்களாகவும்** 15 நூல்கள் கிடைக்கப்பெறும் நூல்களாகவும் அமைந்துள்ளன. இவற்றை வைத்துக்கொண்டே ஈழத்து இலக்கிய பரப்பிலே புராண இலக்கியங்களின் வகிபாகமானது இக்காலம்வரை முன் நிறுத்தப்பெற்றுள்ளது என்பது கவனத்துக்குரிய விடயம்.

மறைந்துபோன ஈழத்துப் **புராண** நூல்களாக எம்மால் **19 நூல்களை அறுதியிட்டு பட்டியலிடமுடிகிறது**. இவற்றுடன் மேலும் 6 நூல்களை பட்டியலில் இணைத்துள்ளோம். ஆனால், இந்த 6 நூல்களும் 'மறைந்துபோனவை' எனும் வகைக்குள் வைப்பதற்கு தகுதியுள்ளவையா என்பது விவாதத்துக்குரியது. இருப்பினும் இந்த 6 நூல்களின் விபரங்களும் மறைந்து போகக்கூடாது எனும் ஆதங்கத்திலும் அவை இங்கு சேர்க்கப்பட்டுள்ளன.

நூல்களில் இடையிடையே பிரமாணங்களாகக் காட்டப்பெற்றுள்ள **பிரமாண்ட புராணம்**, **வராக புராணம்**, **கதிர்காமப் புராணம்** ஆகியவை தனி நூல்களாக எழுதப்பெற்றவையா அல்லது தேவை கருதி சில செய்யுள்கள் மாத்திரம் மொழி பெயர்க்கப் பெற்றுள்ளனவா என்பதைத் துணியமுடிவில்லை.

**நா. சிவசுப்பிரமணிய சாஸ்திரி**கள் பாடிய **தென்கோயிற் புராணமும் விநாயகசட்டிப் புராணமும்** இன்னமும் ஓலைச்சுவடி வடிவத்திலேயே இருக்கின்றன. இன்னமும் ஓலைச் சுவடிப் பிரதியில் கிடைக்கப்பெறுகின்ற புராணங்களை மறைந்துபோன புராணங்களாக அடையாளப்படுத்துவது தர்க்க அடிப்படையில் தவறானதாகும். இருப்பினும் ஓர் ஏட்டுப் பிரதி மாத்திரம் உள்ள நிலையிலும் இன்னமும் அச்சுவாகனம் ஏறும் முயற்சிகள் சரிவர நடைபெறாத நிலையிலும் நூலின் முழுமை உறுதிச் செய்யப்படாத நிலையிலும் இவற்றையும் மறைந்துபோன புராணங்களுடன் சேர்த்துக்கொள்வது பொருத்தம் என எண்ணுகிறோம்.

இவற்றுடன் மன்னன் ஒருவன் பாடியதாகக் கூறப்பெறும் **சிவராத்திரி புராண**மும் கிடைக்குமாறில்லை. ஆனால், இது ஈழத்தில் பாடப்பெற்றதா அல்லது தமிழ் நாட்டில் பாடப்பெற்றதா எனத் துணிய முடியவில்லை. இருப்பினும் ஈழத்தில் மூவர் சிவராத்திரி புராணத்தைப் பாடியுள்ளதால் இதனையும் ஈழத்துக்குரியதாக அனுமானிக்கலாம்.

இதனடிப்படையில் மறைந்துபோன ஈழத்துப் புராணங்களின் எண்ணிக்கை 25 என்றாகிறது. இந்த 25 புராணங்களும் ஏறத்தாழ 400 வருட காலப்பகுதியில் தோன்றி மறைந்துபோனவையாகும்.

## 03. புராண இலக்கியம்

'புராணம்' என்னும் சொல்லானது **பழமை** என்கிற பொருள் பயப்பதாகும். புராணம் என்பதற்கு **பழங்கதை** என்று **நா. கதிரைவேற்பிள்ளை**யின் அகராதி தருகின்ற பொருளானது புராண இலக்கியம் சார்ந்து நோக்குகையில் அதிகம் பொருந்தி வருவதைக் காணலாம்.

தமிழின் புராண இலக்கியங்கள்மீது வடமொழி புராண இலக்கியங்கள் அதிகம் தாக்கம் செலுத்தியுள்ளன என்பதை எமக்குக் கிடைக்கும் புராண நூல்களின் வாயிலாகக் கண்டுகொள்ளலாம். **கந்த புராணம்**, **திருவிளையாடற் புராணம்** போன்றவை வடமொழியிலிருந்தான மொழிபெயர்ப்புகளாகும். **திருத்தொண்டர் புராண** மூலமானது தமிழிலேயே அமைந்துள்ளது. **திருவாதவூரடிகள் புராண**மானது வடமொழியிலுள்ள 'ஹாலாஸ்ய மாஹாத்மியம்' மற்றும் தமிழில் மொழிபெயர்க்கப்பெற்ற திருவிளையாடற் புராணம் ஆகியவற்றை மூலமாகக் கொண்டு பாடப்பெற்றுள்ளது. **சீறாப் புராண**மானது அரபு மொழியிலுள்ள நபிகள் நாயகத்தின் சரித்திரத்தை மையமாகக்கொண்டு தமிழில் எழுதப்பெற்ற இலக்கியமாகும். **ஸ்ரீபுத்தர் புராண**மானது

பாளி மற்றும் சிங்கள மொழியிலுள்ள மூலங்களை அடிப்படையாகக் கொண்டு தமிழில் எழுதப்பெற்ற **வசன** நூலாகும்.

காலத்துக்குக்காலம் புராணம் என்கிற இலக்கியத்தின் வடிவம் மாறத்தொடங்கியுள்ளதைக் கண்டுகொள்ளலாம். புராண இலக்கியத்தின் வடிவ மாற்றத்துக்கு ஈழத்தில் எழுதப்பெற்ற புராணங்களில் சிலவற்றை உதாரணங்களாகக் காட்டலாம். ஈழத்தில் வதிரி ஊரைச் சேர்ந்த **சி. நாகலிங்கம்பிள்ளை**யால் எழுதப்பெற்ற **தக்ஷிண கைலாச புராணத்தில்** படலங்கள் என்கிற பிரிவுகள் உள்ள போதும் இது வசன ரூபத்தில் எழுதப்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது. **ஆ.வீ. சோமசுந்தரம்** எழுதிய **பூமண்டல புராண**மானது, தலைப்பிலே புராணம் என்கிற அடையாளத்தைக் கொண்டிருப்பினும் புராண இலக்கியத்துக்குரிய வரைவிலக்கணத்துக்குள் அமையாது பெருமக்கள் சிலரின் வாழ்க்கைச் சரிதத்தை உள்ளடக்கியதைக் காணலாம். **கே. கோவிந்தசாமிபிள்ளை** எழுதிய **ஸ்ரீபுத்தர் புராணமும்** புத்தரின் சரிதத்தைக் கூறும் வசன நூலாகும்.

அளவெட்டி **வைத்தியநாதத் தம்பிரான்** பாடிய **வியாக்கிரபாத புராணம்**, **கூழங்கைத் தம்பிரான்** பாடிய **யோசேப்புப் புராணம்**, புலோலி **வ. கணபதிப்பிள்ளை** பாடிய **மார்க்கண்டேய புராணம்**, இணுவைச் **சின்னத்தம்பிப் புலவர்** பாடிய **இளந்தாரி புராணம்** என்பன சமயப் பெரியார்கள்மீது பாட எழுந்த புராணங்களாகக் கொள்ளலாம். இவை நான்கும் மறைந்துபோன புராண நூல்களின்



**மயிலை சீனி. வேங்கடசாமி**
(1900 - 1980)




**மறைந்து போன தமிழ் நூல்கள்**
(இரண்டாம் பதிப்பு - 1967)

பட்டியலிலுள்ளவையாகும். "பெரியார்களின் பழம்பெருமைகளைப் புராணவிலக்கியமாக ஈழத்துப் புலவர்கள் பாடியுள்ளமையை ஈழத்துச் சமூகத்தினர் தமது கண்ணோட்டத்தில் வைத்துக்கொள்ளவில்லை" என்கிற கருத்தை முன்வைக்க இவை வழிசமைக்கின்றன.

20ஆம் நூற்றாண்டில் **கே. கோவிந்தசாமிபிள்ளை** எழுதி, கண்டியில் அச்சேறிய **ஸ்ரீபுத்தர் புராணம்** என்கிற வசன நூல், **ஈழத்துப் பூராடனார்** என்கிற **க.தா. செல்வராசகோபால்** 1602 பாடல்களில் 1986ஆம் ஆண்டு கனடாவில் அச்சிடப்பெற்ற **இயேசு புராணம்** என்கிற புராண நூல், ஆகியனவும் இவ்வகையைச் சேர்ந்தவையே. இவையிரண்டு நூல்களும் எமக்கு கிடைக்கப்பெறுகின்றன. ஆனால், இந்நூல்கள் ஈழத்துப் **புராண இலக்கியப் பரப்பில்** கணிப்பிடக் கூடிய அங்கீகாரத்தைப் பெற்றுள்ளனவா என்பது ஆய்வுக்குரியதே.

அதேவேளை **கடவுள் மாமுனிவர்** பாடிய **திருவாதவூரடிகள் புராண**மானது ஈழத்திலே பரந்த அங்கீகாரம் பெற்றுள்ள புராண இலக்கியம் என்பதும் கவனிக்கத்தக்கது. இப்புராணமானது, சமயப் பெரியாரான **மாணிக்கவாசகர்** மீது பாடப்பெற்றதாகும்.

ஈழத்துப் புலவர்களில் மூவர், புராணம் என்கிற இலக்கிய வடிவத்தின் பொருளை

மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இவர்கள் பாடிய மூன்று புராணங்களின் வாயிலாகவும், புராண நெறியினைப் புது வழியில் இட்டுச்செல்ல முயற்சித்துள்ளனர். வண்ணார்பண்ணை **நட்டுவச் சுப்பையர்** பாடிய ***கனகி புராணம்***, அச்சுவேலி ***காசிநாதப் புலவர்*** பாடிய ***தால புராணம்***, கோப்பாய் **வே. இராமலிங்கம்** பாடிய **கோட்டுப் புராணம்** ஆகியனவே குறிப்பிட்ட புராணங்களாகும். இவைமூன்றும் மறைந்து போன புராண நூல்களின் பட்டியலில் சேர்ந் துள்ளமை ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

இம்மூன்று புராணங்களையும் எழுதிய புலவர்கள், புராண நெறியினை மாற்றியமைக்க எடுத்துக்கொண்ட முயற்சியானது காத்திர மானதாக அமையவில்லை என்பதைப் **பொ. பூலோகசிங்கம்** அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள்.

இருப்பினும் இவர்கள் இம்முயற்சியினைப் பிரக்ஞைபூர்வமாக முயற்சித்தவர்களா? என் பது விடைகாணமுடியாத வினாவாகும். ஈழத் துத் தமிழ்ச் சமூகமானது பெரும்பான்மையாக இப்புராணங்களை அங்கீகரித்திருந்திருந்தால் இம்மூன்று புராணங்களும் எம்மத்தியில் இன்று மறையாதிருந்திருக்க வாய்ப்புகள் அதிகம் எனலாம்.



**எப்.எக்ஸ்.சி.நடராசா**
(1911 - 1997)

காப்பியங்களிலும், இதிகாசங்களிலும் இருக்கும் கதைகளை அடிப்படையாகக் கொண்டு பாடப்பெற்ற **வலைவீசு புராணம்**, ***புரூரவ சக்கரவர்த்தி புராணம்***, **சூதுபுராணம்** ஆகிய நூல் களும் மறைந்துவிட்டன. காப்பியங்களிலும், இதிகாசங்களிலும் இருக்கும் கதைகளை நாடக இலக்கியங்களாக அங்கீகரித்த சமூகம் புராண இலக்கியங்களாக ஏற்க சற்றுத் தயங்கியுள்ளது என்று கூறலாம்.

ஈழத்துப் புராண இலக்கியங்களில் சமயம் சார்ந்த தல புராணங்களும், விரதங்களின் மகிமையைக் கூறும் புராணங்களுமே காலத்தை வென்று எம்மிடையே நிலைத்து நிற்கின்றன என்பதைக் காணமுடிகிறது.

புராணங்களின் பாடுபொருளாக சமயம் சார்ந்த விடயங்கள் அமையப்பெறுவதை சமூகம் பரவலாக அங்கீகரித்துள்ளது எனலாம். இவற்றிலேயும் **ஏரம்பையர்** பாடிய **நகுலாச புராணம்**, ***அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்*** பாடிய **கோட்டாற்றுப் புராணம்**, **மன்னம்பாடியார்** பாடிய **தோன்றித் தலபுராணம்**, **குமாரசுவாமிக் குருக்கள்** பாடிய **மாவைப் புராணம்**, **நா. கதிரைவேற் பிள்ளை** பாடிய **கதிர்காம புராணம்**, **நா. சுப்பிரமணிய சாஸ்திரி** பாடிய ***ஏகாதசி புராணம்*** என்பனவும் மறைந்துபோயின.

**ஆறுமுக நாவலர்** எழுதத்தொடங்கி முற்றுப் பெறாத **தேவகோட்டைத் தலபுராணமும்**, **நவநீதகிருஷ்ண பாரதியார்** நாட்டுப் படலம்வரை எழுதிய **திருப் பாலைத்துறைத் தலபுராணமும்**, **நா. சுப்பிரமணிய சாஸ்திரியார்** எழுதத்தொடங்கி முற்றுப்பெறாத **சைவ மகாபுராணமும்** மறைந்துபோன நூல்களா கின்றன.




**ஈழத்துத் தமிழ் நூல் வரலாறு**
(முதலாம் பதிப்பு - 1970)

அத்துடன் அராலியைச் சேர்ந்த ***விஸ்வநாத சாஸ்திரி*** அவர்கள் மயூரகிரி புராணத்துக்கு எழுதிய ***தெய்வநாயகி திருமணச் சருக்கத்***துக்குரிய பாடல்களும் மறைந்துபோய்விட்டன.

## 04. கதிர்காம புராணம், பிரமாண்ட புராணம் வராக புராணம்

***கதிர்காம புராணம், பிரமாண்ட புராணம், வராக புராணம்*** ஆகியன பற்றிய செய்திகளை பிற நூல்களில் பிரமாணங்களாக காட்டப்பட்டுள்ள தன் வாயிலாக அறிந்துகொள்ளமுடிகிறது. இப்புராணங்கள் பற்றிய செய்திகளைத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பரவலாகக் காண முடியாதுள்ளது. இதன் காரணமாக இப் புராணங்கள் பற்றிய சிறிய குறிப்புகளை இங்கு பதிவுசெய்வது பொருத்தமானதாகும்.

***நா. கதிரைவேற்பிள்ளை*** அவர்கள், தாம் எழுதிய ***சுப்பிரமணிய பராக்கிரமம்*** நூலில், ***கதிர்காமப் புராணம்*** என்கிற நூலினைப் பிரமாணம் காட்டியுள்ளார். ***கதிர்காமப் புராணம்*** என்கிற தலபுராணம் ஒன்றினை யாழ்ப்பாணத்து வதிரி ஊரினைச் சேர்ந்த ***சி. நாகலிங்கம்பிள்ளை*** *(1882-1952)* அவர்கள் *1932*ஆம் ஆண்டு இயற்றி வெளியிட்டுள்ளார். இதன் காரணமாகவும் நா. கதிரைவேற்பிள்ளை பிர மாணம் காட்டியுள்ள கதிர்காமபுராணம் ஆய் வாளர்களின் கண்ணோட்டத்துக்கு வரவில்லை போலும்.

கதிரைவேற்பிள்ளை பிரமாணம் காட்டி யுள்ள கதிர்காம புராணத்தின் ஆசிரியர் யார் என்று தெரியவில்லை. இருப்பினும் எமக்குக் கிடைக்கப்பெறும் ஆறு பாடல்களிலுள்ள அகச் சான்றுகளின் வாயிலாகக் கதிர்காம புராணத்தை நா. கதிரைவேற்பிள்ளைதான் எழுதியுள்ளார் என்று துணியமுடிகிறது.

கதிரைவேற்பிள்ளை அவர்கள் தமது ஊரான புலோலியில் உள்ள முருகக் கடவுளின் தலத்தினைப் ***புதுச்சந்நிதி*** என்றும் ***உபய கதிர்காமம்*** என்றும் கூறியும், வலியுறுத்தியும், நிறுவியும் வந்தமையைப் பல சந்தர்ப்பங்களில் காண லாம். உதாரணமாக கதிரைவேற்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய ***பழநித்தல புராண உரை*** நூலில், மேலைப் புலோலி தலத்தினை உபய கதிர்காமம் எனக் குறிப்பிட்டும் அத்தலத்து இறைவன் பழநித்தல புராணத்துக்கு உரை யெழுதுவதற்கு தமக்கு ஆதாரமாக இருந் துள்ளான் எனக் குறிப்பிட்டும் உள்ளதைக் காணலாம்.

இங்கு குறிப்பிடப்பெற்றுள்ள கதிர்காமப் புராணத்தில் ***உபய கதிர்காமப் படலம்*** இருப்பது கவனிக்கத்தக்கது. மேலும், பிரமாணம் காட்டப் பெற்றுள்ள பாடல்கள் புலோலியில் குடி கொண்டுள்ள இறைவனைப் பாடுவதால் கதிர் காமப் புராணத்தை எழுதியவர் நா. கதிரை வேற்பிள்ளை என்பதை அகச் சான்றுகளின் வாயிலாக உறுதியாகத் துணியமுடிகிறது.

### கதிர்காமப்புராணம் – உபயகதிர்காமப் படலம்

சீர்பெறு மிலங்கைத் தலத்தியாழ்ப்
பாணன் றிருத்திய நகரத்தின் வடபா
லேர்பெறு **மேலைப் புலோலி**நற்
றலத்தி லினியமெய்ச் சைவவே ளாளக்
கார்பெறுங் குலத்தே மழவரா யப்பேர்க்
கதித்திடுங் கோத்திர மதனி
னேர்பெறுந் தவங்க டிரண்டென வொருபெ
ணியைந்தனள் குகானந்தை பெயரே

மங்கையர்க் கரசி வந்துதித் தனளோ
வண்மையாந் திருவருள் படைத்த
துங்கமார் புனித வதியினார் பின்னுந்
தோன்றிய புதுமையோ புலமைப்
புங்கவி யிளையா னன்பினைத்
தெரிக்கப் போந்ததோ வறிகிலே மவளுந்
துங்கவேற் கதிரைக் கடவுண்மீ தன்பிற்
றுதைந்தன ளவன்புகழ் சொலுவாள்

பத்தியாண் டனுகப் பத்தியாண் டுள்ள
பாவையுங் கதிரைநற் றலக்கு
முத்தியை விரும்பிச் சென்றிட முயன்ற
ளிருமுது குரவர்க்கு முடிவி
னித்திய பரமன் கனவினிற் றோன்றி
நிகரிலாப் புதல்வியோ டுற்று
நத்திய பெறுதி ரென்றன னாங்குப்
பன்முறை நடந்தயாத் திரையே

துறவினிற் புகுந்து கதிரையி னண்மித்
துதித்திருந் தனளிறை தோன்றி
நிறவயி லருளி நுன்றனூர் தாபித் தேத்துக
நீன்மயி லிடத்தைக்
குறைதபக் காட்டு மவண்முனம்
வாமன் கோயில்கொண் டுய்ந்தன னவுண
னிறையிருள் சூத வடிவினைத் துமித்த
நிகரிலாத் தலங்களுஞ் சூழும்

அன்னவை நடுவட் டுவிகதிர் காம
மருமையாஞ் சித்திநற் கரமே
துன்னிய வுதீசிக் கத்ரைமேற் புலவர்
சொல்லிடுங் கானமே மஞ்ஞை
மன்னுவக் கிரமா வேலனற் றணியெ
வாமனம் பரத்துறை பிரத
மென்னுமிப் பெயர்சேர்ந் தொளிருமா
**நவசந் நிதி**யெனு மொருபெருங் கோயில்

அதன்கணே சர்வ பலப்பிர தான
மூர்த்தியா யறுமுகக் கடவுள்
பதங்கன்வா னவர்க ளதிதிபுத்
திரனே பற்பல கணத்தவர் பழிச்ச
நிதமெழுந் தருளி யவரவர் வேண்டு
நினைப்பெலா முற்றிநின்றனனென்
றிதமொழி யியம்பிச் சித்தனு மறைந்தா
னிதுகண் யாவருந் துதித்தார்

**(சுப்பிரமணிய பராக்கிரமம், 1906, பக்.** 396-397)

கதிர்காம புராணநூல் பற்றிய மேலதிக விபரங்கள் அறியுமாறில்லை. இது அச்சேறியதான பதிவுகளும் இல்லை. நா. கதிரைவேற்பிள்ளை பற்றிய சரித்திர நூல்களிலும் கதிர்காமப்புராணம் பற்றிய குறிப்புகள் பதியப்பெறவில்லை.

***நா. கதிரைவேற்பிள்ளை*** அவர்கள், தாம் எழுதிய ***சுப்பிரமணிய பராக்கிரமம்*** நூலில் வடமொழியிலுள்ள **பிரமாண்ட புராண**த்திலுள்ள ஒரு செய்தியை தமிழில் மொழிபெயர்த்து பாடலாக்கிப் பிரமாணம் காட்டியுள்ளார். தாம் எழுதிய நூல்களைப் பிரமாணமாக எடுத்துக் காட்டும் வழமையை நா. கதிரைவேற்பிள்ளை கொண்டிருந்தார் என்பதை அவரின் நூல்களில் பரவலாகக் கண்டுகொள்ளலாம்.

சுப்பிரமணிய பராக்கிரமம் நூலில் பிரமாணம் காட்டப்பெற்றுள்ள வடமொழி நூல்களின் பட்டியலில் பிரமாண்ட புராணத்தின் பெயர் தரப்பெற்றுள்ளது. இருப்பினும் பிரமாணம் காட்டப்பெற்றுள்ள தமிழ்மொழி நூற்பட்டியலிலே இது தரப்பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

இதன்படி கதிரைவேற்பிள்ளைதான் பிரமாண்ட புராணப் பகுதிக்குரிய தமிழ்ப் பாடலை எழுதியுள்ளார் என்பதைத் துணியலாம். மேலும், பாடலின் அருகே மொழிபெயர்ப்பு எனவும் தரப்பெற்றுள்ளமை இதனை உறுதிசெய்கிறது. பிரமாண்ட புராணத்திலிருந்து எமக்கு இரு பாடல்கள் மாத்திரமே கிடைக்கப்பெறுகின்றன.

சிவமொன்றே முதலாகுஞ் சத்தியஞ்சத்
தியமீது தெருடி னேனீ
ரவமொன்றிச் சுடுநிரயத் தாழ்கின்றீ
ரெனப்புகலு மந்தச் சோதி
குவனென்றிக் கலகமிடப் புடைத்தனன் மற்
றவனுமொரு கோலிற் றாக்கச்
சவமொன்றச் சுக்கிரனும் பதைத்தொருநற்
சிவக்கொழுந்தே சார்ந்திட்டாயோ

என்றிரங்கிச் சீவனியின் வித்தையா
லுயிர்ப்பித்தே யிவனை நோக்கி
நன்றுநீ மதமதவிற் படுதியெனச்
சூள் செய்தா னரனு **மீழத்**
**தொன்றுவா வனத்துவா வெனத்தோன்றிக்**
கொடுஞ்செயல்க ளுஞற்றியன்ப
னன்றுதலங் காணச்சென்ற டர்த்துவேள்
கொன்றருள வன்பிற் சார்ந்தான்

**(சுப்பிரமணிய பராக்கிரமம், 1906, பக்.** 126-127)

சற்புத்திரன் எனும் வணிகரின் கனவிலே முருகக் கடவுள் தோன்றி ஈழத்திலுள்ள கதிர்காமத் தலத்துக்கு வரும்படி செய்தி சொன்ன புராணக்கதையின் பகுதியினை இப்பாடல் குறித்து நிற்கிறது.

வடமொழியிலுள்ள பிரமாண்ட புராணத்திலிருந்து இப்பாடலை மாத்திரம் கதிரைவேற்பிள்ளை மொழிபெயர்த்துள்ளாரா? பிற படலங்கள் எவற்றையும் மொழிபெயர்த்துள்ளாரா? அல்லது பிரமாண்ட புராணம் முழுவதையும் தமிழில் பாடியுள்ளாரா என்பதைத் துணிய முடியாதுள்ளது.

இதன் காரணமாக மறைந்துபோன நூற் பட்டியலில் பிரமாண்ட புராணத்தை அறுதி யிட்டு இணைக்கமுடியாதுள்ளது.

***நா. கதிரைவேற்பிள்ளை*** அவர்கள், தாம் எழுதிய ***சுப்பிரமணிய பராக்கிரமம்*** நூலிலே முன்னர் குறிப்பிட்ட பிரமாண்ட புராணத்தைப் போன்று வடமொழியிலுள்ள ***வராக புராண***த்திலுள்ள ஒரு செய்தியை தமிழிலே மொழிபெயர்த்துப் பாடலாக்கிப் பிரமாணம் காட்டியுள்ளார்.

சுப்பிரமணிய பராக்கிரமம் நூலிலே பிரமாணம் காட்டப்பெற்றுள்ள வடமொழி நூல்களின் பட்டியலிலும் தமிழ்மொழி நூல்களின் பட்டியலிலும் வராக புராணத்தின் பெயர் குறிப்பிடப்பெற்றுள்ளமை கவனிக் கத்தக்கது. வராக புராணத்தின் இரண்டு செய் யுள்கள் மாத்திரமே கிடைக்கப்பெறினும் வராக புராணத்தினை நூல் வடிவத்தில் கதிரை வேற்பிள்ளை இயற்றி வைத்திருந்திருக் கலாம் எனக் கருத இடமுண்டு. இருப்பினும் பிரமாண்ட புராணச் செய்யுளைப் போன்று மொழிபெயர்ப்பு என்கிற அடையாளம் இந்தச் செய்யுள்களுக்கும் வழங்கப்பெற்றுள்ளமை கவனிக்கத்தக்கது.

இத்தகு தெளிவின்மை காரணமாக மறைந்து போன நூற் பட்டியலில் வராக புராணத்தை அறுதியிட்டு இணைக்கமுடியாதுள்ளது.

வானதிக் கரையின் மஞ்சு வருங்கன கலத்துப் பட்டி
யானமண் டபத்துக் கோடி யருணரொன் றிணைதன் மானக்
னோனெழுத் தாணி வேதங் கொளுஞ்சிவா கமங்க ளாதி
மேனநன் முறைக டாரித் தமர்ந்தவேத் திரமுந் தாங்கி

குரவனிற் பொலிந்து மார்பிற் குருமல ரத்தஞ் சாத்திப்
பரவிய முனிவர் தேவர் பலமறை வியாதர் தாலர்
திரகலை யமிர்த முண்ணச் சீடரா யவர்பி றங்கச்
சரவண பவனுஞ் சீடத் தலைவனா யிருந்தான் மன்னோ

**(சுப்பிரமணிய பராக்கிரமம், 1906, பக். 308)**

பலருக்கு ஆசிரியராக இருந்து சீடாதிபதி மூர்த்தி என்கிற பராக்கிரமத்தைப் பெற்றமை பற்றி இவ்வராக புராணச் செய்யுள்களில் பாடப்பெற்றுள்ளது.

## 05. விநாயகசட்டிப் புராணம், தென்கோயிற் புராணம்

வட்டுக்கோட்டை ***நா. சிவசுப்பிரமணிய சாஸ் திரியார்*** எழுதிய ***தென்கோயிற் புராணமும் விநாயக சட்டிப் புராணமும்*** ஓலைசுவடி வடிவத்தில் சாஸ்திரியாரின் வழித்தோன்றலாகிய முன் னேஸ்வரம் ***ச. பத்மநாதன்*** அவர்களிடத்தில் இன்றும் காணப்பெறுகின்றன (2025 - ஜூன்).

தென்கோயிற் புராணத்தில் 12600 பாடல்கள் காணப்பெறுவதாகப் பதிவுள்ளது. ஈழத்தில் இத்துணை பாடல்களைக் கொண்ட வேறெந்த நூலும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

யாழ்ப்பாண மன்னர் காலத்தில் எழுதப் பெற்ற **பரராசசேகரம்** எனும் வைத்திய நூலில் ஆரம்பத்தில் 12000 செய்யுள்கள் இருந்த தாகக் கூறுவர். பரராசசேகரம் நூல்பற்றி **ஆ. வேலுப்பிள்ளை** பின்வருமாறு கருதுகிறார்.

> "பரராசசேகரம் அளவு பாரிய நூல் எதுவும் இலங் கைத் தமிழில் வேறு இல்லை. 12000 செய்யுள்கள் இருந்தனவென்றால், இந்தியத் தமிழில் வேறு உண்டா என்பதும் ஆராய்ச்சிக்குரிய விடயமாகும்"

**– ஆ. வேலுப்பிள்ளை, தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும், ஈழத்துப் பழைய இலக்கியங்கள், வரலாற்றுத் தேடல், 2009 (பக். 6–7)**

இந்தப் பின்னணியில் ஓலைச்சுவடியில் உறங்கிக்கொண்டுள்ள நா. சுப்பிரமணிய சிவாச்சாரியார் எழுதிய தென்கோயிற் புராண மானது அச்சுவடிவம் பெற்றால் அது தமிழுல கிற்கு வெளிக்கொண்டுவரக்கூடிய செய்திகள் ஏராளம்... ஏராளம்.

2014ஆம் ஆண்டு சிவசுப்ரமணிய ஐயர் பாடிய **கந்தசட்டி புராண** நூலினை மீள்பதிப்பு செய்த ***ச. பத்மநாதன்*** அவர்கள், தென்கோயிற் புராணத்தின் ஏட்டுச் சுவடி உள்ளதென்றும் அந்நூலானது எதிர்வரும் காலத்தில் அச் சேறும் எனவும் பதிப்புரையில் குறிப்பிட் டுள்ளார். மேலும் பத்மநாதன் அவர்கள் இவ் ஏட்டுச்சுவடி பற்றித் ***தமிழ் மொழித் தொல்லியல் ஓலைச்சுவடி ஆய்வுகள் – தென்கோயிற்புராணம் – ஓர் ஆய்வு*** என்கிற ஆய்வுக் கட்டுரையையும்

எழுதியுள்ளார். ஆய்வுக் கட்டுரையிலிருந்து பெறப்பட்ட செய்திகள் கீழே தரப்பெற்றுள்ளன.

தென்கோயிற்புராணம் என்பது இலங்கைமான் மியம் எனும் இன்னோர் பெயரைக் கொண்டதோர் தமிழ்ப் புராணம் ஆகும். இப்புராணம் பனை யோலைச் சுவடியாக கையெழுத்துருவில் இதுவரை வெளிவராத ஈழத்து தமிழ்ப்புராண இலக்கிய வரிசையில் ஒன்றாகும்.

இப்புராணத்தின் ஓலைச்சுவடி 50CM X 3CM அளவில் 434 தனி பனையோலைச் சுவடிகளைக் கொண்டு நடுவில் இருதுளைகளுடன் இருபுறமும் மரத்தடிகள் பாதுகாப்பாக விளங்க கட்டப்பட்ட சுவடி நூல் ஆகும்.

...

தென்கோயிற்புராணத்தின் காப்புச் செய்யுள் அந்நூலின் அமைப்புப்பற்றிய முழுவிபரத்தையும் தெரிவிப்பதாக காணப்படுகின்றது.

பன்னிய காண்டமைந்து படலமோர் முப்பதின்மே
லொன்றும்பன் னீராயிரத்து னறுநூறு விருத்தச்செய்யுள்
தன்னிற் **சீரிலங்கா மான்மியஞ்** தழை**தென்
கோயிற்புராண**ங்
கன்னிகை யருளுமங்கைக் கற்பகம் கருதிச் சொல்வாம்

....

வட முனைக்காண்டம், தென் முனைக்காண்டம் எனும் இரு பெரும் விடயப் பரப்புக்கள் உள்ளடக் கப்பட்டிருப்பதனைக் காணமுடிகின்றது. நூற் பய னாக குறிப்பிடப்படும் செய்யுளில்,

திருவுங் கல்வியுஞ் திகழ் நீதியன்
அவன்வரு முத்தியு மனுகுஞ் சிற்பரம்
பொருவரும் **தெக்கி ணாலய புராண**மே
லொருகவி யாயினு மோர்ந்து ரைக்கினே

எனக் குறிப்பிடுகையில் இப்புராணத்தின் இன்னு மொரு பெயராக தெக்கிணாலய புராணம் என் பதனைச் சுட்டுகின்றார்.

...

இத்தகைய புராணத்தை தாமே இயற்றியது என்பதற்குரிய சாற்று கவியாக

விந்தை செறி வட்டுநகர் வேதியனா கேசபுந்தி
மைந்தன்சிவ சுப்பிரமண்யகுரு – தந்ததமிழ்
**தென்கோயின் மான்மிய**ச்சீர்ச் செப்பு புராணஞ்சிவமே
என்கோ அமுதென்கோ யான்

என்று கூறுவதும் இதனூடாக இந்நூலுக்கு தென் கோயில் மான்மியம் எனும் பெயரைச் சுட்டுவதும் குறிப்பிடத்தக்கது.

***விநாயகசட்டிப் புராணமும்*** அச்சுவாகனம் ஏறு வதற்கான முயற்சிகள் நடைபெறுவதான பதிவுகள் உள்ளன. இதில், 1600க்கும் மேற்பட்ட விருத்தங்கள் இருப்பதாகவும் அறியமுடிகிறது. இப்புராணமானது விநாயகசட்டி விரத மகிமை யைக் கூற எழுந்ததாகும்.

இந்நூலிலிருந்து ஒரு பாடல் கீழே தரப் பட்டுள்ளது.

தழை விநாயக சட்டிப் புராணமே
யழை யொராயிரத்தறுநூறு விருத்தமேல்
வழை சருக்கமு வேழி நவில்தரக
கழை மதம் பொழி கற்பகம் போற்றுவாம்

**(கந்தசட்டிப் புராணம் – 2014ஆம் வருடப்பதிப்பு, பக்–ix)**

## 06. சிவராத்திரிப் புராணம்

***சிவராத்திரிப் புராணம்*** பற்றிய தெளிவற்ற செய்திகள் பதியப்பெற்றுள்ளதால். அதைப் பற்றிய ஒரு தெளிவை இங்கு எடுத்துக்காட்டு வது கடமையாகிறது.

ஒன்றோடொன்று வேறுபாடுடைய மூன்று ***சிவராத்திரி புராணங்கள்*** எமக்கு கிடைக்கப் பெறு கின்றன. இவைபற்றி **ஈழத்துப் புராணங்கள்** என்னும் கட்டுரையில் **பொ. பூலோகசிங்கம்** (திருக்கேதீஸ்வரம் திருக் குடத்திருமஞ்சன மலர் - 1976) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

| ஆசிரியர் | சருக். | பாடல்கள் | பாயிர பாடல் |
|---|---|---|---|
| வரதராஜ பண்டிதர் | 9 | 691 | 24 |
| நெல்லைநாதர் | 4 | 287 | 16 |
| நா. சிவசுப்பிரமணிய சாஸ்திரி | 6 | 294 | 7 |

இம்மூன்றும் அச்சுவாகனம் ஏறியுள்ளதை பூலோகசிங்கம் உறுதிசெய்கிறார். வரதராஜ பண்டிதரின் சிவராத்திரி புராணமானது பல பதிப்புகளையும் பலரின் உரைகளையும் கண்டுள்ளது.

*1845*ஆம் ஆண்டு சென்னையில் Appeal for the Hindu என்கிற நூலொன்று அச்சில் வந்துள்ளது. இதிலே தமிழ்நாட்டிலும் மற்றும் ஈழத்திலும் மிஷனரிமார் திரட்டிய பல்வேறு தகவல்கள் உள்ளடக்கப்பெற்றுள்ளன. இந் நூலில் அவர்களால் திரட்டப்பெற்ற தமிழ் நூல்கள் பற்றிய பட்டியலும் காணப்பெறுகிறது. இப்பட்டியலிலே *137* தமிழ் நூல்களின் விப ரங்கள் தரப்பெற்றுள்ளன. இந்நூல்களில் சிங்கள அரிச்சுவடிகளும் காணப்பெறுவது இந்நூல்கள் ஈழத்திலும் பெறப்பட்டவை என் பதை உறுதிப்படுத்துகின்றன.

இப்பட்டியலிலே ***ஏகாதசி புராணம்*** நூல் பற்றித் தரப்பெற்றுள்ளது. ஏகாதசி புராணத் துக்குரிய குறிப்பினை அவர்கள் சரியாகத் தந்துள்ளமையைக் காணலாம். ஏகாதசி விரதமானது விஷ்ணுவை நோக்கி அனுஷ் டிக்கப்பெறும் விரதம் என்பதையும் இவ் விரதமிருந்து சிறப்படைந்த உருக்குமாங்கத னின் கதையையும் ஏகாதசிப் புராண நூல் உள்ளடக்கியுள்ளதை அப்பதிவு குறிக்கிறது.

இதேபோன்று ***கிருஷ்ணன் தூது*** என்கிற நூலினை ***வில்லிபுத்தூரர்*** எழுதினார் என்றும் வில்லிபுத்தூரனின் மகனான ***வரந்தருவானின்*** புலமைச் சிறப்பையும் மிஷனரிமார் துல்லிய மாகக் குறித்துள்ளனர்.

இந்நூற் பதிவுகளில் தமிழ்ச்சொற்களை எழுதும்போது உச்சரிப்புத் தவறுகள் வந் திருந்தாலும் தகவல்களைத் துல்லியமாகத் தந்துள்ளமையைக் காணலாம்.

இந்தப் பட்டியலில் காணப்பெறும் இன்னு மொரு நூல் ***சிவராத்திரி புராண***மாகும். முன்னர் காட்டியுள்ளதுபோன்ற துல்லியமான விபரங் களைத் தருகின்ற இப்பட்டியல் சிவராத்திரி புராணத்தை ஓர் அரசன் இயற்றியுள்ளான் என்ற பதிவினைத் தருகின்றது. மேலும் சிவராத்திரி புராணத்தை எழுதிய ***அரசன்***, *200* ஆண்டுகளுக்கு ***முன்னர்***, அதாவது கி.பி.*1645*க்கு முன்னர் ***ஆட்சிசெய்துள்ளான்*** எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

எமக்கு கிடைக்கும் பதிவுகளின்படி வரதராஜ பண்டிதர், நெல்லைநாதர், சிவசுப்பிரமணிய சாஸ்திரி ஆகியோர் ***சிவராத்திரி புராண*** நூல்களை எழுதியுள்ளனர். மேலும் வரதராஜ பண்டிதர், சிவசுப்பிரமணிய சாஸ்திரி ஆகியோர் ***ஏகாதசி புராண*** நூல்களை எழுதியுள்ளனர். இவர்களில் காலத்தால் முற்பட்டவராக வரதராஜ பண்டிதர் கணிக்கப் பெறுகின்றார்.

வரதராஜ பண்டிதரின் காலத்தினை கி.பி. *1656* தொடக்கம் கி.பி. *1716* என ***ஈழத்துத் தமிழ் கவிதைக் களஞ்சியம்*** தொகுத்த ***ஆ. சதாசிவம்*** அவர்கள் துணிந்துள்ளார்கள். இதன்படி *1845*ஆம் ஆண்டு தரப்பெற்றுள்ள நூற்பட்டியலிலுள்ள சிவராத்திரி புராணமானது வரதராஜ பண்டிதரின் காலத்துக்கு முன்னர் எழுதப்பெற்றுள்ளது என் பதைத் துணியமுடிகிறது. வரதராஜ பண்டிதர் ஆட்சிபுரிந்த அரசர் அல்லர் என்பதும் அவர் அந்தண மரபில் வந்தவர் என்பதும் கவனிக்கத் தக்கது.

மேலும் ஏகாதசி புராணத்துக்குரிய குறிப்பில் ஆசிரியர் பற்றிய குறிப்பினைத் தராதமை, மிஷனரிமாருக்குக் கிடைத்த சிவராத்திரி புராணத்தின் ஆசிரியரும் ஏகாதசி புராணத்தின் ஆசிரியரும் வெவ்வேறான வர்களாக இருத்தல்வேண்டும் என்னும் துணி புக்கு இட்டுச்செல்கிறது.

வரத***ராஜ*** பண்டிதர் என்கிற பெயரிலுள்ள ***ராஜ*** என்னும் பதத்தைத் தவறாகப் புரிந்து கொண்ட மிஷனரிமார் சிவராத்திரி புரா ணத்தை ஓர் அரசன் எழுதினான் என்று தவ றாகத் தந்திருக்கக்கூடும் என்கின்றகூற்று வலுச்சேர்ப்பதாக இல்லை.

மேலும் *1845*ஆம் ஆண்டு தரப்பெற்றுள்ள சிவராத்திரி புராணக் குறிப்பானது சிவ விரத மகிமை பற்றிக் குறிப்பிடாததைக் கவனிக்க லாம். முன்னொரு காலத்தில் ஒருவன் விரதமிருந்து சுவர்க்கத்தை அடைந்தான் என்றும் அவன் இறந்த தினத்திலே பக் தர்கள் அவனைப் போன்று விரதமிருந்து இரவிலும் விழித்திருப்பார்கள் என்றும் குறிப் பிட்டுள்ளது. இக்குறிப்பானது வரதராஜ

பண்டிதர், நெல்லைநாதர், சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் ஆகியோரின் சிவராத்திரி புராணங்களில் கூறப்பெற்றுள்ள அடிமுடி தேடிய வரலாறு, சிவனின் பெருமைகள் என்ப வற்றுடன் பொருந்தி வராமையைக் காணலாம்.

ஆனால் மிஷனரிமாரின் ஏகாதசி புராணம் பற்றிய குறிப்பானது வரதராஜ பண்டிதர் இயற்றிய ஏகாதசிப் புராணத்துடன் பொருந்து வதையும் ஞாபகத்தில் கொள்ளல்வேண்டும்.

சிவராத்திரி புராணம் பாடிய வரதராஜ பண்டிதர், தமக்கு முன்னர் பலர் சிவராத்திரி புராணம் பாடியுள்ளனர் என்பதை ***முந்த வுரைத் தனர் பலருமாயினும்*** எனக் குறிப்பிட்டுள்ளார். மேலும், தாம் ஆகம நூல்வழிநின்று வழு வாமல் பாடியுள்ளதை ***யாகமநூான் மொழி வழுாமற்*** என்று கூறியுள்ளார்.

கந்தமலர்ப் பொழில்புடைசூழ் தில்லைவனத்
தறிஞர்திருக் கடைக்க ணோக்கி
**முந்தவுரைத் தனர்பலரு மாயினுநீ**
**யாகமநூான் மொழிவ ழுாமற்**
பந்தமறுத் திடுஞ்சிவராத் திரிவிரத
சரிதைதனைப் பாடு கென்னச்
செந்தமிழி னுயர்விருத்தப் பாவதனாற்
றிரட்டியொன்றாச் செப்ப லுற்றேன்.

இவற்றின்படி வரதராஜ பண்டிதருக்கு முன்னர் சிவராத்திரி புராணம் தமிழில் இயற் றப்பெற்றுள்ளது என்பது பெறப்படும். மேலும் அச்சிவராத்திரி புராணம்(கள்) ஆகமநூல் களின் வழிநில்லாமல் பாடப்பெற்றிருக்கலாம் என்பதும் பெறப்படும். மிஷனரிமார் சிவராத்திரி புராண நூலின் பொழிப்பாகத் தரும் செய்தி யில் அது ஆகமவழி நில்லாததையும் காணலாம்.

இவையாவும், மிஷனரிமார் *1845*ஆம் ஆண்டு கூறியுள்ள சிவராத்திரி புராணமானது தற்பொழுது எமக்குக் கிடைக்கப்பெறும் சிவராத்திரி புராணங்களிலிருந்து வேறுபட்டது என்பதைத் தெளிவாக தெரிவிக்கின்றது. ***இந்தச் சிவராத்திரி புராணத்தை நாம் இன்று இழந்துவிட்டோம் என்பது கவலைக்குரியது***.

***காசிச் செட்டி*** அவர்கள் *1848*ஆம் ஆண்டு எழுதிய *CATALOGUE OF TAMIL BOOKS* என்கிற தமிழ் நூல்களின் பட்டியலில் சிவராத்திரி புராணத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதிலே சிவராத்திரி புராணத்தில் *9* சருக் கங்களில் *652* பாடல்கள் உள்ளதாகக் குறிப் பிட்டுள்ளார். இது தற்பொழுது எமக்குக் கிடைக்கப்பெறும் சிவராத்திரி புராணத்திலும் *(691 + 24)* பார்க்க எண்ணிக்கையில் *40*க்கும் மேற்பட்ட பாடல்கள் குறைவானது என்பது கவனிக்கத்தக்கது. இருப்பினும் காசிச் செட்டி குறிப்பிடும் புராணத்தில் *9* சருக்கங்கள் காணப்பெறுவதால் இப்புராணத்தை வரதராஜ பண்டிதர் பாடியதென்றுதான் கருதவேண்டி யுள்ளது.

மிஷனரிமார் குறிப்பிட்டுள்ள மறைந்து போன சிவராத்திரி புராணத்தை ஈழத்துப் புலவர் - மன்னர் ஒருவர் பாடியுள்ளாரா என்பதைத் துணிவது சிரமமானது. யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த மன்னர்களான செகராசசேகரன், பரராசசேகரன் போன்றோர் தமிழ்ப் புலமை யுடையவர்களாக இருந்துள்ளனர். இம் மன்னர்கள் நூல்களும் இயற்றியுள்ளனர். இருப்பினும் இவர்களில் ஒருவர் இந்நூலி னைச் செய்திருக்கலாம் என்று கூறுவதற்கு ஆதாரங்கள் போதுமானவையில்லை.

இருப்பினும் நூலினை இழந்துவிட்டோம் என்பது உண்மை.

## 07. மறைந்துபோன ஈழத்துப் புராண நூல்கள்

01. **இளந்தாரி புராணம்**
**சின்னத்தம்பிப் புலவர்** (இனுவில்)
கி.பி. 18ஆம் நூற்றாண்டு

***சின்னத்தம்பி*** புலவர் அவர்கள் ***இளந்தாரி புராணம்*** எழுதியுள்ளார் என்கிற பதிவு உள்ள போதும், இந்நூல் சார்ந்த விபரங்கள் அறியுமா றில்லை. சின்னத்தம்பிப் புலவரின் ஊரான இணுவிலில் இளந்தாரி கோயில் என்னும் வீரத்துக்கு அடையாளமான கோயிலிருப்பது குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் இளந்தாரி என்பவருக்கு கைலாயநாதன் என்பது இயற்பெயர். இந்தக் கைலாயநாதன் கங்கைக் குலத்தில்வந்த காலிங்கன் ஒருவ

னுடைய மகனென்று சின்னத் தம்பிப் புலவர் பாடிய **பஞ்சவண்ண தூதி**லிருந்து ஆய்வாளர்கள் பெற்றுள்ளனர்.

02

## ஏகாதசிப் புராணம்

நாகேசையர்
***சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்***
(வட்டுக்கோட்டை)
கி.பி. 1848-07-30 - 1929-10-10

ஏகாதசி விரதத்தின் மகிமையைக் கூறும் இப்புராண நூலானது ஐந்து சருக்கங்களில் ஏறத்தாழ 300 பாடல்களை உள்ளடக்கியது என்பதை அறியமுடிகிறது. ஏகாதசிப் புராணத் திலிருந்து கிடைக்கப்பெறும் பாடலின் வாயிலாக இந்நூலினது பெயரானது ஏகாதசி மான்மியமாக இருந்திருக்கலாம், என்கிற ஐயத்தையும் தோற்றுவிக்கின்றது.

***சிவசுப்பிரமணிய ஐயர்*** பாடிய, இந்நூலானது அச்சிடப்பெற்றுள்ளது என்கிற பதிவு எமக்குக் கிடைக்கின்றன. இருப்பினும் அச்சிடப்பெற்ற தாகக் கூறப்பெறும் பிரதிகள் கிடைப்பதற்கு அரிதாயுள்ளன என்கிற பதிவும் காணப்பெறு கிறது. ***வரத பண்டிதர்*** பாடிய ***ஏகாதசிப் புராண*** நூலானது ***நா. கதிரைவேற்பிள்ளை***யால் 1898இல் அச்சிடப்பெற்றது என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

***சிவசுப்பிரமணிய ஐயர்*** பாடிய ஏகாதசி புராணத் திலிருந்து கிடைக்கப்பெறும் பாடல்.

விற்கொளே காதசி மிகு மான்மியம்
மேற்கொண்டு முந்நூ றிலங்கு விருத்த மேற்
சிற்சருக்க மொரைந் திற்றென் கோயில் வாழ்
கற்பகத்தைக் கருதி விளம்புவாம்.

**(கந்தசட்டிப் புராணம் - 2014ஆம் வருடப்பதிப்பு, பக்-ix)**

03

## கனகி புராணம்/கனகி சயமரம்

**சுப்பையர்** (நட்டுவச் சுப்பையர்)
(வண்ணார்பண்ணை)
கி.பி. 19ஆம் நூற்றாண்டு

**காப்பு**

சித்திர மறையோர் வீதி சிறந்திடும் வண்ணையூர்க்குக்
கத்தனாம் வைத்தீசர்க்குக் கனத்ததோர் நடனஞ்செய்யும்,
குத்திர மனத்தளாகுங், கொடியிடை, கனகி நூற்குப்
பித்தனாயுலா மராலிப் பிள்ளையான் காப்பதாமே



**கனகி புராணம்**
(1961)

புராணமென்னும் இலக்கிய வடிவத்தின் பொருளை மாற்றியமைக்கும் முயற்சிக்கு உதா ரணமாக இப்புராணத்தையும் ஆய்வாளர்கள் முன்வைப்பர். நூலாசிரியரின் சமகாலத்தில் வண்ணார்ப் பண்ணைச் சிவன்கோயிலில் இருந்த தாசி பெண் ஒருவரைக் கதாநாயகி யாகக்கொண்டு பாடப்பெற்ற புராணங்களா கையால் மற்றைய புராணங்களிலிருந்து இது வேறுபட்டு நிற்கிறது.

***நட்டுவச் சுப்பையனார்*** ஏறத்தாழ 400 பாடல் களில் இப்புராணத்தைப் பாடியுள்ளார் எனும் பதிவுகள் உள்ளன. இவற்றில் ஏறத்தாழ 25 பாடல்கள்வரை இன்று கிடைக்கப் பெறு கின்றன. இதனால், இந்நூலினை சிதைந்து போன நூலாகக் கருதுவதா அல்லது மறைந்துபோன நூலாகக் கருதுவதா எனும் தடுமாற்றம் எழுகிறது.

கனகி புராணத்தை மீட்டெடுக்கும் முயற் சிகளாக 1937ஆம் ஆண்டு நவாலி ***சி. கந்தையாப்பிள்ளை*** வெளியிட்ட ***கனகி புராண தெரிகவிகள்***, 1960ஆம் ஆண்டு ***கனக செந்திநாதன்*** எழுதிய ***கனகி புராணத்தில் சில பாடல்கள்*** என்ற கட்டுரை, 1961இல் வட்டுக்கோட்டை ***மு. இராமலிங்கம்*** பதிப்பித்த ***கனகி***

**புராணம்** எனும் நூல் என்பன அமைகின்றன. மு. இராமலிங்கம் பதிப்பித்த கனகி புராணம் என்கிற நூலில் 25 பாடல்கள் உள்ளன. யாழ்ப் பாணத்துகாரைதீவுபகுதியில் இப்புராணத்தினை ***சின்னாச்சிப் புராணம்*** என்றும் அழைப்பர்.

04

## கோட்டாற்றுப் புராணம்

அல்லாபிச்சை ராவுத்தர்
**அப்துல் காதிர் புலவர்**
(கண்டி, தெல்தோட்டை)
கி.பி. 1866 – 1918

***அப்துல் காதிர்*** இயற்றிய ***கோட்டாற்றுப் புராணத்தினை*** புராணங்களுக்குள் தல புரா ணங்கள் என்கிற வகைக்குள் ***பொ. பூலோக சிங்கம்*** அவர்கள் முன்மொழிந்துள்ளார். **கோடாறு** என்கிற இடமானது தமிழகத்தில் கன்னியா குமரி மாவட்டத்தில் நாகர்கோயில் நக ராட்சிக்கு உட்பட்ட பிரதேசமாகும். இந்நூல் பற்றிய மேலதிக விபரங்கள் அறியுமாறில்லை.

இலங்கைத் தமிழ் இஸ்லாமிய இலக் கியத்தின் நடுநாயகமாகக் கணிக்கப் பெறுபவர் ***அருள்வாக்கி அப்துல் காதிர் புலவர்*** ஆவார். இவர் ஏறத்தாழ 40 நூல்கள் இயற்றினார் என்கிற பட்டியலுள்ளபோதும் மிகக் குறைவான நூல் களே அச்சில்வந்து நிலைத்துள்ளன.

05

## கோட்டுப் புராணம்

வேலுப்பிள்ளை **இராமலிங்கம்**
(உடுப்பிட்டி, கோப்பாய்)
கி.பி. 19ஆம் நூற்றாண்டு

பிழைப்பின்பொருட்டு வழக்கிலே இரு புறத்தாரையும் தூண்டிவிட்டு பணம்பறிக்கும் வக்கீல் தொழில்செய்வோரையும், வழக்கு களில் கைநீட்டி பணம்வாங்கும் நீதிபதிகளை இழித்தும் பழித்தும் **கோட்டுப் புராணம்** என்கிற இந்நூலை எழுதியுள்ளார். புராணமென்னும் இலக்கிய வடிவத்தின் பொருளை மாற்றி யமைக்கும் முயற்சிக்கு உதாரணமாக இப் புராணத்தை ஆய்வாளர்கள் முன்வைப்பர்.

இந்நூலினது ஒருசில பாடல்களே ***ஆணல்ட் சதாசிவம்பிள்ளை***க்கு 1886இல் கிடைக்கப் பெற்றுள்ளன. இந்நூல் காண்டம், சருக்கம், பகுப்பு வைத்து பாடப்பெற்றதா அல்லது கோவையா பாடப்பெற்றதா என்பதை அறியு மாறில்லை. நூலினது கிடைக்கப்பெறும் ஒரு பாடல் இங்கு தரப்பெற்றுள்ளது.

கோடொரு களரி யதிலுறுந் துரையோ
  கூத்துப் பார்த்திருந் திடுமூப்ப
ஆடுறுங் குரங்கோ வழக்கர் களாவா
  ரவையிடை யவைகளைக் கொண்டு
நாடொறு மாட்டுங் கயிறுதான் வழக்கு
  நட்டுவப் பணிக்கனோ தரணி
வாடிடு வயிறு வளர்ப்பதற் கெடுத்த
  வஞ்சனை வேடமென் றுணரே

**(பாவலர் சரித்திர தீபகம் – 1886, பக்–41)**

06

## சூதுபுராணம்

சிகிவாகன ஐயர்
**வாலசுப்ரமணிய ஐயர்**
(அப்புக்குட்டி ஐயர்)
(நல்லூர்) கி.பி. 1787(8) – 1863

***அப்புக்குட்டி ஐயர்*** என்னும் **வ(ப)ாலசுப்ரமணிய *ஐயர்*** பாடிய தனிப் பாடல்களோ அல்லது நூல் களோ கிடைத்திலது என்னும் பதிவுகள் உள் ளன. **சூதுபுராணம்** என்கிற இந்நூலினது பாடு பொருள் பற்றிய விபரங்களை அறிய முடிய வில்லை. இருப்பினும் சூதுபுராணமானது பாரதக் கதையில் கூறப்பெற்ற சூதாட்ட நிகழ்வை அடிப்படையாக வைத்துப் பாடப் பெற்ற நூலாக இருக்கலாம் எனும் ஊகத்தை முன்வைக்கலாம்.

07

## சைவமகா புராணம்

நாகேசையர்
**சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார்**
(வட்டுக்கோட்டை)
கி.பி. 1848-07-30 – 1929-10-10

***சிவசுப்பிரமணிய ஐயர்*** தமது இறுதிக்காலத்தில் எழுதிக்கொண்டிருந்த புராண நூல் இதுவாகும்.

இவர், சைவர்களுக்கு உபயோகமாய் விபூதி, உருத்திராக்க மகிமை, சிவாலய தரிசன முறை, பிரம விஷ்ணுக்கள் உற்பத்தி முதலியவற்றைக் கூறுவதும், பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய சைவமகா புராணத்தை மொழிபெயர்த்து இந்நூலை இயற்றிக்கொண்டிருந்தார். ஏறத்தாழ ஆயிரம் செய்யுள்கள் பாடப்பெற்ற நிலையில் சிவசுப்பிரமணியர் இயற்கை எய்தினார் என்றும் இந்நூல் முற்றுப் பெறவில்லை என்றும் பதிவுகள் உள்ளன.

08

## தால புராணம்/ பனங்காய் பாரதம்

நீலகண்டர் **காசிநாதர்**
(அச்சுவேலி)
கி.பி. 1896 – 1854

தாலம் என்பது பனையைக் குறிப்பது. பனைமரத்தின் சிறப்பினைக் கூற எழுந்த புராணமாக இந்நூலினைக் கூறுவர். புராணமென்னும் இலக்கிய வடிவத்தின் பொருளை மாற்றியமைக்கும் முயற்சிக்கு உதாரணமாக இப்புராணத்தை ஆய்வாளர்கள் முன்வைப்பர். இந்நூலின் சிதைவடைந்த ஏட்டுப் பிரதியொன்றை ***ஆனல்ட் சதாசிவம்பிள்ளை*** அவர்கள் தமது ***தமிழ்ப் பாவலர் சரித்திர தீபகம்*** *(1886)* எழுதும் காலத்தில் கண்டுள்ளார்.

09

## திருப்பாலைத்துறைத் தலபுராணம்

சுப்பிரமணிய பாரதி
**நவநீதகிருஷ்ண பாரதியார்**
(தமிழ்நாடு, மாவிட்டபுரம்)
கி.பி. 1889 – 1954

***நவநீதகிருஷ்ண பாரதியார்*** *1917ஆம்* ஆண்டு இலங்கைக்கு வருவதற்கு முன்னர் ***திருப்பாலைத் துறைத் தலபுராண***த்தில் நாட்டுப் படலம் வரை பாடினார் என்கிற பதிவு உள்ளது. இப் புராணத்தை பாடிமுடித்தாரா என்று அறிய முடிவில்லை.

திருப்பாலைத்துறைப் பதியானது தமிழ் நாட்டில் கும்பகோணத்துக்கும் தஞ்சாவூருக்கும் அருகிலுள்ளது. ***கூழங்கைத் தம்பிரான்*** போன்று நவநீத கிருஷ்ண பாரதியார் ஈழத்துத் தமிழறிஞராக கணிக்கப்பெறுவது குறிப்பிடத்தக்கது.

10

## தேவகோட்டைத் தலபுராணம்

கந்தப்பிள்ளை **ஆறுமுக நாவலர்**
(நல்லூர்)
கி.பி. 1822 – 1879

***தேவகோட்டைத் தலபுராணம்*** என்கிற புராணத்தை ***ஆறுமுக நாவலர்*** பாடத்தொடங்கினார் என்பதை ***ஆனல்ட் சதாசிவம்பிள்ளை*** பதிவு செய்துள்ளார். சதாசிவம்பிள்ளையின் பதிவின் படி இணங்க *500* பாடல்கள்வரை ஆறுமுக நாவலர் பாடியுள்ளார் என்று தெரிகிறது.

நாவலரின் வித்தியாசாலைக்கு நாட்டுக் கோட்டை செட்டி அவர்கள் பொருள்கொடுத்து உதவியுள்ளதால் இப்புராணம் பாடியமை சாத்தியம் எனப் **பொ. பூலோகசிங்கம்** அவர்கள் தமது 'ஈழத்துப் புராணங்கள்' என்கிற கட்டுரையில் கூறியுள்ளார்.

ஆறுமுக நாவலர் பாடிய இத்தலப்புராணம் பற்றிய மேலதிக விபரங்கள் அறியுமாறில்லை என்பது கவலைக்குரியது.

11

## தோன்றித் தலபுராணம்

**மன்னம்பாடியார்**
(வண்ணம் பாடியார்,
ஆரியமாநாகர், மன்னன் பாடியார்)
(இந்தியா, மட்டக்களப்பு)
– காலம் தெரியுமாறில்லை

***தோன்றித் தலபுராணம்*** என்கிற தலபுராணத்தை மன்னம்பாடியார் பாடியுள்ளார் என்கிற தகவலைத் தவிர மேலதிக விபரங்கள் அறியுமாறில்லை. இவர், ***தோன்றிச் சிலேடை வெண்பா***வும் பாடியுள்ளார் என்கிற பதிவும் உள்ளது. இதன்படி தோன்றித் தலபுராணம் மன்னம்பாடியாரால் பாடப்பெற்றிருக்க வேண்டும் என்னும் செய்தி வலுவடைகிறது.

இத்தலபுராணம் பாடப்பெற்ற காலத்தினையும் துணியமுடியவில்லை.

12 | **நகுலாசல புராணம்**
சுப்பிரமணிய சாஸ்திரி **ஏரம்பையர்**
(மாதகல்)
கி.பி. 18ஆம் நூற்றாண்டு

***ஏரம்பையர்*** அவர்கள் கீரிமலையில் சில காலம் வசித்துள்ளார் என்கிற பதிவு உள்ளது. அப்போது கீரிமலையிலே ***த. கைலாச பிள்ளை*** யால் நிறுவப்பெற்ற வித்தியா சாலையையும் நடத்தி வந்துள்ளார். பல நூல்களை இயற்றியுள்ள ஏரம்பையர், கீரிமலை நகுலேசரர்மீது ***நகுலாசல புராணம்*** பாடியுள்ளார். தலபுராணமாக கணிக்கவல்ல இந்நூலில் இரண்டு பாடல்கள் மாத்திரமே கிடைக்கப்பெறுகின்றன.

பகுதியுந் தகுதியும் பாலு ணர்த்திடும்
விகுதியும் பெற்றிடை விளங்கி ரட்டியால்
நகுலனைப் பணிபவர் நண்ணு மீறதாம்
புகுமுதல் பெற்றடி பொருந்தி வாழ்வரே

ஐந்துறை நிகமந் தம்பின்
அமைந்திடும் முல்லை யக்கம்
நொந்திடும் இடைபொ றைச்சீர்
நுதலினோ டழகு பெற்று
பைந்தொடி சோழ ராசன்
பாவையும் உருவம் மாறி
முந்திவந் தெழுந்தாள் நீரின்
மும்மடி யழகு பெற்றே

13 | **புரூரவச்சக்கரவர்த்திப் புராணம்**
நா. **ஏகாம்புரம்**
(உடுப்பிட்டி – வல்லிப்பட்டித்துறை)
கி.பி. 1842 – 1875 / 1844 – 1877

***புரூரவச்சக்கரவர்த்திப் புராணம்*** என்கிற பெயர் மாத்திரமே இலக்கிய உலகில் பதிவாகியுள்ளது. இப்புராணமானது பாடப்பெற்றதா அல்லது பாட உத்தேசிக்கப்பெற்றதா என்பதையும் உறுதியாக அறியமுடியாதுள்ளது.

இப்புராணமானது பாடப்பெற்றிருந்தால் பாரதக் கதையிலிருந்து எடுக்கப்பெற்ற பகுதியை அடிப்படையாகக் கொண்டிருந்திருக்கும் எனும் ஊகத்தை முன்வைக்கலாம்.

14 | **மயூரகிரி புராணம் -**

**தெய்வநாயகி திருமணச் சருக்கம்**
நாராயண சாஸ்திரி **விஸ்வநாத சாஸ்திரி**
(அராலி, வட்டுக்கோட்டை)
கி.பி. 1756 – 1845

***மயூரகிரி புராணமானது*** தமிழ்நாட்டைச் சேர்ந்த ***வேதாந்த சுப்பிரமணியபிள்ளை*** என்பவரால் வடமொழியிலுள்ள மயூரகிரி மான்மியத்திலிருந்து தமிழில் பாடப்பெற்றது. இது முருகக் கடவுள்மீது பாடப்பெற்ற புராணமாகும். இது பதின்மூன்று சருக்கங்களையுடையது.

இப்புராணத்தில் ***தெய்வநாயகி திருமணச் சருக்கம்*** என்கிற சருக்கத்தை ***விஸ்வநாத சாஸ்திரி*** அவர்கள் பாடியுள்ளார்கள். இருப்பினும் மயூரகிரி புராணத்துக்கு பொழிப்புரை எழுதி அச்சிட்ட ***ந.ச. பொன்னம்பலபிள்ளை*** அவர்கள் இச்சருக்கத்தை விடுத்து உரையெழுதி *1885ஆம்* ஆண்டு அச்சிட்டுள்ளார்கள். விஸ்வநாத சாஸ்திரி எழுதிய சருக்கத்தினைப் பற்றிய மேலதிக விபரங்களைப் பெறுமாறு இல்லை.

15 | **மார்க்கண்டேய புராணம்**
வல்லிபுரநாதப்பிள்ளை
**கணபதிப்பிள்ளை**
(புலோலி)
கி.பி. 1845 – 1895

சமயப் பெரியார்மீது பாடப்பெற்ற புராணமாக இதனைக் கணிக்கலாம். மார்க்கண்டேயப் புராணத்தை ***வ. கணபதிப்பிள்ளை*** எழுதியுள்ளார் என்கிற குறிப்பு உள்ளபோதும், இந்நூல் கிடைக்கப் பெறவில்லை.

கணபதிப்பிள்ளை அவர்கள் சில வசன நூல்கள் எழுதியுள்ளதை இங்கு நினைவுகூரல் பொருத்தமாகும். இரகுவம்ச காவியத்தை வசனமாக இவர் எழுதியுள்ளார்.

கி.பி. 1875ஆம் ஆண்டு **கணபதிப்பிள்ளை** அவர்களின் **மாணிக்கவாசகரின் புராண வசன** நூல் அச்சேறியுள்ளது. இவற்றின் அடிப்படையில் இந்த மார்க்கண்டேய புராணத்தையும் இவர் வசன நூலாக எழுதியிருக்க வாய்ப்புண்டு எனும் ஊகத்தினை முன்வைக்கலாம்.

16 **மாவைப் புராணம்**

**மாவைச் சுவாமி குமாரசுவாமிக் குருக்கள்**

மாவை

(காலம் – அறியுமாறில்லை)

மாவைக் கந்தன்மீது பாடப்பெற்ற புராணத்தில் ஏறத்தாழ 54 செய்யுள்கள் மாத்திரமே கிடைக்கப்பெறுகின்றன. இவற்றிலே 13 செய்யுள்கள் பாயிரத்துக்குரியதாகவும் ஏனையவற்றில் அனேகமானவை நாட்டுப் படலத்துக்குரியதுமாகக் கருதப்பெறுகிறது. **மாவைப் புராண**த்தின் ஆசிரியராக **மாவைச் சுவாமி குமார சுவாமிக் குருக்களாகக்** கூறுவர்.

கிடைக்கப்பெறும் பாடல்களின் பண்புகளைப் பற்றிய விரிவான செய்திகளை **கனக சபாபதி நகேஸ்வரன்** அவர்கள் தமது **யாழ்ப்பாணத்துத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்** என்கிற நூலிலே தந்துள்ளார்கள்.

துரகசுந்தரி துன்ப மகன்றதும்
அரவத் தார்வதனாரம்ப மேன்மையும்
பெருகு மாமணப் பேறும் பிறவுமே
கரவிலாது கழறுமிக் காதையே

**(பாவலர் சரித்திர தீபகம் – 1886, பக்–41)**

மாவைப் புராணத்திலே எடுத்துக் கூறப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்துத் தரும் பாடலாக இப்பாடல் அமைகின்றது. துரக சுந்தரி என்பது மாருதப்புரவீகவல்லியைக் குறிக்கிறது. கிடைக்கப்பெறும் பாடல்களிலே இது 20ஆவது பாடலாக அமைந்துள்ளது என்பர்.

17 **யோசேப்பு புராணம்**

**கூழங்கைத் தம்பிரான்**

(கனகசபாபதி யோகி,
கலைஞானி, பண்டார சந்நிதி)
(காஞ்சிபுரம், நல்லூர் – யாழ்ப்பாணம்)
கி.பி. 17ஆம் நூற்றாண்டு – 1795

**அர்ச்சியேஷ்டர் யோசேப்பு** அவர்களின் வரலாறு பற்றி **கூழங்கைத் தம்பிரான்** அவர்கள் 21 காண்டங்களில் 1023 பாடல்களால் இப்புராணத்திலே பாடியுள்ளார். சமயப் பெரியார்மீது பாடப்பெற்ற புராணத்துக்கு உதாரணமாக இப்புராணத்தை ஆய்வாளர் கொள்வர். 1859ஆம் ஆண்டு **காசிச் செட்டி**யவர்கள் தமிழ்ப் புலவர்களின் சரிதத்தை (Tamil Plutarch) எழுதும் காலத்திலேயே இப்புராணமானது சிதைவடைந்த நிலையை எட்டிவிட்டது. இப் புராணத்தை கூழங்கைத் தம்பிரான் அவர்கள் தமது நண்பரான யாழ்ப்பாணத்தில் சேவையாற்றிய **மெல்ஹொ பாதிரியார்** அவர்களுக்கு சமர்ப்பணம் செய்துள்ளார்கள்.

கிறிஸ்தவ சமய இலக்கியத்தைச் சார்ந்த இந்நூலிலுள்ள பாடல்களுள், காசிச் செட்டியவர்கள் தமது புலவர் சரித நூலிலே எடுத்துக் காட்டியுள்ள ஐந்து பாடல்கள் மாத்திரமே இன்று எமக்குக் கிடைக்கப் பெறுகின்றன.

இந்தப் பாடல்கள் இரண்டாவது காண்டமான ஆற்றுப் படலத்தைச் சேர்ந்ததாகும்.

பயம்புவிக்கருள் பயோதரமியாவுமெந்திரையாற்
பயங்கொள்வேலையிற் பரந்துவாரிதியிடை படிந்து
பயங்களானவை பருகியப்பரவையின் வடிவாய்ப்
பயங்கள்னோரகை கொண்டிடப்பரந்ததம்பரமேல்

பரவுமால்கருபங்களோடெட்டொடுவானைத்
புரவுவேந்தராள் புவியினைப்போர்த்தெனவிருண்டு
விரவுகின்றது விண்ணெனும்பந்தரின் கண்ணே
யிரவுநேர்கரும் படாத்தினால் விதாஞ்செய்தென்ன

திருவுலாங்கலைப் பிலிப்புமேலோன்குருச்சிந்தை
மருவுஞானநல்லொளியென மின்னிமற்றொன்வாய்ச்
சுருதியாமெனத் தொனித்தின்னோனுயிர்க்
கருடொலைமாக்
கருணையாமெனப் பொழிந்தது காரிருட்புயலே

தேவதேவநம்பராபரன் சீரணிசிறந்த
தாவிலாத்திருநாமமே தயங்குறுஞ்சுத்த
மேவிடுஞ்சியோன்வரைக்குமஞ்சனம்புரிவிதம்போ
லோவிலாமழை பெய்தனவுலகுளோருவப்ப

இறும்பினுச்சியிற் பெய்திடும்புனலெல்லாமிழிந்தே
யெறும்புசீயம்புல்லிருங்குடர்வடியெலாமீர்த்து
நறும்பணைத்தரளங்களைக்கொழித்துடனடந்து
வறும்புனத்திடையுலாயது கடல்புரைவாவி

[Tamil Plutarch – **சைமன் காசிச்செட்டி, 1859, பக்.** 49]

| | | |
|---|---|---|
| 18 | **வலைவீசு புராணம்**<br>**முத்துக்குமாரர்**<br>(வட்டுக்கோட்டை)<br>கி.பி. 18ஆம் நூற்றாண்டு – 1779 | |

முத்துக்குமாரர், ***கஞ்சன் காவியம்*** மற்றும் ***வலைவீசு புராணம்*** என்கிற இரண்டு நூல்களைச் செய்துள்ளார் என்கிற பதிவுள்ளது. இவ்விரண்டு நூல்களும் கிடைக்கப்பெறவில்லை என்பது கவலைக்குரியது.

***சைமன் காசிச்செட்டி*** அவர்கள் *1837ஆம்* ஆண்டு *Journal of the Royal Asiatic Society, vol. IV* இல் எழுதிய கட்டுரையொன்றில் வலைவீசு புராண நூலின் சாரம் தரப்பெற்றுள்ளது. இதன்படி இப்புராணமானது திருவிளையாடற் புராணத்தில் சிவன் மீனவராக வருகின்ற புராண கதையை அடிப்படையாகக் கொண்டது என்பது தெளிவாகும்.

***தஞ்சாவூர் சரஸ்வதி மகால் நூலகத்தில்*** வலைவீசு புராண ஓலைச்சுவடி ஒன்று காணப் பெறுவது குறிப்பிடத்தக்கது. *299ஆம்* இலக் கத்திலுள்ள இவ்வோலைச் சுவடியில் *190* ஏடுகள் காணப்பெறுகின்றன. இவ்வோலைச் சுவடியின்படி இந்த வலைவீசு புராணத்தை எழுதியவர் ***காங்கேயன்*** என்னும் புலவர் என் பதை அறியமுடிகிறது.

***சிவராத்திரி புராண***த்தை ***வரத பண்டிதர்*** மற்றும் ***நெல்லைநாதர்*** ஆகியோர் எழுதியுள்ளனர். ***ஏகாதசி புராண***த்தை ***வரத பண்டிதர்*** மற்றும் ***சிவச்சுப்பிரமணிய சிவாச்சாரியார்*** ஆகியோர் எழுதியுள்ளனர். இவற் றைப் போன்று வலைவீசு புராணத்தையும் முத்துக்குமாரர் மற்றும் காங்கேயன் ஆகியோர் எழுதியுள்ளனர் என்றே கருத வேண்டியுள்ளது.

| | |
|---|---|
| 19 | **வியாக்கிரபாத புராணம்**<br>**வைத்தியநாத தம்பிரான் (முனிவர்)**<br>(அளவெட்டி)<br>கி.பி. 17ஆம் நூற்றாண்டு |

***வைத்தியநாததம்பிரான்*** அவர்கள், சிதம்பரத்தில் வாழ்ந்த காலத்தில் சமஸ்கிருதத்தில் காணப் பெற்ற ***வியாக்கிரபாத இருஷி***யின் சரிதத்தைத் தமிழில் மொழிபெயர்த்துப் பாடியுள்ளார். சமயப் பெரியார் ஒருவர்மீது பாடப்பெற்றுள்ள புராணத்துக்கு உதாரணமாக இந்நூலினை ஆய்வாளர்கள் முன்வைப்பர். வைத்தியநாத தம்பிரான் மடக்கு மற்றும் திருக்கு முதலான பாடல்கள் பாடவல்லவர் என்கிற குறிப்பும் உள்ளது. வியாக்கிரதபாத புராணத்திலிருந்து எமக்கு இரு பாடல்கள் கிடைக்கப்பெறுகின்றன.

இவர், கண்டிக்குச் சென்று அங்கு இராச்சி யம் செய்து கொண்டிருந்து ***முத்துச்சுவாமி மகா ராசாமீது பிரபந்தம்*** பாடியுள்ளார் என்கிற பதிவும் கிடைக்கப்பெறுகிறது.

மாதங்க வரைவி லேந்தி மாலம்பாற் புரங்க ளெய்த
மாதங்க மொருபா லுற்ற வானவன் மைந்தன் வாழும்
மாதங்க மார்பி னான்றன் மருகனான் மங்கை முக்கண்
மாதங்க முதத்தி னான்றன் மலர்ப்பதம் வழுத்து வோமே

ஏதமில் கார ணத்தாற் சராசர மெவையு மாகி
ஆதியாய் நடுவா யீறா யநாதியா யருளா யோங்குஞ்
சோதியோர் வடிவ மாகிச் சுடர்தொழச் சுடர்சேர் பொன்னின்
போதமார் சபையுளாடும் புனிதனைப் போற்றல் செய்வாம்

**[தமிழ்ப் புலவர் சரித்திரம் –**
**அ. குமாரசுவாமிப்புலவர், 1916, பக்.** 189]

## 08. மறைந்துபோனவையாக கருதக்கூடியவை

பின்வரும் 6 நூல்களின் விபரங்கள் முன்னர் தரப்பெற்றுள்ளன. அங்கு காண்க.

| | |
|---|---|
| 20 | **கதிர்காம புராணம்** |
| 21 | **பிரமாண்ட புராணம்** |
| 22 | **வராக புராணம்** |
| 23 | **விநாயகசட்டிப் புராணம்** |
| 24 | **தென்கோயிற் புராணம்** |
| 25 | **சிவராத்திரிப் புராணம்** |

## 09. நிறைவாக

மறைந்துபோன ஈழத்துப் புராணங்களாக இங்கு 25 நூல்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இது இறுதியான பட்டியல் என்று கூறமுடியாது. மறைந்ததாகக் கருதப்படும் நூல் எங்கோ ஒளிந்து கொண்டிருந்து தன்னை எதிர்காலத்தில் வெளிப் படுத்தி எம்மையெல்லாம் களிப்பில் ஆழ்த்தக்கூடும். அதேபோன்று இப்பட்டியலில் இன்னும் நூல்களின் பெயர்களும் சேரக்கூடும். மறைந்துபோன நூல்கள் பற்றிய பிற செய்திகள் ஏதும் கிடைக்கப்பெறகூடும். இவையனைத்தும் ஆரோக்கியமான நகர்வுகளே.

மறைந்துபோன ஈழத்துப் புராணங்கள் போன்று பிற இலக்கிய வகைகளுக்கும் இத்தகு முயற்சிகள் மேற்கொள்ளப்பெறல்வேண்டும்.

மறைந்துபோன நூல்களின் தாக்கத்தால் ஏற்படும் கவலையுணர்ச்சி மேலிட்டுள்ள நிலையிலும் கீழ்வரும் எண்ணம் மனதில் உதைக்கின்றது.

ஈழத்தில், வடக்கு - கிழக்கு - மத்திய என பரந்துபட்ட பிரதேசங்களில் பாடப்பெற்ற புராணங்கள் மறைந்துள்ளன. இயற்கை அழித்துவிட்டது, போர் அழித்துவிட்டது என அத்தியாயத்தை முடிக்கமுடியாது.

ஆறுமுகநாவலர், கூழங்கைத் தம்பிரான், அப்துல் காதிர், நா. கதிரைவேற்பிள்ளை போன்ற ஜாம்பவான்கள் பாடிய புராணங்களும் மறைந்துள்ளன. இவர்களில் பதிப்புத் துறையில் வாலாயம் கொண்டவர்களும் உளர். அவர்களும் தாம் பாடிய புராணங் களை அச்சில் பதிக்கவில்லை. அத்துடன் அவர்களுக்கென்று சீடப் பரம்பரையும் இருந்துள்ளது.

பன்னீராயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்கள்கொண்ட புராணம் இன்னமும் ஓலைச் சுவடியில் உறங்கியவண்ணம் உள்ளது.

ஓர் இலக்கியம் - ஓர் நூல் மறைந்துபோகாமல் காலம் கடந்து நிலைப்பதற்கு எத்தகு முயற்சிகள் செய்தல் வேண்டும்?

உள்ளத்தில் உண்மை ஒளியுடன் இலக்கியம் செய்தல் வேண்டும்.

காலத்திற்கு தெரியும் எவற்றை காலம்தாண்டி கடத்த வேண்டுமென்று.

எந்தவொரு ஆர்ப்பாட்டங்களையோ ஆரவாரங் களையோ செய்யத்தேவையில்லை.

காலம்தான் பதில்.

சிறுகதை

# உறவுகளே அற்றுப் போகும்போது...!

சங்கர சுப்பிரமணியன்
(அவுஸ்திரேலியா)





பகல் பன்னிரெண்டு மணி இருக்கும். வானத்தில் சூரியன் மறைந்தும் வெளிவந்தும் ஆட்டம் காட்டிக் கொண்டிருக்க ஜூலை மாதக் குளிர் வாட்டிக்கொண்டிருந்தது. மெல்பனில் நடுத்தரத்துக்கும் மேலுள்ள மக்கள் வாழக்கூடிய பகுதியில் வாழும் நடுத்தர வயது தம்பதியர் குளிர்தாங்க முடியாமல் வீட்டில் சாளரங்களை எல்லாம் திரைகளால் மூடி சூடேற்றும் சாதனத்தை ஓடவிட்டபடி அமர்ந்திருந்தனர்.

திடீரென அவர்கள் வீட்டின்முன் கார் வந்து நிற்கும் சத்தம் கேட்கவும் திரைச்சீலையை விலக்கிப்பார்த்த ஜான் மனைவி மேரியிடம்,

"ஹனி, நம் வீட்டு ட்ரைவையில் ஒரு கார் வந்து நிற்கிறது" என்றார்.

"யாராவது திரும்புவதற்காக நம் பாதையை பயன்படுத்துவார்கள், டியர்" என்றாள் மேரி.

"இல்லையில்லை யாரோ காரிலிருந்து இறங்குகிறார்கள்"

"என்ன விலையுயர்ந்த காரிலேயே வந்திருக்கிறாய்? யாராவது நண்பனுடைய காரை ஆசைக்கு ஓட்டிப்பார்க்க எடுத்து வந்தாயா?" என்று கேட்டாள்.

"ஐயோ அம்மா அப்பா, ஒவ்வொருத்தராக கேள்வியை கேளுங்கள். உங்கள் ஆர்வமும் பிரமிப்பும் எனக்கு புரிகிறது" என்றவன் பெற்றோரைப் பார்த்து,

"உங்கள் இருவருக்குமான பதில் இந்த விலையுயர்ந்த கார் என்னுடைதுதான். நான் இதை விலைக்குத்தான் வாங்கியிருக்கிறேன்" என்றான்.

வியப்புக்கு மேல் வியப்படைந்த பெற்றோர் சும்மா விளையாடாதே. இன்னும் படித்தே முடிக்கவில்லை. நீ பார்க்கின்ற பீட்ஷா டெலிவரியில் வரும் வருமானத்தை வைத்து இவ்வளவு விலையுயர்ந்த காரை எப்படி உன்னால் வாங்க முடியும் என்றனர் பெற்றோர்.

அவர்கள் பேசிக்கொண்டிருந்தபோதே அவர்களது மகன் ஸ்டீவ் காரிலிருந்து இறங்கி வந்து அழைப்பு மணியை அழுத்த கதவைத் திறந்தார் ஜான். ஸ்டீவ் கல்லூரியில் படித்துக் கொண்டே ஒரு பீட்ஷா கடையில் டெலிவரி பாயாகவும் வேலை செய்கிறான்.

கதவைத்திறந்த ஜான், "என்ன ஸ்டீவ் இன்னும் உனக்கு வேலை நேரம் முடியவில்லையே?

அதற்குள் வந்து விட்டாய்? அதுவும் விலையுயர்ந்த காரிலிருந்து இறங்குகிறாய்?"

என்று அப்பா கேட்ட கேள்விக்கு பதில் சொல்லுமுன்னே அம்மா தன் பங்குக்கு,

"நான்தான் வாங்கியிருக்கிறேன். இதன் விலையைக் கேட்டால் இன்னும் நீங்கள் அதிர்ந்தே போவீர்கள்" என்றான்.

"என்ன நீ புதிர்மேல் புதிர் போடுகிறாய். எப்படிப் பார்த்தாலும் நாற்பது ஆயிரம் டாலர் இருக்குமே? என்றார் ஜான்.

"நீங்கள் சொல்வது சரிதான் டாட். ஆனால் நான் இதை வெறும் ஐந்தாயிரம் டாலருக்குத்தான் வாங்கியிருக்கிறேன். இதுதான் உண்மை. நம்புங்கள்" என்று ஸ்டீவ் பதில் சொன்னான்.

இதை சற்றும் எதிர்பாராமல் நம்பவும் முடியாமல் வாயடைத்து நின்ற பெற்றோரிடம்

விளக்கினான் ஸ்டீவ். இதே தெருவில் எமிலி என்ற மருத்துவர் வசிக்கிறார். அப் பெண் மணிக்கும் உங்கள் வயதே இருக்கும். அவர்கள் வீட்டுக்கு வாடிக்கையாக நான்தான் பீட்ஷா டெலிவரி செய்வேன்.

அந்த பழக்கம்தான். ஒரு தாய் தனது மகனுடன் பேசுவதுபோல் அன்பாக பேசு வார்கள். கிறிஸ்துமஸ் போன்ற நாட்களில் வீட்டுக் குள்ளே அழைத்து கேக் எல்லாம் கொடுத்து உபசரிப்பார்கள் என்று சொல்லி வரும்போதே,

“கேக்கெல்லாம் கொடுப்பது சரி. அதற்காக விலையுயர்ந்த காரை இந்த விலைக்கா கொடுப் பார்கள்?” என்று கேட்டாள் மேரி.

“அதைத்தான் மாம் என்னாலும் நம்ப முடியவில்லை. கொஞ்சநாளாகவே கலகலப் பாக இருக்கும் அவர்கள் எதையோ பறி கொடுத்ததுபோல் இருக்கிறார்கள்”

“அப்படியா?”

“ஆமாம், மாம். அப்போதுதான் நான் ஒருநாள் பீட்ஷா டெலிவரி செய்தபோது இந்த காரைக்காட்டி இந்தகார் உனக்கு பிடித்திருக் கிறதா?” என்றார்கள்.

நான் ஆம் என்றதும் அப்படியானால் நீயே எடுத்துக்கொள் என்றதும் நான் என்னிடம் இந்த காரை வாங்கும் அளவு பணமில்லையே என்றதும் உன்னிடம் எவ்வளவு உள்ளது என்று கேட்டார்கள். நான் மூவாயிரம் இருக்கிறது என்றதும் ஐயாயிரத்துக்கு வாங்கிக்கொள் என்றார்கள்.

நான் சற்று யோசித்ததும் திரும்பவும் கார் பிடித்திருக்கிறதா என்றார்கள். நான் ரொம்ப ரொம்ப பிடிச்சுருக்கு என்றேன். அப்படின்னா நீயே எடுத்துக்க என்றதும் மீதம் இரண்டாயிரம் இல்லையே என்றேன். பரவாயில்லை உன்னால் எப்போது கொடுக்கமுடியுமோ அப்போது கொடு. கொஞ்சம் கொஞ்சமாக கொடுத்தாலும் பரவாயில்லை என்று சொன்னார்கள்.

“அப்படியா? அவர்கள் எங்கே இருக்கிறார்கள்? நான் அவர்களைப் பார்க்க வேண்டுமே.” என்றாள் மேரி.

“நம்ம தெருவில்தான் அம்மா. எட்டு வீடு தாண்டியுள்ளது. வீட்டு எண் இருபத்தெட்டு அவர்கள் பெயர் எமிலி” என்று சொல்லியபடிதன் அறைக்கு சென்றான்.

சில தினங்கள் சென்றன. மேரி எமிலியின் வீட்டுக்கு சென்றாள். சென்றவள் தன் பெயர் மேரி என்றும் தான் ஸ்டீவின் அம்மா என்று அறிமுகப் படுத்தியதும் முகம்மலர்ந்த எமிலி மேரியை உள்ளே அழைத்து உபசரித்தாள். அவர்கள் சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்தபோது மேரி,

“ஸ்டீவ் சொன்னான். நீங்கள் விலையுயர்ந்த காரை வெறும் ஐந்தாயிரத்துக்கு கொடுத் திருப்பதாக சொன்னான், உண்மைதானா?” என்றாள்.

“உண்மைதான் மேரி, அதிலென்ன சந்தேகம்?”

“சந்தேகமொன்றும் இல்லை. எப்படியும் நாற்பது ஐம்பதாயிரத்துக்கு விற்கலாம். குறைத்து குறைத்து விற்றாலும் முப்பாதி யிரத்துக்கு விற்றிருக்கலாம். ஆனால் நீங்கள் ஐயாயிரத்துக்கு கொடுத்திருக்கிறீகள். அதிலும் மூவாயிரத்தைப் பெற்றுக்கொண்டு மீதிப் பணத்தை மெதுவாக கொடுக்கச் சொல்லி யிருக்கிறீர்கள். அதைத்தான் நம்ப முடிய வில்லை” என்றாள் மேரி.

கொஞ்ச நேரம் யோசித்தபடியே அமைதியாக இருந்த எமிலி பேசத் தொடங்கினாள்.

“உயிருள்ள உறவுகளே அற்றுப் போகும் போது உயிரற்ற பணமும் பொருளும் நமக்கு எதைத் தந்துவிடும்? ஸ்டீவுக்கு நான் இக்காரை இலவசமாகவே கொடுத்திருப்பேன். தன்மான முள்ள அவன் வாங்கவே மாட்டான். அவன் எனக்கும் மகன் போலத்தான். அதனால்தான் கொடுத்தேன்” என்று சொல்லிக் கொண்டி ருக்கும்போதே அவளது கண்களில் இருந்து கண்ணீர் முத்துக்கள் தெறித்துச் சிதறின.

இதை சற்றும் எதிர்பாராத மேரி எமிலியின் கண்களை துடைத்து விட்டவள் அவளது





கவிதையோ, கதையோ, நாடகமோ, கட்டுரையோ – உருவத்தில் அது எப்படியிருந்த போதிலும், இதை இலக்கியம் என்று சொல்வதற்கு இரண்டு தகுதிகள் இருக்கவேண்டும். முதலாவது அதில் ஒரு இலக்கு இருக்க வேண்டும். அந்த இலக்கு மனிதனுடைய அகத்தையோ, புறத்தையோ உயர்த்துவதாக அமைய வேண்டும். மற்றது, அதைச் சொல்லும் விதம், நடை, கட்டுக்கோப்பு ஆகியவற்றில் சுவை இருக்கவேண்டும். இந்த இரண்டில் ஏதாவது ஒன்று இல்லாமற் போனாலும் அதை இலக்கியம் என்று சொல்ல முடியாது.

– வரதர்




கரங்கள் இரண்டையும் ஆறுதலாக இறுகப் பற்றினாள். கொஞ்சநேர அமைதிக்குப்பின் எமிலியே தொடர்ந்தாள்.

கிறிஸ்டோபர் அதுதான் என்கணவர் தன் அலுவலகத்தில் பணிபுரிந்த அவரைவிட இருபது வயதுகுறைந்த அவரது செயலாளராக இருந்த பெண்ணுடன் சென்றுவிட்டார். இனி வரமாட்டார் என்றாள். மீண்டும் கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்தபடி காரை விற்று பணத்தை அனுப்பச் சொன்னார் என்றவள் மீண்டும் அமைதியானாள்.

என்னிடம் சரியாக இல்லாத ஒருவருக்காக நான் மட்டும் ஏன் சரியான விலைக்கு காரை விற்று பணத்தை அனுப்ப வேண்டும். எனக்கு அப்படிச் செய்ய விருப்பமில்லை. அதனால் கிடைத்த விலைக்கு விற்று பணத்தையும் அவருக்கு அனுப்பிவிட்டேன். மறுபடியும் கண்களில் இருந்து கண்ணீர் வடிந்தோட அழ ஆரம்பித்தாள்.

மேரிக்கு இதைக்கேட்டதும் கவலையால் மனம் வாடியது. ஆறுதல் படுத்தும்வகையில் எழுந்து சென்று அவளைக் கட்டியணைத்து கண்ணீரைத் துடைத்து முதுகைத் தடவிக் கொடுத்தபடியே அமைதியாக இருங்கள் என்று சொன்னவள் கொஞ்சநேரம் கழித்து திரும்பவும் வந்து அமர்ந்தாள்.

எமிலியின் முகம் கலங்கமற்று தெளிவுற்றிருந்த நிலையில் பேச ஆரம்பித்தாள். இன்னும் சில மாதங்களில் இந்த வீட்டை விற்றுவிட்டு ஸ்பெயினில் இருக்கும் என் உறவுகளுடன் வாழப்போகிறேன். அப்படியே போலந்தில் இருக்கும் என் மகளின் அருகில் இருந்த படியும் இருக்கும் என்றாள்.

எமிலி பேசிமுடித்ததும் மேரி எமிலியிடம் ஸ்பெயின் சென்றாலும் எப்போதெல்லாம் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் ஆஸ்திரேலியா வாருங்கள். இங்கு ஸ்டீவ் என்ற மகனும் மற்றும் உறவுகளாக நாங்களும் இருக்கிறோம் என்று கூறி விடைபெற்று வீடு திரும்பினாள்.

நடைபாதையில் நடந்து சென்று கொண்டிருந்த மேரி தனக்குத்தானே ஏதே பேசிக்கொண்டு போவது தெரிந்தது. அவள் என்ன பேசிக்கொண்டு போனாள் என்று எனக்குத் தெரியாது. ஆனால் என் மனதில் ஏதோ வந்து அழுத்துவதுபோல் இருந்தது.

அத்தோடு கண்டசாலா பாடிய உலகே மாயம் வாழ்வே மாயம், நிலையேது நாம் காணும் சுகமே மாயம், காணும் சுகமே மாயம்,

'உலகே மாயம் வாழ்வே மாயம்' என்ற அந்த பாடல் நினைவில் தோன்ற என்னையறியாமல் கண்கள் கசிந்தன.

○○○

# ஒரே கோட்டில்

சர்வதேச தரைகளில்
யுத்தங்கள்
அப்பாவிகளின்
மரண ஓலங்கள்

நிறுத்துக உடன் நிறுத்துக

உணர்ச்சிப் பெருக்கை குழைத்து
பீறிட்டுப் பாயும்
கவிதைகள்

நவீன ஆயுதங்களுக்கு
இணையான
கவிதை வீச்சுகள்

படிக்கும் உள்ளங்களை
கவிதைகளோடு
இணைந்து
எதிர்ப்பு ஆர்ப்பாட்ட
ஊர்வலத்தில்
அழைத்துச் செல்லும்
ஆற்றல் பெற்ற வரிகள்

நீ
தலைநிமிர்ந்து
நிற்கிறாய் -
உன் வரிகளால்

அந்த நீயே
நச்சுப்புகை நிரப்பிய
உன் பேனாவை
ஆயுதமாக்கி இங்கே
குண்டு மழை பொழிகிறாய்

இறந்து போகின்றன
இறந்துதான் போகின்றன
எத்தனை எத்தனையோ
இதயங்கள்

உன் சகோதரன்
மூச்சுத் திணறிக்
கொண்டிருக்கிறான்

நீ
அவன் இறைச்சியை
தின்று கொண்டிருக்கிறாய்

ஆயுதங்கள் வேண்டாம்
என
அங்கே கெஞ்சும்
நீ
இங்கே
ஆணவ ஆயுதத்தை
கையிலேந்திக் கொண்டு

உன் சகோதரன்
காயப்பட்டுக் கிடக்கிறான்

உன் காயமோ பூரிப்பில் !

நீயும்
முறைகேடாய்
இங்கே
யுத்தம் புரிந்து
கொண்டிருக்கிறாய்
என்பதை
நீ அறியாமலேயே
இருக்கிறாய்

குண்டு போடும்
நாட்டுக் கெதிராக
ஒரு விதியும்
உனக்கென ஒரு விதியும்
வைத்துக் கொண்டிருக்கிறாய்

ஆயுதப் போர் நடத்தும்
கொடுங்கோலனும்
எழுத்துப் போர்
நடத்தும்
நீயும்
ஆண்டவனிடம்
நிற்பது
ஒரே கோட்டில்தான்
ஒரே கோட்டில்தான் !

– என். நஜ்முல் ஹுசைன்




**பா**தையில் போகும் யாருடனாவது ஏதாவது கதைக்கவேண்டும் என்பதற்காக ஜெமீலா உம்மா கேட்டுக்கு வெளியே எட்டிப் பார்த்தாள். அப்போது அங்கே உம்மு சல்மா வந்து கொண்டிருந்தாள்.

“தாத்தா. அசரு மல்லிகயும் பூத்திருக்கு. இன்னும் அசருக்கு பாங்குச் சத்தம் கேக்க இல்லயே?”

“அத என்னத்துக்குக் கேக்கிறாய் தங்கச்சி? மோதினாருக்கு மருந்தில்லாத நோயொண்டு வந்து படுத்த படுக்கயா கெடக்குறாரு. தாரோ அவர்ட மருமகன் பொடியன் எடக்கெட வந்து பாங்கு செல்லிட்டு போறான் போல. அதுதான் சரியான வக்துக்கு பாங்கு கேக்காமல் ஈறத்துக்குக் காரணம்.”

“யா அல்லா! அந்த சாலிஹான மனிஷனுக்கு அப்பிடி ஒரு நோய் வந்திட்டுதா?”

உடனே உம்மு சல்மா. ஜெமீலா உம்மாவுக்கு மிகவும் அருகே வந்து மோதினாருக்கு வந்திருக்கும் நோயை காதோடு காதாகச் சொல்லி வைத்தாள்.

“அஞ்சி நேரமும் பாங்கு செல்லி மனிஷரப் பள்ளிவாசலுக்கு அழச்சி, இகாமத்துச் செல்லி தொழுக செறப்பா நடக்கிறத்துக்கு ஒதவி செஞ்சவரு. அவருக்கு இப்பிடி ஒரு சோதனயா?”

“தங்கச்சி, அல்லா மனிஷரப் பலமாதிரி சோதிச்சுறான், செல்வத்தத் தந்தும் சோதிச்சுறான். தராமலும் சோதிச்சுறான், புள்ள குட்டியத் தந்தும் சோதிச்சுறான். தராமலயும் சோதிச்சுறான். நோய் நொம்பலங்களத் தந்தும் சோதிச்சுறான். தராமலயும் சோதிச்சுறான்.”

“அது சரி தாத்தா. இப்ப அவர் எங்க ஈக்குறார்?”

“அவர், அவர்ட ஊட்டுலதான் ஈக்குறாரு. நானும் சும்மா பெய்த்து அவரப் பாக்கிறமாதிரி தலயக் காட்டிட்டு வந்தேன். ஐயோ! அவர் ஈந்தத்துல அரைவாசியாகி ஈக்குறாரு.”

“பாவம், மனிஷென். நானும் நாளைக்காவது பெய்த்து. அவரச் சொகம் விசாரிச்சிப் போட்டு வரவேணும்.”

“தங்கச்சி, நீ அங்க போகாதே. அவர்ட புள்ள குட்டிகளே அவருக்கிட்ட நெருங்கப் பயப்படுறாங்க. தங்கச்சி அப்ப நான் பெயித்திட்டு வரவா?”

மேலும் பத்துப் பேருக்காவது மோதினாருக்கு ஏற்பட்டிருக்கும் நோயைப் பற்றிய தகவலை சொல்லிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் அவள் தனது வேகத்தை கூட்டி நடக்கத் தொடங்கினாள்.

அவள் போகும்வரை கேட் அருகே சற்றுத் தாமதித்த ஜெமீலா உம்மா வீட்டுக்குள் வந்து கதிரையொன்றில் அமர்ந்துகொண்டாள். அதன் பிறகு பக்கத்தில் இருந்த வெற்றிலைச்செப்பை எடுத்துத் தனது மடியில் வைத்தவாறு. வெற்றிலைச் சுருளொன்றை செய்வதற்கு ஆயத்தமானாள். அப்போது அவ்விடத்துக்கு குர்ஆன் மத்ரசாவுக்குப் போவதற்குத் தயாராய் அவளது பேரன் ஆக்கில் வந்து சேர்ந்தான்.

“உம்மம்மா. அங்க பாருங்க, அந்தக் குந்து காலிகள. ஏன் உம்மம்மா அதெல்லாம் குந்திக் குந்திப் பறக்கிற?”



“மகனே, அதெல்லாம் குந்திக் குந்திப் பறக்கிறத்தாலதான் அதுகளுக்கு குந்துகாலிகள் எண்ட பெயரே வந்தீக்குதுபோல. ஆனா நாங்க சின்ன வயசில அதுகளுக்கு நாச்சியாரூட்டுக் கோழி எண்டுதான் சென்னோம்.”

“உம்மம்மா, அதெல்லாம் பறக்கிற பற வகளாச்சே. நீங்க எப்பிடி அதுகளுக்குக் கோழி எண்டு சென்னீங்க?”

“கண்மணி நாயகம் பாத்திமா நாச்சியாரவங்க ஒரு நாள் கோதுமக்கதிர்கள எடுத்துக் காய வச்சீக்குறாங்க. அப்ப பக்கத்துல ஈந்த கோழிகள் எல்லாம் அந்தக் கோதுமக்கதிர்களத் தின்ன வந்தீக்குதுகள். இதைக் கண்ட கண்மணி பாத்திமா நாச்சியாரவங்க பக்கத்துல ஈந்த கல்லுகள எடுத்து அந்தக் கோழிகளுக்கு அடிச்ச. கோழிகளுட கால்கள் நொண்டியாப் பெய்த்திட்டுதாம். அதுக்குப் பெறகு அந்தக் கோழிகளுட பரம்பரையே இப்பிடி குந்திக் குந்தித் திரிஞ்சிதானாம் எரை தேடுறதாக ஏண்ட உம்மம்மா எனக்குச் செல்லித் தந்தீக்குறா.”

“உம்மம்மா தார் அந்தப் பாத்திமா நாச்சியார்?”

“ஐயோ! அதுகூட இந்தக்காலத்துப் புள்ள களுக்குத் தெரியாமல் ஈக்குதே. ஆனா இந்தப் புள்ளகள் சரோஜா தேவி தாரெனெண்டு கேட்டா அழகாப் பதில் செல்லுவாங்க.”

“உம்மம்மா, சரி, சரி பாத்திமா நாச்சியார் தாரனெண்டு இப்ப எனக்குச் செல்லுங்களே?”

“அவங்கதான் முகம்மது நபி (ஸல்) அவங்கட திருமகளார். முஸ்லிம் பொண்டுகள் எல்லாரும் அவங்களப் பின்பத்த வேணுமெண்டு இஸ்லாம் மார்க்கம் எங்களுக்குச் செல்லித் தந்தீக்குது. சரி. சரி. நேரமும் பிந்திட்டுது. நீங்க அவசரமா மத்ரஸாவுக்குப் பெய்த்து ஓதிட்டு வாங்கோ.”

சிறுவன் அங்கிருந்து நகர அவள் பேச்சோடு பேச்சாகத் தயாரித்த வெற்றிலைச் சுருளை வாயில் போட்டு மென்றவாறு ஏதோ சிந்தனையில் ஈடுபட்டாள்.

“ஆயிரத்துத் தொளாயிரத்து அம்பத்தெட்டு தமிழ் சிங்கள இனக் கலவரத்தோட, யாழ்ப்பாணத்தில ஈந்து இங்க வந்து, எங்கட ஸ்கூலுகளில் படிப்பிச்ச வாத்திமார் அவங்கவங்கட ஊர் தேஷங்களுக்குப் பெய்த்துச் சேந்திட்டாங்க. அப்பதான் நாங்க எங்கட ஊர் புள்ளகளுட படிப்புக்கு என்ன நடக்கும் எண்டு யோசிக்கத் தொடங்கினோம். என்னத்தயோ அந்த யாழ்ப்பாணத்து வாத்திமாருக்கு நன்ம கெடச்ச, அவங்களுட்ட படிச்ச எங்கட புள்ளகள் ஊர் ஸ்கூலுகளுக்கு வாத்திமாரா வந்து சேந்தாங்க. காலம் வேகமாக ஓடிட்டது. நாங்க இது இப்போ ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தெட்டுல வாழ்ந்து கொண்டிக்குறோம். இந்த முப்பது வருஷத்துக்குள்ள எங்கட சமூகத்துக்குள்ள பெரிய மாத்தமொண்டு நடந்தீக்குது. அந்தக் காலம் நாங்க அரபயும், அரபுத் தமிழயும் மட்டும்தான் படிச்சோம். அது எங்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தயும், நல்லொழுக்கங்களயும் மட்டும்தான் வெளங்கிக் கொள்ள ஓதவிச்சிது. ஆனா இண்டய புள்ளகள் தமிழ், சிங்களம், இங்கிலீஷ். அரபு எண்டு பல பாஷைகளப் படிக்கிறாங்க. அது மூலமா முஸ்லிம்கள் மத்தியில் ஒரு மறுமலர்ச்சி இந்த முப்பது வருஷத்துக்குள்ள வந்திட்டுது. எங்கட மகனாரும் யுனிவசிட்டியொண்டுல சேந்து டொக்டரா வாரத்துக்கு படிச்சிற அதால தானே. சரி. மோதினார்ட நோயப் பத்தி அவருட்டயாவது விஷாரிச்சிப் பாக்க வேணும்,”

அதன்படி அவள் தனது மகன் ஆசிக்கின் அறைக்குச் சென்றாள். அங்கே அவன் புத்தகமொன்றை எடுத்து படித்தவண்ணம் இருந்தான். தனது தாயைக் கண்டதும் அவனே பேச்சுக் கொடுத்தான்.

“உம்மா என்ன விஷயம்? நீங்க என்ன சரி ஒரு விஷயத்த எனக்கிட்ட அறிஞ்சி கொள்ள வந்தீக்கிற மாதிரி ஒங்கட மொகம் எனக்குச் செல்லுது.”

“நீ சரி மகன். எங்கட மோதினார் படுத்த படுக்கயா ஈக்குறாராம். அவருக்கு வந்தீக்குறது மருந்தில்லாத நோயொண்டாம்.”

“உம்மா, அதென்ன அது, மருந்தில்லாத நோய்?”

ஜெமீலா உம்மா அந்த நோயின் பெயரைச் சொல்லக்கூட அச்சம் கொண்டவளாய், தனது மகனின் காதருகே நெருங்கி மெல்லிய குரலில் அதைச் சொல்லி வைத்தாள். அதைக் கேட்க ஆசிக் சிரித்துவிட்டான்.

“ஐயோ உம்மா, இந்த நோய்களுக்கெல்லாம் இப்ப மருந்து கண்டு பிடிச்சிட்டாங்க. ஆரம்பத்தி லேயே நோயக் கண்டு பிடிச்சா, லேசா அந்த நோயக் கொணமாக்கிக் கொள்ளலாம்.”

“அப்பிடியாக ஈந்தா ஓங்களுக்கு வசதிப் படுற மாதிரி ஒரு நேரத்துல மோதினாரூட்டுக்குப் பெய்த்து, அந்த நோய இப்ப கொணமாக்கலாம் எண்ட நம்பிக்கய அவங்களுக்கு ஊட்டுங்க. பாவம் அந்தக் குடும்பம். அவரால அவதிப் படுறதாகக் கேள்வி.”

“அதுக்குத்தானே உம்மா நான் டொக்ட ருக்குப் படிச்சிக் கொண்டு ஈக்குறேன்.”

அன்று மாலை ஆசிக், மோதினாரின் வீட்டுக்குப் போனான். அங்கே மோதினாரின் மகன் ரிம்ஸானும் இருந்தான். அவர்கள் இருவரும் சிறுவயது முதல் நண்பர்களாக இருந்ததனால் ரிம்ஸான், ஆசிக்கைக் கண்டதும் ஓடி வந்து அவனை வரவேற்று வீட்டுக்குள் அழைத்துச் சென்றான். உடனே அவ்விடத்துக்கு மோதினாரின் மனைவியும் வந்து சேர்ந்தாள். அவர்கள் வீட்டுக்குள்ளே இருந்து சுகநலம் விசாரித்துக் கொண்டிருக்க, வீட்டுக்கு வெளியே ஒருவர் இருமும் சத்தமும், முனங்கும் சத்தமும் அடிக்கடி கேட்டுக் கொண்டே இருந்தது.

“ரிம்சான், ஓண்ட வாப்பாவுக்கு வந்தீக்கும் நோயைப் பற்றி நான் கேள்விப் பட்டேன். அவர நல்ல டொக்டர் ஒருத்தரிட்ட காட்டி மருந்து எடுக்க இல்லயா? அந்த நோய்க்கெல்லாம் இப்ப மருந்து கண்டு பிடிச்சீக்குறாங்க அதால அந்த நோயக் கொணமாக்கிக் கொள்ளலாம்.”

“ஆசிக், வாப்பாவ ஒரு முற டொக்டர் ஒருத்தர்கிட்ட காட்டி மருந்தெடுத்தோம். அதுக் குப் பெறகு நாங்க எவளவோ முயற்சி எடுத்தும் அவர் அந்த டொக்டருட்ட போறத்துக்கோ, மருந்து குடிச்சிறத்துக்கோ விருப்பப்பட இல்ல.”

“சரி. ரிம்ஸான் அது சம்பந்தமா நான் ஓங்கட வாப்பாட்டக் கதச்சிப் பாக்கவா?”

அப்போது மோதினாரின் மனைவி சபீனத்து குறுக்கிட்டாள்.

“ஐயோ! தொரே, அவருக்கு வந்தீக்கிறது மருந்தில்லாத நோயொண்டலியா. அதால நாங்ககூட அவருக்குக் கிட்டப் போறத்தக் குறைத்துக் கொண்டீக்குறோம். செல நேரம், நீங்க அவரோட கதச்சப் போனா, ஒங்களயும் அந்த நோய் பத்திக் கொள்ளும்.”

“மாமி, இங்க கேளுங்கோ. இந்த நோய் அவருக்குப் பக்கத்தில் ஈக்குற எல்லாரயும் பத்திக்கொள்ளுற இல்ல. அது ஒரு மூட நம்பிக்க. எனக்குத் தெரிஞ்ச மாதிரிக்கு இந்த நோயாளிகளோட பழகிறவங்களுல ஒரு பத்து சதவீதத்துக்குத்தான் பாதிப்பு ஈக்கு. அதுவும் உடம்புல நோய் எதிர்ப்புச் சக்தி இல்லாத வங்கதான் இந்த நோயால பாதிப்பு அடைறாங்க.”

“மகன், நீங்க அப்பிடிச் சென்னாலும் எங்களுக்குப் பயமா ஈக்கு. ஊட்டுக்கு வெளிய ஒரு குடிச கட்டி அவர அதுல வச்சீக்குறது அதாலதான். அதால நீங்க அவரப் பாக்கத் தேவ இல்ல. இப்பிடியே பெய்த்திடுங்கோ. ஓங்களுக்கு நன்ம கெடச்சும்.”

அதனால் ஆசிக் தனது நண்பனுடன் மிக சுமூகமாகக் கதைத்து, மோதினாரைப் பார்ப்பதற்கு குடும்பத்தாரின் அனுமதியைப் பெற்றுக் கொண்டான்.

வீட்டுக்குப் பின்புறமாக இருந்த ஒரு குடிசையில் மோதினார் வைக்கப்பட்டிருந்தார். அவரைக் காண ஆசிக்கின் உள்ளம் பதற ஆரம்பித்தது.

“எவ்வளவு திடகாத்திரமாக ஈந்தவர். கம்பீரமான குரலில் எவ்வளவு காலம் பாங்கு சென்னவர். எவ்வளவு காலம் குர்ஆன் மத்ரஸ ாவில பிள்ளைகளுக்கு ஓதிக் குடுத்தவர். எல்லா ருடைய மனசையும் வெண்டு கொண்டிருந்த அந்த மோதினார் மாமாவா இவர்?”

“வாப்பா, ஓங்களப் பாத்து சுகம் விசாரிச் சிட்டுப் போக ஆசிக் வந்தீக்கிறார். நீங்க அவருக்கு குர்ஆன் மத்ரஸாவில ஓதியும் குடுத்தீக்குறீங்க.”

“தார் அது? அந்த ஜெமீலா உம்மா தங்கச்சீட மகனா? அவர் டொக்டருக்குப் படிச் சிறதாக அப்ப நான் கேள்விப்பட்டேனே.”

தனது குழி விழுந்த கண்களை ஏற்றி, ஆசிக்கை சற்று நோட்டமிட்ட மோதினார் மிகவும் சிரமப்பட்டு எழுந்து உக்கார்ந்து கொண்டார்.




ஒவ்வொரு சிறுகதைப் படைப்பு முயற்சியின் போதும், ‘எப்படித் துவங்குவது’ என்கிற பிரச்சினையைவிட ‘எந்த இடத்தில் துவங்குவது’ என்பதுதான் படைப்பாளனை அலைக்கழிக்கிற விஷயம். இந்த அலைக்கழிப்பில் எந்த அளவுக்கு ஈடுகொடுத்து நீச்சலடித்து கரையேற முடிகிறதோ அந்த அளவுக்கு அப்படைப்பு வாசகன் மனசையும் சூறாவளியாய் ஆட்டி அசைத்து விளைவு நிகழ்த்தும். காலப் பிரவாகத்தில் கரைந்து போகாமல் கலங்கரை விளக்கமாய் நிற்கும்.

**–மேலாண்மை பொன்னுசாமி**



உடல் மெலிந்து கன்னங்கள் குழி விழுந்து, எலும்பும் தோலுமாக இருந்த மோதினாரைப் பார்க்க, மனிதர்களுக்கு இப்படியும் சோதனைகள் வருமா என்று ஆசிக்குக்கு எண்ணத் தோன்றியது.

“மாமா, ஒங்களுக்கு வந்தீக்குற நோய்க்கு இப்போ மருந்து கண்டு பிடிச்சீக்கிறாங்க. அதால நாங்க டொக்டர் ஒருத்தருட்டப் போவோம். அவர் தார மருந்து மாத்திரகள ஒழுங்காகப் பாவிச்சா இந்த நோயில ஈந்து குணமாக இன்னமும் ஓங்களுக்கு கால அவகாசம் ஈக்கு.”

மோதினார் மிக்க பிரயாசத்துடன் ஆசிக்குடன் கதைக்க முற்பட்டார். இடையிடையே இருமலும், மூச்சுத் தினறலும் அவருக்கு வந்து கொண்டே இருந்தது.

“மகன்? இந்த நோய் வந்த ஆரம்பத்தில் நான் டொக்டர் ஒருத்தருக்கிட்ட போனேன்தான். நீங்க சென்ன எல்லாத்தயும் அவரும் செல்லிப் போட்டு மருந்து மாத்திரகளத் தந்தார்தான். ஆனா அல்லாட நாட்டப்படி நடக்கிறது நடக்கட்டும் எண்டு நான் அந்த மாத்திரகளப் பாவிக்க இல்ல.”

“ஏன் மாமா, நீங்க அப்பிடிச் செய்தீங்க?”

“மகன் நான் அல்லா, ரசூலுட வார்த்தகள நம்புறவன். சஹாபாக்களுட வார்த்தகள நம்புறவன், நம்பிராட்டிமார்ட வார்த்தகள நம்புறவன்.”

“மாமா, முஸ்லிம்கள் எல்லாரும் நீங்க சென்ன எல்லாருடைய வார்த்தகளயும் நம்பத்தானே செய்றாங்க. அந்த வார்த்தைகளுக்கும் இந்த நோய்க்கும் ஈக்குற சம்பந்தம் என்ன?”

“மகன் இந்த விஷயத்த நல்லா கேட்டுக் கொள்ளுங்கோ. கண்மணி பாத்திமா நாயகியவங்களுக்கும். நம்பிராட்டி ஆயிஷா நாயகியவங்களுக்கும் எடயில ஒரு நாள் முரண்பாடொண்டு வந்திட்டுது. அதுக்குக் காரணம் அந்தக் காலத்துல ஈந்த மோதினார் ஒருத்தர்தான் எண்ட விஷயத்த. ஆயிஷா நாயகியவங்க விளங்கிக் கொண்டிட்டாங்க. ஒடனே அவங்க மோதினாரப் பாத்து “நீ சயரோகம் வந்து செத்துப் போ“ எண்டு ஒரு சாபத்த இட்டாங்க. அந்த சாபத்தோட மட்டும் அவங்க நிக்க இல்ல. அந்தக் காலத்துல சயரோகத்துக்கு ஈந்த மருந்து மாத்திரகள் எல்லாத்தயும் தேடிக் கண்டுபிடிச்சி, அதெல்லாத்தையும் கொண்டு பெய்த்து கடலில் ஏறிஞ்சிட்டாங்க மகன் நம்பிராட்டி ஆயி'ா நாயகிட மோதினார்களுக்கெதிரான சாபம் இன்னும் உலகத்துல ஈக்குறதெண்டத்தையும், சயரோகத்துக்கு மருந்தில்ல தெண்டத்தையும் நாங்க நம்பத்தான் வேணும்.“

“மாமா, இந்த நோய் ஐயாயிரம் வருஷங்களுக்கு முந்தியும் உலகத்துல ஈந்ததாக வரலாறு ஈக்கு. பற்றீரியா ஒண்டாலதானாம் இந்த நோய் பறவுற. அந்த பற்றீரியா பெருகி வளருற இருண்ட எடங்களுலதானாம். அந்த நோய்க்கு மருந்து கண்டு புடிச்சீறதும் அண்மக் காலத்துல தான். பல ஆயிரம் வருஷங்கள் அந்த நோய்க்கு மருந்து

**அந்தக் காலம் நாங்க அரபயும், அரபுத் தமிழயும் மட்டும்தான் படிச்சோம். அது எங்களுக்கு இஸ்லாம் மார்க்கத்தயும், நல்லொழுக்கங்களயும் மட்டும்தான் வெளங்கிக் கொள்ள ஓதவிச்சிது. ஆனா இண்டய புள்ளகள் தமிழ், சிங்களம், இங்கிலீஷ், அரபு எண்டு பல பாஷைகளப் படிக்கிறாங்க. அது மூலமா முஸ்லிம்கள் மத்தியில் ஒரு மறுமலர்ச்சி வந்திட்டுது.**

கண்டு புடிச்சாதத்துனால சமூகம் அதுக்கு பல கதகள இட்டுக்கட்டி ஈக்குது. அதுட வெளிப் பாடாகத்தான் நீங்க சென்ன இந்தக் கதயயும் எடுத்துக் கொள்ள வேணும். இதேபோல குந்துகாளிக்கு நாச்சியாரூட்டுக் கோழி எண்டு பெயர் வந்த கதயொண்ட எங்கட உம்மா, தம்பி ஆக்கிலிட்ட மத்தியானம் செல்லிக் கொண்டீந்தத நானும் கேட்டுக் கொண்டுதான் ஈந்தேன். எங்கட சமயத்துல மட்டுமல்ல, ஏனைய சமயங்களிலும் இது போல தொன்மைக் கதகள் ஏராளமா ஈக்கு. அணில்ட முதுகுல கோடு வந்த கதயும், சந்திரனில் முயல வரைஞ்ச கதயும் அதுபோல கதகள்தான்."

அப்போது ரிம்சான் குறுக்கிட்டான்.

"ஆசிக் எங்கட வாப்பா சென்ன கதையில் என்னத்துக்கு மோதினார்களச் சம்பந்தப்படுத்தி ஈக்குறாங்க எண்டது எனக்கு வெளங்க இல்ல?"

"மோதினார்கள் பாங்கு செல்லுறத்தோட மேலதிக வருமானத்துக்கு குர்ஆன் மத்ரஸாக் களயும் நடத்துறாங்க. அந்த நேரங்களில மோதி னார்களும் ஒரு ஆசிரியராகத்தான் தொழிற் படுறாங்க."

"ரிம்ஸான், அப்ப சயரோகத்துக்கும், ஆசிரி யர்களுக்கும் ஏதாவது தொடர்பு ஈக்கிறதா?"

"ஈக்கு, ஈக்கு, ஆசிரியர்கள் சயரோகத்தால் அதிகமாக பாதிப்படைறதாக, இப்ப புள்ளி விபரங்கள் வந்தீக்கு."

"ஆசிக், நாங்க இப்ப என்ன செய்ய வேணும்? நீ எங்களவிடப் படிச்சவன்."

"ஒண்ட வாப்பா ஈக்குற இந்த எடம் இருட்டாக ஈக்கு. காத்தோட்டம் இல்ல. சூரிய ஒளி படவும் இல்ல. அதால வாப்பாவ காத் தோட்டமுள்ள சூரிய ஒளி படுற ஒரு எடத்தில வச்சாத்தான் நல்லா ஈக்கும். அப்பிடிச் செய்து போட்டு, ஒண்ட வாப்பாவ திரும்ப டொக்டர் ஒருத்தருட்ட காட்டி மருந்து எடுத்தா, அந்த நோயக் குணமாக்கிக் கொள்ளலாமெண்ட நம்பிக்க எனக்குள்ள ஈக்கு. அதால நீ எப்பிடிச் சரி வாப்பாவ மருந்துதெடுக்கப் போவதற்கு விருப்பப்படுத்திக்கோ. நான் நாளைக்கு கட் டாயம் திரும்பி வருவேன்."

அவ்வாறு சொல்லி விடைபெற்றுச் சென்ற ஆசிக் அடுத்த நாளும் அங்கே வந்தான். அப்போது வீட்டுக்கு வெளியே குடிசை யொன்றுக்குள் வைக்கப்பட்டிருந்த மோதினார் வீட்டுக்குள் கொண்டு வரப்பட்டு சூரிய ஒளி படக்கூடிய, காற்றோட்டம் மிகுந்த ஓர் இடத்தில் வைக்கப்பட்டிருந்ததைக் கண்ணுற்றான். அது அவனுக்கு ஆறுதலாக அமைய, மோதினாருடன் அவன் பேச்சைத் தொடர்ந்தான்.

"மாமா, சூரிய ஒளி படுற. காத்தோட்டம் உள்ள எடத்துல ஒங்களப் போல நோயாளிகள் வைக்கப்பட்டா. சயரோகத்த ஏற்படுத்துற பற்றீரி யாக்கள் அழிந்து போறதாக இப்போ கண்டு புடிச்சீக்கிறாங்க. அதால இப்ப நாங்க டொக்டர் ஒருத்தரிட்ட மருந்தும் எடுத்தா, ஒங்களுக்கீக்கிற நோயக் கொணமாக்கிக் கொள்ளலாம்."

"தொரே. என்ன இப்பிடியே உட்டுடுங்கோ. எனக்கு மருந்து தேவ இல்ல. அல்லாட நாட் டப்படி நடக்கிறது நடந்து போகட்டும்."

"ஆசிக், வாப்பாட மனச மாத்த நான் எத்தனையோ முயற்சி செஞ்சி பாத்தேன். அதொண்டும் எடுபட இல்ல."

அப்போது மோதினாரின் மனைவியும் அவ்விடத்துக்கு வந்து சேர்ந்தாள்.

"மகன், நானும் எவளவோ முயற்சி செஞ்சி பாத்தேன். அவர் அதொண்டுக்கும் ஒம்பட இல்ல. ஆயிஷா நாயகிட சாபம் இன்னும் இந்த உலகத்துல ஈக்குறதாத அவர் உறுதியாக நம்புறாரு. அதால என்னதான் சென்னாலும் அவ ருட்ட அதொண்டும் எடுபட மாட்டாது. அல்லாட நாட்டப்படி நடக்கிறது நடக்கட்டும் எண்ட நம்பிக்கயிலதான் நாங்களும் இது ஈறோம்."

அவர்களுடன் இதற்கு மேலும் கதைப்பதில் அர்த்தமில்லை என்பதை உணர்ந்து கொண்ட ஆசிக் அங்கிருந்து அகன்று, தனது வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அன்றிரவு மோதினார் அடிக் கடி அவனது ஞாபகத்தில் வந்து போனார்.

சில தினங்கள் கழித்து, ஒரு காலை நேரம், ஊர்ப் பள்ளிவாசல் ஒலிபெருக்கியில் ஜனாஸா

வொன்றுக்கான அறிவித்தல் வழங்கப்பட்டுக் கொண்டிருந்தது.

"எமது ஊர்ப் பள்ளிவாசலில் பலருட காலம் சேவையாற்றிய முஅத்தின் அப்துல் காதிர் அவர்கள் இன்று அதிகாலை காலமடைந்து விட்டார்கள். அன்னாரது ஜனாஸா இன்று முற்பகல் 11 மணிக்கு நல்லடக்கம் செய்யப்படும். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்."

ஜனாஸா அறிவித்தலைத் தொடர்ந்து ரிம்ஸான் வீட்டுக்கு வெளியே வந்தான்.

விஞ்ஞானம் வளந்தாலும் மூடநம்பிக்கைகள இன்னமும் அழிக்க முடியாமல் ஈக்கு."

அவன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அப்போது பலர் வீட்டுக்குச் ஜனாஸா சென்று கொண்டிருந்தனர். அப்பா, மாமா, சாச்சி, மாமி, சாச்சா, பெரியப்பா, காக்கா, தம்பி, பெரியம்மா... என்று உறவு சொல்லி அழைக்கக்கூடிய பலர் அங்கு தென்பட்டாலும் அவர்களை அடையாளம் காண எங்கும் படர்ந்த மூடுபனி அவனுக்குத் தடையாக இருந்தது. எனினும் அவர்கள் மூடுபனியைப் பொருட்படுத்தாது அதற்குள் போய்க்கொண்டே இருந்தனர். அவன் பார்த்துக் கொண்டே இருந்தான்.

○○○

# மனதில் ஏற்றிக் கொள்!

**– கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்**

ஊரை
பிரதேசமாக மதி
பிரதேசத்தை
மாவட்டமாக மதி
மாவட்டத்தை
மாகாணமாக மதி
மாகாணத்தை
நாடாக மதி
நாட்டை
உலகமாக மதி

மதிப்பதில்தான்
உன் மதிப்பே
தங்கியிருக்கிறது!

பிரதேச வாதம்
குணப்படுத்த முடியாத வாதம்
குணப்படுத்தக் தவறினால்
பிணமாக்கும் சமூகத்தை!

பார்க்காதே
மதக் கண்ணாடி கொண்டு
பார்
மனக் கண்ணாடி கொண்டு!

மதத்தவனாகப் பாராது
மனிதனாகப் பார்!

இனக் கதவுகளை
அடைத்துவிட்டு
குணக் கதவுகளை
திறந்துவிடு!

மாவட்டமென
வட்டத்தை சுருக்கிக் கொள்ளாதே
மாகாணமென
மனதை விரி!

நாட்டை நேசி
அது
இதயத்தில் பொருத்த வேண்டிய
இதமான "ஏசி"

கடல் கடந்து
மானுடம் வாழும்
மூலை முடுக்கெல்லாம்
கண் திறந்து பார்

மாற்ற வேண்டியதை
மாற்றிக் கொள்
மானுடத்தை மனதில்
ஏற்றிக் கொள்!




# காளியம்மனும் முத்தம்மனும்



சி.மௌனகுரு

**கோ**வில் சடங்கு நடந்துகொண்டிருந்தது. பறைகளின் ஒலி ஒருபுறம் கேட்டுக்கொண்டிருந்தது. பல உடுக்குகளின் ஒலிகள் இன்னொருபுறம் உறுமிக்கொண்டிருந்தன. இவை கேட்போர் உடலை முறுக்கேற்றிய வண்ணம் இருந்தன.

இந்த தோல் வாத்தியங்களின் பின்னணியில் தெய்வமாடுவோர் கைகளிலும் கால்களிலும் அணிந்திருந்த சிலம்பொலி நாதம் அந்தக் கோவில் வளவின் ஆகாயவெளியை நிறைத்துக் கொண்டிருந்தது.

அப்பெரும் கோவிலின் முன்னால் ஒவ்வொரு சிறுசிறு பந்தல்கள் அந்தப் பந்தல்களின் முன்னால் எரிந்த கற்பூரவாசம் கோவில் வெளியை நிறைத்துகொண்டிருந்தது. இடையிடையே கேட்ட “அம்மாளே அம்மாளே” என்ற சனக்குரல் அந்தக்காட்சிக்கு ஒரு பின்னணிப் பேரோசையாக ஒலித்துகொண்டிருந்தது.

அந்தபெரும் கோவில் பெரியதோர் தெய்வத்திற்குரியது. வைரவரே அக்கோவிலின் பிரதான தெய்வம். ஆஹமமுறை சாராத பத்ததி முறையில் வழிபாடு நடைபெறும் கோவில் அது. ஆண்டுதோறும் திறந்து ஏழுநாள் பூசையின் பின் கதவடைத்து மறுபடியும் அடுத்த ஆண்டு திறபடும் கோவில் அது. அந்தக்கோவிலின் முன்னால் குருத்தோலையால் அமைக்கப்பட்ட பல சிறுசிறு பந்தல்கள். வதனமார், மாறா, வீரபத்திரன், கங்காதேவி, குமாரர், விறும வைரவர், கங்காதேவி, படபத்திரகாளி, காத்தவராயன், ஹனுமார் போன்ற சிறுசிறு தெய்வங்களுக்குரியவை.

ஒவ்வொரு பந்தலினையும் சுற்றிச்சுற்றி சிறுசிறு மக்கள் கூட்டம் நின்றுகொண்டிருந்தது. ஒவ்வொரு பந்தலின் முன்னாலும் அந்த அந்தத் தெய்வங்கள் அந்தப் பந்தல்களின் முன்னால் ஆடிக்கொண்டிருந்த ஒரு மனித உடலில் தோன்றி ஆடிக்கொண்டிருந்தன.

ஒரு பூசாரியார் உடுக்கடித்து குறிப்பிட்ட அந்தத் தெய்வத்தை ஆட்டிக்கொண்டிருந்தார். அதற்குரிய பாடல்களைப் பாடிக்கொண்டிருந்தார். ஒரே இரைச்சல்மயம். ஒரே சத்தமயம். ஆனால் அந்த சத்தக் குழப்பங்களுக்குள்ளும் ஒரு லயம் ஒரு ஒத்திசைவு. அந்த பெரிய வைரவர் கோவிலின் வலதுபுறத்தில் ஒரு சிறிய பந்தல். அது காளிக்குரிய பந்தல்.

அந்தப் பந்தலில் கம்புகள் நட்டு உருவாக்கப்பட்ட ஆளுயர மேடையிலே ஒரு சூலம் வைக்கப்பட்டு அதற்கு முன்னால் கும்பம் வைக்கப்பட்டு அதற்கு முன்னால் ஒரு மடையும் வைக்கப்படிருந்தது.

மடை என்றால் வாழையிலை பரப்பி அதற்கு மேல் வேப்பிலை வைத்து அதன் மேல் வாழைப்பழச் சீப்பு மூன்று வைத்து அதற்கு மேல் மஞ்சள் ஊதுபத்தி செருகி குங்குமம் இடப்பட்ட நம்பிக்கை மிக்க ஓர் அழகிய அலங்காரம். அந்தப் பந்தலில் மாரி அம்மன் வழிபாடும் நடைபெறும் காளியம்மன் வழிபாடும் நடைபெறும். ஏனைய பந்தல்கள் முன் நின்றதுபோல இந்தக் காளி பந்தல் முன்னாலும் ஒரு சிறு கூட்டம்.

பறையோடு ஒருத்தர். தலைமைப் பூசாரியார் பெரியான் அங்கே உடுக்கோடு நின்றார். காற்றில் பறக்கும் சிவனது சடாபாரம்போல

சிலும்பிய தலைமயிர். நெற்றியில் பெரிய தோர் குங்குமப் பொட்டு. வெற்று மேல் அதனை மேலாடையாக மறைக்கும் ருத்ராட்ச மாலைகள். இரண்டு காதுகளிலும் மின்னும் கடுக்கன்கள் இன்னொரு சுவாமிபோல அவர் காட்சி தந்தார். மக்களின் பெருமதிப்பைப் பெற்றவர் அவர்.

"தம்பிக்குட்டியைக் கூப்பிடுங்கள்" உத்தர விட்டார் வைரவர் கோவிலின் தலைமைப் பூசாரியாரான அந்தப் பெரியதம்பிரான். தனது இடது கையில் வர்ணச் சேலைகள் தொங்கிய வெங்கல உடுக்கை ஏந்தியவண்ணம் நின்ற அவர் அப்போதுதான் மாரிஅம்மன் தாலாட்டுப் பாடல்களைப் பாடி முடித்திருந்தார். இடையில் அவருக்கு ஓர் ஓய்வு தேவைப்பட்டது. கலைந்து கிடந்த தனது கேசத்தை பின்னோக்கி வலது கையால் சீவி விட்டபடி அங்கிருந்தோரை ஒரு தரம் சுற்றிப்பார்த்தார்.

அவரது பருத்த உடலும், முன்னோக்கிய தொந்தி வயிறும் பரந்த முகமும் வீங்கிய தாடைகளும் அவர் கழுத்தில் அணிந்திருந்த பெரிய ருத்ராட்ச மாலைகளும் அவர் காதுகளில் ஒளி வீசிய கடுக்கனும் அவர் நெற்றிலிருந்த செம்மை நிறப் பெரும்திலகமும் அவர்மீது மதிப்பை மாத்திரமல்ல ஒருவித பயத்தையும் அனைவருக்கும் ஏற்படுத்தியிருந்தன.

தெய்வங்களுடனும் பிசாசுகளுடனும், பேய்களுடனும் அனாசயமாக உறவாடுபவர் அவர் என்பது அனைவரதும் நம்பிக்கை. செய் வினை, சூனியம், கழிப்பு, நோய்தீர்த்தல் என்பனவற்றில் மிகப்பிரசித்தி பெற்ற பூசாரியார், பெரியதம்பிரான். அவரைச் சுருக்க மாகவும் மரியாதையாகவும் பெரியான் என்றே மக்கள் அழைப்பர்.

காளி பந்தலுக்கு முன்னால் கொடுக்கணிந்து, கால் சிலம்பு கைச்சிலம்பணிந்து உடலெல்லாம் மஞ்சள் பூசியவண்ணம் தலைமயிர் விரித்து வேப்பிலை தாங்கியவண்ணம் மாரிக்கு ஆடி முடித்து விட்டு இன்னும் சன்னதம் குறையாமல் உடலை அசைத்தவண்ணம் நின்றிருந்தார் தெய்வக்காரரான குழந்தைவேலு

அவரது உடல் சன்னதத்தால் நடுங்கிக் கொண்டிருந்தது. அவர் இனிக் காளிக்கு ஆடவேண்டும். மாரி சன்னதம் இன்னும் குறைய வில்லை. காளி வந்தால்தான் மாரி போவாள். குழந்தை வேலு கையில் அணிந்திருந்த சிலம்பொலி 'கல்கல்' எனக் கேட்ட வண்ணம் இருந்தது. குழந்தை வேலு அக் கோவிலின் தலைமைத் தெய்வக்காரர். தலைகட்டாடி என அவரை அழைப்பர்.

நரசிங்கம், சிங்கநாதம், மாரிகாளி, ஐயனார், வதனமார், மாறா, கிரகசாந்தி படபத்திரகாளி, காளி முதலான கடும்தெய்வங்கள் அவர் உடலில் குடிகொண்டிருந்ததாக நம்பப்பட்டது. அத்தெய்வங்களுக்கு அவர் உருக்கொண்டு மஞ்சள் குங்குமம் உடல் முழுதும் மலிந்த கோலத்தில் வேப்பிலை பிடித்து மலரென விரிந்த கமுகம் பாளைகள் தென்னம் பாளைகளை ஏந்தி கோவில் வெளியில் ஆடி வருவதனைப் பக்திபூர்வமாக மக்கள் அவதானிப்பர்.

இத்தனைக்கும் அவ்வூரில் அவர் ஒரு கூலித் தொழிலாளி. அத்தோடு ஊரில் ஒரு சண்டியனும்கூட, அவர் சண்டித்தனம் அநியாயத்திற்கு எதிரான சண்டித்தனம்.

பிரதான தெய்வங்கள் அவர் உடலில் குடி கொண்டிருப்பதனால் அவர் மீது ஒரு மதிப்பும் பயமும் மக்களுக்கு இருந்தது. ஆண்டுதோறும் அக்கோவில் சடங்கில் அத்தனை தெய்வங்களும் அவர் உடலில் வந்து முற்பட்டு மக்களுக்கு நல்வாக்குக்கூறி, மக்கள் நோய் தீர்த்து மக்களுக்கு நம்பிக்கையூட்டிச் செல்லும் அவர் இனிக் காளிக்கு ஆடவேண்டும். காளிமந்திரம் சொல்லி உருவேற்றினால்தான் காளிதேவி வந்து முற்பட்டு குழந்தைவேலுவின் உடலுள் புகுவாள் காளியை மக்கள் குழந்தைவேலில் எதிர்பார்த்து ஆவலோடு காத்திருந்தனர். காளியை வரவழைக்கப் பிரத்தியேக மந்தி ரங்கள் இருந்தன.

அம்மந்திரங்களினை உச்சாடனம் செய்து காளியை அழைப்பது ஒரு தனிக்கலை அசாத் திய குரல்வளம் அதற்கு வேண்டும். குரலைத் தாழ்த்தியும் உறுக்கியும் இரங்கியும் வேண்டியும் வெருட்டியும் காளிமாதேவியை அழைக்க வேண்டும். இக்கலையை தம்பிக்குட்டி நன்கு அறிந்து வைத்திருந்தவராக அக்கூட்டத்தில் கணிக்கப்பட்டிருந்தார். அதற்குரியவர் தம்பிக் குட்டிதான் என தலைமைப்பூசாரி பெரிய தம்பிரானும் தெரிந்து வைத்திருந்தார்.

"தம்பிக்குட்டி தம்பிக்குடி தம்பிக்குட்டி" என்று சனத்திரளிடையே அலையோசை முணு முணுப்பு. அந்தக் கூடத்தோடு ஒருவனாக நின்று

கொண்டிருந்தான் தேவதாசன். அவனுக்குப் பத்து வயது இருக்கும் இடுப்பிலே வேட்டி வெற்றுமேல் சிவந்தநிறம் பால்வடியும் முகம், அழகான பையன் எப்போதும் சிரித்த முகம். அவனது அம்மா முத்தம்மா. அவனைப் பொத்திப்பொத்தி வளர்த்தாள். அனைவருக்கும் விருப்பமான பையன் ஆரம்ப பாடசாலையில் ஐந்தாம் வகுப்புப் படித்து கொண்டிருந்தான். அந்த வயதிலேயே அவன் வாசிப்பு ஆர்வம் மிக்கவன்பாடசாலை சென்றறியா முத்தம்மாவுக்கு தன் மகன் புத்தகம் படிப்பதுகண்டு மஹா மகிழ்ச்சி பெருமை தம்பிக்குட்டி வந்தார். அவரை தம்பிக்குட்டி அப்பாச்சி என்றுதான் தேவதாசன் அழைப்பான்.

அவனது தம்பிக்குட்டி அப்பாச்சி கல்கி, பிரசண்ட விகடன், வீரகேசரி வாரவெளியீடு என்பவற்றைப் பணம் கொடுத்து வாங்குபவராக இருந்தார். அவரது வீட்டில்தான் அவனது வாசிப் புப் பழக்கம் ஆரம்பமானது அவர் வீட்டிலேயே அவன் கிடையாகக் கிடப்பான். அப்பாச்சி என்றுதான் அவரை அவன் அழைப்பான்.

ஆனாலும் சிறுவர் அனைவருக்கும் அவர் தம்பிக்குட்டி அப்பாச்சிதான். வெற்று மேல். மார்பைமறைத்து புசு புசுவென்று வளர்ந்திருந்த கருமயிர்களும் வெண்மயிர்களும், நாலுமுழ வேட்டி. அதனை சிவப்பு நிறத்துணியால் அவர் இறுக்கிக்கட்டியிருந்தார். சடைத்துப் பரந்த பாகவதர் பாணியில் சிலும்பிய தலை. உதட்டுக்குமேலால் நரைத்த பரந்த அடர்த்தியான மீசை, இரண்டு சொக்குகளிலும் மீன் முள்ளுகள் போல நரை மயிர்கள். வெற்றிலைபோட்டுச் சிவந்த வாய். நெற்றியிலே அப்பிய திருநீறு அதன் நடுவில் பெரிதாகத் தகதகக்கும் மிகப் பெரியதோர் குங்குமப்பொட்டு. ஒருதரம் பார்த் தால் இன்னொரு தரம் பார்க்க வேண்டும் எனத் தோன்றும் பயங்கரமான ஆனால் கவர்ச்சியான அலங்காரத் தோற்றம்.

"ஆதி வைரவர்போல இருக்கிறார்" என்று அங்கிருந்த ஒருவர் கூறினார். தம்பிக்குட்டி அப்பாச்சி அங்கு தோன்றினார். தம்பிக்குட்டி அப்பாச்சி அங்கு வந்ததும் அவரைப்பார்த்த பெரியான் பூசாரி "தம்பிக்குட்டி காளியை வரவழையுங்கள்.. காளி அழைப்பு மந்திரம் சொல்லுங்கள்" என்றார்.

பந்தலுக்கு முன்னால் காளியைத் தனக் குள் உள்வாங்க குழந்தை வேலு ஆயத்த மாக நின்றார். காளிக்குரிய மடை மேலும் திருத்தப்பட்டு வைக்கப்பட்டது. கொடுக் கணிந்திருந்த குழந்தைவேலுவின் பின்னால் நின்ற வாட்டசாட்டமான சின்னத்துரை குழந்தை வேலுவின் இடுப்புக்கொடுக்கைப் பிடித்துக் கொண்டார்.

குழந்தைவேலு தன் இருகைகளையும் அகலவிரித்து நீட்டினார். வலது கை மணிக்கட்டை வாட்டசாட்டமான குமாரசாமி பிடித்துக் கொண் டார். இடது கை மணிக்கட்டை பலசாலி யான துரையப்பா பிடித்துக்கொண்டனர். எல்லோருக்கும் முன்னால் பூசாரி பெரிய தம்பிரான் நடு நாயகமாக நின்றார்.

தம்பிக்குட்டி அப்பாச்சி மடையிலிருந்த ஓர் வெற்றிலையை எடுத்தார். குழந்தைவேலுவுக்கு முன்னால் அதனை நீட்டியபடி குழந்தைவேலுவை முறைத்துபார்த்தார்.



இது ஒரு மைல் ஓட்டப்பந்தயமல்ல. சைக்கிளில் பல ஊர்கள், வெளிகள், பாலங்கள், சோலைகள், சாலைகள் என்று வெகுதூரம் போகிற பந்தயம் இல்லை. நூறு கஜ ஓட்டத்தில் ஒவ்வோர் அடியும் ஒவ்வோர் அசைவும் முடிவை நோக்கித் துள்ளி ஓடுகிற அடி அசைவு. ஆற அமர, வேடிக்கை பார்த்துக்கொண்டு செல்லவோ வேகத்தை மாற்றிக் கொள்ளவோ இடமில்லை. சிறுகதையில் சிக்கனம் மிக மிக அவசியம். வளவளப்புக்கு இடமே கிடையாது வளவளப்பு என்றால் அதிக சுமை. ஓடுவது கஷ்டம்.

**– தி. ஜானகிராமன்**



**பட்டறை**



தம்பிக்குட்டி அப்பாச்சியின் கண்களும் குழந்தைவேலுவின் கண்களும் நேருக்கு நேர் சந்தித்தன. ஆளை ஆள் விழுங்கிவிடுவதுபோல பார்த்தனர். யார் யாரை விழுங்கினார் என்பது தெரியவில்லை. இடது கையில் வைத்திருந்த வெற்றிலையில் தனது வலது கையால் மடையில் இருந்த குங்குமத்தை எடுத்துப் பூசியவண்ணம் குழந்தைவேலுவின் கண்கள் மீது வைத்த கண்கள் வாங்காமல் காளி அழைப்பு மந்திரங்களை உச்சாடனம் செய்ய ஆரம்பித்தார் தம்பிக்குட்டி அப்பாச்சி

அரிஹரி காளி அட்சரி காளி
திரிபுர கைலை சென்றிருந்தவளே
சுடலையில் ஆடிப் பாடிய கூளி
சூரசங்காரி வீர கெங்காளி

உறுத்திய பார்வையும் உதிர நற்குழலும் விரித்த சடையும் வெறித்த பார்வையும் நீட்டிய நாக்கும், நிமிர்ந்த நடையும் என காளியை உச்சாடனம் செய்துகொண்டே சென் றார் தம்பிக்குட்டி அப்பாச்சி. அவர் குரல் மெல்லமெல்ல மேலெழுந்து வந்தது. உச்சாடனத் திற்கு ஏற்ப குழந்தைவேலின் சன்னதம் மெல்ல மெல்லக் கூடிக்கொண்டு வந்தது. குழந்தைவேல் மெல்ல மெல்ல தம்பிக்குட்டி அப்பாச்சியின் உருவேற்றல் சொற்களை உள்வாங்கிகொண்டிருந்தார். குழந்தைவேல் மெல்ல மெல்ல அசையத் தொடங்கினார். மெல்ல மெல்ல காளியாக உருக்கொள்ளத் தொடங்கினார்,

உறுத்திய பார்வை, வெறித்த பார்வை, நீட்டிய நாக்கு என்பனவற்றுடன் குழந்தைவேலு காளியாக உருமாறிக் கொண்டிருந்தார்.அவர் உருமாற்றத்தையும் தம்பிக்குட்டி அப்பாச்சி யின் உருவேற்றத்தையும் பக்திப் பரவசமான ஓர் உணர்வு நிலையில் அனைவரும் உற்று நோக்கிக்கொண்டிருந்தனர்.

அவர்களுள் ஒருவனாக அந்தப் பத்து வயதுப் பையன் தேவதாசனும் நின்றுகொண்டிருந்தான் துருதுரு எனப் பார்க்கும் அவன் விழிகளில் ஏதோ ஒன்றை எதிர்பார்க்கும் ஆவல், ஒரு தேடல் குழந்தை வேலுவின் உடலில் மெல்ல மெல்ல உரு கூடிக்கொண்டு வந்தது.

தம்பிக்குட்டி அப்பாச்சியின் உடலும் சன்னதம் கொண்டு அசையத் தொடங்கி விட்டது. இருவரும் சமாந்திரமாக உருவேறிய நிலையில் நின்றனர். தம்பிக்குட்டி அப்பாச்சி தன்னை மறந்த நிலைக்குச் சென்று விட்டார்.

ஓடிவா ஓடிவா சீக்கிரம் ஓடிவா
வாடி வாடி கெதியினில் வாடி
ஓடி வந்து இந்த உடலினில் ஏறடி

என மிக மிக உரிமையோடு அம்மாவை அழைப்பது போல மிக உரிமையோடும் அளவுகடந்த நம்பிக்கையோடும் அழைத்துக் கொண்டிருந்தார் தம்பிக்குட்டி அப்பாச்சி.

“வாடி வாடி வாடி வாடி” என்ற அவரது குரலில் வேண்டுதல், மிரட்டுதல். உரிமையோடு கூடிய அதிகாரம். பெரு நம்பிக்கை. எல்லாம் தொனித்தன. அப்படியே அந்த சிவப்பு குங்குமம் பூசிய வெற்றிலையை குழந்தைவேலுவின் பொக்குளில் வைத்து ஏறு ஏறு சீக்கிரம் ஏறு ஏறு ஏறு சீக்கிரம் ஏறு என ஆணையிட்டார்.

குழந்தைவேலு வலப்புறமாகவும் இடப் புறமாகவும் மெல்ல மெல்ல அசையத் தொடங்கினார். தம்பிக்குட்டி அப்பாச்சி குழந்தை வேலுவின் பொக்குளில் வைத்த வெற்றிலையில் உருச் சொல்லிச் சொல்லி ஊதியபடியே குழந்தை வேலுடன் அசையத் தொடங்கினார். ஆசைந்து கொண்டே,

வாடி வாடி வாடி வாடி
ஓடி வா ஓடி வா ஓடிவா

என அதிகாரத் தொனியில் குரலை உயர்த்தி கொண்டே ஆடினார். ஆடிகொண்டே, 'வாடி வாடி' என் ஓர் உறுக்கு உறுக்கி விட்டார். அதிகாரத் தொனியில் அழைக்கும் ஓசை அது.

"வாடி வாடி" உரத்தகுரலில் உறுக்கி ஊதிவிட்டார் தம்பிக்குட்டி அப்பாச்சி.

"ஹாய்" என்ற அதிரும் பெரும் சத்தம் குழந்தை வேலின் தொண்டையிலிருந்து புறப்பட்டது. காளி குழந்தைவேலுவின் உடலிடம் கொண்டுவிட்டாள். குழந்தைவேலு காளியாக உருமாறிவிட்டார்.

"அம்மாளே அம்மாளே" என்று அலறியது பார்த்துக்கொண்டிருந்த கூட்டம். பத்து வய தான தேவதாசனுக்கு அது ஓர் வியப்பூட்டும் பெரும்காட்சி அவனுக்கும் அப்படிக் கத்த வேண்டும்போல இருந்தது.

"அம்மாளே அம்மாளே" என்று கூட்டத்துடன் இணைந்து தேவதாசனும் கத்தினான். உணர்ச்சி பொங்கக் கத்தினான்.

அனைவரும் ஓர் உணர்ச்சிச் சுழிப்பினுள் நின்ற கணங்கள் அவை. காளியாக உருக் கொண்ட குழந்தைவேலுடன் ஒட்டி விறைத்து கிடந்தார் தம்பிக்குட்டி அப்பாச்சி. அவரைக் குழந்தைவேலுவிலிருந்து பிய்த்தெடுத்து அப்பால் கொண்டுசென்று தலையில் குடம் குடமாய்த் தண்ணீர் ஊற்றி பழைய நிலைக்குக் கொணர்ந்தனர். சில பக்தர்கள் காளியாக மாறிய குழந்தைவேலு வலது பக்கமும் இடது பக்கமும் தன் உடலை அசைத்து ஆடத் தொடங்கினார். வலது கையை குமாரசாமி இழுக்க, இடது கையை துரையப்பா இழுக்க பின்னால் சாய்ந்து விடாமல் கொடுக்கை சிவகுரு பிடிக்க, தலை சுழற்றி கண்கள் மேல் சொருக, நாவிலிருந்து நுரை வழிய ஆடிக்கொண்டிருந்தார் குழந்தைவேலு.

பறையும் உடுக்கும் கட கட கட வென்று விரைவான இசையொன்றை எழுப்பிகொண் டிருந்தன. மக்கள் இரு கைகளையும் தலைமேல் கூப்பி, அம்மாளே அம்மாளே அம்மாளே என உணர்ச்சிகரமாகப் புலம்பிக்கொண்டிருந்தனர். தாம் அழைத்தமை கேட்டு தனது ஆத்தாள் வந்து விட்டாள் என்ற நம்பிக்கை காளியம்மனை நேரில் தரிசித்த பரவசம் மக்களுக்கு இதோ அம்மன் நம்முன் நின்றாடுகின்றாள்.

அனைவரும் பரவச நிலையில் காளி தரிசனம். இதோ அவன் முன் அன்னை காளி நின்று ஆடுகிறாள். அத்தகையதோர் பரவச நிலையை தேவதாசன் வாழ்நாளில் என்றும் பெற்றதில்லை பரவசத்தில் அந்தச் சிறுவன் கண்களிலிருந்து கண்ணீர் வழிய ஆரம்பித்தது கை கூப்பிய வண்ணம் அந்தக் காளிதரிசனம் கண்டுகொண்டிருந்தான் அந்தச் சிறு குழந்தை அது அவனுக்கு ஓர் புதிய அனுபவம்.

ஒரு கண நேர அனுபவம். ஆட்டத்தின் உச்சத்தில் குழந்தைவேலு உடலைச் சுருக்கி இரண்டு கைகளையும் இறுக்கிக் குறாண்டிக் கொண்டு விறைத்துவிட்டார். உடனே அவரை பிடித்து அவர் தலைமீது குடம் குடமாகத் தண்ணீர் ஊற்றினர். அவர் விறைப்பு நீங்கினார். இப்போது அவர் சாந்தமான காளியாக ஆடத் தொடங்கினார்.

நோய் வாய்ப்பட்டிருந்த மக்களை அழைத் தார். நோய்க்கான காரணங்களைக் கூறினார். சில கழிப்புகள் செய்தால் நோய் தீரும் என்றார். இப்போது காளித் தெய்வம் ஒரு வைத்தியராக மாறிவிட்டது. மக்களும் தமது துன்ப துயரங்களை அம்மாளிடம் தாமே கூற ஆரம்பித்துவிட்டனர்.

அங்கு நிலவியது ஒரு தாய் பிள்ளை உறவுதான். பயம் போய்விட்டது. உறவு தோன்றிவிட்டது. பெரியதம்பிரான் பூசாரி ஒரு இணைப்பாளராக மக்களுக்கும் காளிக்கு மிடையே செயற்பட்டார். இடைக்கிடை மக் களுக்கும் காளி அம்மளுக்கும் சில ஆலோ சனைகளும் வழங்கினார். வியப்போடு திகைப்போடும் நின்ற தேவதாசனைக் காளி அழைத்தாள். அவன் பால்வடியும் முகத்தை உற்று நோக்கினாள். கனிவாகப் பார்த்தாள் இப்போது காளியின் முகம் மாறி இருந்தது.

அப்போது தேவதாசனுக்குத் தெரிந்த நாக்கு நீட்டிய வெறித்துப் பார்த்த பயங்கரப் பார்வையல்ல அது. சாந்தமான பார்வை. வெறித்து நோக்கிய கண்கள் அல்ல அருள் பொழியும் கண்கள். ஒரே நேரத்தில் காளியின் உக்கிரத்தையும் அதனால் வந்த பயத்தையும் பின்னர் காளியின் அன்பையும் அதனால் வந்த நெருக்கத்தையும் தேவதாசன் அனுபவித்தான்.

காளி அவனை தன் அருகில் அழைத்தாள் சருவச் சட்டியிலிருந்த தண்ணீரை தன் வலது கையால் அள்ளி தேவதாசன் வாயில் ஊட்டி விட்டாள். கையில் வைத்திருந்த வேப்பிலைக் கொத்தால் அவனை வருடிவிட்டாள்.

அந்த வருடலை அக்குழந்தையின் உடல் அனுபவித்தது.

அவனை இன்னும் அருகே அழைத்து அவன் உச்சம் தலையில் தனது வலக்கையை ஆசீர்வதிப்பதுபோல சிறிதுநேரம் வைத்துக் கொண்டிருந்தாள்.

காளியின் சிலம்பணிந்த கைகளிலிருந்து மெல்லிய சிலம்போசை மாத்திரம் தேவதாசன் காதுகளில் கேட்டு கொண்டிருந்தது. தேவதாசன் தனக்குள் ஏதோ மின்சாரம் பாய்வது போல உணர்வு பெற்றான்.

அச்சடங்கு முடியக் காளி பெரிய கோவிலுக்குள் போய்விட்டது. மகனைக் காணாது தேடி வந்தாள் தேவதாசனின் தாய் முத்தம்மா.

மூக்குத்தி மின்ன அகண்ட நெற்றியில் பளிச்செனத் திருநீற்றுப் பூச்சோடு பளிச்சென்று காட்சி தந்த தேவதாசனின் அம்மா முத்தம்மா அந்தக் கூட்டத்துள் தனித்துத் தெரிந்தாள் அவள் முகத்தில் அசைந்த அவளது இரு கண்களும் மகனைக் கண்டுகொண்டன.

மகனைக் கண்ட மகிழ்ச்சியும் திருப்தியும் அவள் முகத்தில் தெரிந்தன. அம்மாவைக் கண்டான் தேவதாசன். அம்மா அவன் அருகில் வந்தாள். “அம்மா நான் காளியம்மாளை நேரில் கண்டேன்” மகனை உற்று பார்த்த முத்தம்மா “காளியம்மாளே” என்றபடி தேவதாசனை அணைத்துக் கொண்டாள்.

இது தேவதாசனுக்கு அன்று பிண்டப் பிரமாணமாக கிடைத்த இன்னொரு அம்மாவான முத்தம்மாவின் அணைப்பு.

○○○



# காதல்

**– கலாநிதி ஜீவகுமாரன்**

இமயமலையில் பனி கொட்டியது.
அர்த்தநாரீஸ்வரர் ஆனந்தக் கூத்தாடினார்.
உமையே! ” நீ பாதி நான் பாதி” என்றார்.
”இல்லையில்லை.. நீங்கள் வேறு நான் வேறு
அதுவே காதல்” என்றாள் உமை.

”இல்லையில்லை என் அன்பே!
ஒரு கால் உனது மறுகால் எனது
ஒரு கை உனது மறுகை எனது
ஒரு கண் உனது மறுகண் எனது
உனக்குச் சிங்கம் எனக்குப் பசு”
எல்லையற்ற அன்பில் உருகியவர் சொன்னார்.
“எல்லாம் சரிபாதி என்றால்
மூளையையும் இதயத்தையும்
எப்படிப் பிரிப்பது நாதா?”
“அது ஒன்றாகவே இருக்கட்டும்.
நான் பேச நினைப்பதெல்லாம்
நீ பேச வேண்டும்
நான் போகும் இடமெல்லாம்
நீ போக வேண்டும்
நான் போடும் திட்டமெல்லாம்
நீ நிறைவேற்ற வேண்டும்.”
உமையாள் குறுக்கிட்டாள்.
போதும் நிறுத்துங்கள்..
நீங்கள் பேசாததையும் நான் பேச வேண்டும்.
என்னைத் தெலைக்காமல் நான்
வாழவேண்டும்.
இல்லை என்றால் நான் பிரிந்து போகிறேன்.
அர்த்தநாரீஸ்வரர் உறைந்து போனார்.
உறைந்தவர் இதுவரை எழும்பவேயில்லை.
பக்தகோடிகளின் கைலாச யாத்திரை
கொட்டும் பனியிலும் இன்றும் நடக்கின்றது.



சிறுகதை

# தேவன் தந்த வாழ்வு



முனைவர் புதுவை மனுநீதி

வழமைபோலவே இன்றும் அந்தத் தொலைபேசி அழைப்பு வந்தது. அம்மா! தேவகி அம்மா! முடிவு எடுத்துட்டீங்களா? வினவியது அழைத்த குரல். இன்னமும் இல்லை. விரைவில் முடிவு ஒண்டு எடுக்கத்தான்வேணும். திடமான தேவகியின் பதிலால் தொடர்பை நன்றி கூறத் தோன்றாது அழைத்தவள் தனது அழைப்பைத் துண்டித்தாள்.

காணாமல் ஆக்கப்பட்ட தனது கணவனுக்கு என்ன நிகழ்ந்தது என்பதனைக் கண்டறிய அமைக்கப்பட்ட அரசு தரப்பு அலுவலகம் தனக்கு உதவுவதாகக் கூறி அழைக்கப்பட்ட தொலைபேசியினால் தேவகி அம்மா மனம் உடைந்தே போயினள். கணவர் தேவனைக் கண்டுபிடிக்க முயற்சிகள் எடுக்கின்றோம் தானே!. ஆனாலும் அம்மாவுக்கு 28 வயதுப் பெண்பிள்ளை உள்ளதுதானே! தேவனது பெற்றோரும் படுக்கையில் உள்ளனர் தானே! தேவனது வைப்பில் உள்ள பணத்தை நீங்கள் பெற வேண்டும்தானே! இன்னும் 05 வருடத்தில் ஓய்வு பெறப் போகும் உங்கள் அலுவலகத்திற்கும் ஓய்வூதியம் பெறக் "கணவனின் கதி" பற்றி அறிவிக்க வேண்டும் தானே! தேவனின் சேமிப்பை பெற்று மகளின் திருமணத்தை செய்து வைக்கலாம் தானே! தேவனின் பெயரில் உள்ள சொத்துக்களினை மகளின் பெயருக்கு மாற்றி எழுத தேவனைப் பற்றிய முடிவு ஒன்றினை அம்மா எடுக்க வேண்டும்தானே! எனப் பல "தானே" அழைப்புக்கள்.

தமிழில் முதுமாணி முடித்த தேவகிக்கு உரிய முடிவை தகுந்த நேரத்தில் எடுத்திருக்காத காரணத்தினால் கல்வியியல்சார் பதவி உயர்வும் தள்ளிப்போனது. திருமணம் செய்துபின் காணாமல் ஆக்கப்பட்ட கணவனின் நிலையால் சமூக அந்தஸ்தும் அற்றுப்போனது. தேவன் காணாமல் போய் இன்று 20 வருடங்களாயிற்று யுத்தம் முடிவுற்றதாக அறிவித்தும் 16 வருடங்களாச்சி.

தேவன் என்னையோ, எனது மகளையோ பெற்றோர்களினையோ விட்டுவிட்டு ஒரிர வேனும் எங்கும் தங்கிடா உத்தமன். ஓடோடி வந்துருவான். யுத்தத்தில் ஏதேனும் நிகழ்ந்ததாகவும் தகவல் இல்லை. உயிருடன் இருந்தாலும் எம்மை விட்டு உயிருடன் இருக்க சந்தர்ப்பம் இல்லை. ஆனாலும் உடலம் காணாது சட்டென இறப்புப்பத்திரம் பெறுவது சங்கடமானது. சடலத்தையேனும் காட்டினால் முடிவு எடுக்கலாம். அல்லது ஜனநாயக நாட்டில் சனங்களில் ஒருவனான எனது கணவனுக்கு என்ன நேர்ந்தது என்பதையேனும் அறியத்தந்தால் முடிவு எடுக்கலாம். அதுவும் இல்லை, இதுவும் இல்லை,

காணாமல் ஆக்கப்பட்ட கணவனின் நிலைபற்றி எவர் எல்லாம் அக்கறையுடன் விசாரித்தார்களோ அவர்கள் எல்லாம் ஓய்ந்து கொண்டனர். தேவகிக்கு பிரிவும் தனிமையும் மட்டும் தேவைக்கு அதிகமாகவே கிடைத்தது. இலக்கியம் கூறும் யுத்த காண்டத்தில் பிரிவும், தொல்காப்பியம் கூறும் உறவில் பிரிவும் தேவகியினால் நாளாந்தம் உணரப்பட்டது. ஆடுகளினை மேய்க்கும் போது ஆயிரம் ஆடுகளில் ஒரு ஆட்டையேனும் காணவில்லை எனின் காணாமல் போன ஆட்டினை ஆயனின் கட்டுக்குள் கொண்டுவருவதுவே சிறப்பு என பைபிளின் போதனைகளை மாணவர்களுக்கு

எடுத்துச் சொல்லும் தேவகிக்கு இக்கட்டான நிலை. காணாமல் போன ஆட்டினை காணாத ஆயனின் தவறுக்கு ஆயன் செய்யும் கைங்கரியம் தான் ''மீதம் உள்ள 999 ஆடுகளும் சந்தோசமாக உள்ளனவே'' என ஆயன் சமாதானம் செய்வது. அங்ஙனம் சமாதானமாக்கிடல் மாண்பன்று. அவ்வாறு செய்ய முடியாது. ஒரு ஆடு கூறும் மேய்ப்பன் அவ்வாறு செய்ய முடியாது. ஆடும் கதியுமே அவை சம்பந்தமான செய்தியே முக்கியமானது எனத் தேவகியின் லூக்காவின் வேத வசனங்கள் இணைத்த பாடங்கள் மாணவரைச் சிந்திக்கச்செய்தன. இவற்றைக் கூறும் தேவகியின் வாழ்வியலில்இவற்றை யதார்த்தமாக உணரக்கூடியதாக இருந்தது.

காணாமல் போய்விட்டார் என காணாமல் போனமை பற்றிய சான்றிதழைப் பெறுவதுவா? இறந்துவிட்டார்! மீளத்திரும்பார்!! என முடி வெடுத்து இறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறு வதுவா? இதில் இரண்டும் சிறந்த முடிவு அல்ல என்பதுவே தேவகியின் நிலைப்பாடு. ஆனாலும் போரியல் நிலைமைகள் விட்டுச் சென்ற வாழ்வியல் சூழ்நிலைகள் அவளைப் பல கோணங்களிலும் அல்லலுறச் செய்துவிட்டன. காணாமல் ஆக்கப்பட்டவருக்கு காணாமல் போனமை என்கின்ற சான்றிதழா? இறந்த உடலுக்கு உரிய கிரியைகள் செய்யாமல், காணாமல் போனவர் இறந்தார் என்கின்ற ஊகத்திற்குக் கூட வர முடியாமல் இறப்புச் சான்றிதழ் பெறுவதுவா? காணாமலாக்கப்பட்டதற்கான காரணமும், இறப்பு எனின் இறப்பிற்கான காரணமும் சான்றிதழைப் பெற்றபின் யார் யாருக்கு எடுத்துரைப்பர்? இறந்தவர் என முடிவு எடுத்ததன் பின் ஒருவேளை தேவன் படைத்த தேவனின் கருணையில் மீளவும் வந்துவிடின்!! இதே உலகம் என்னை மட்டுமே கடிந்து கொள்ளுமே. இதிலயும் அவசரப்பட்டாள் தேவகி என அனைவரும் வசை பாடுவரே. ஆதலினால் இன்றுவரை தேவனின் முடிவு குறித்து எதனையும் திடமாக எடுத்திருக்க தேவகிக்கு இயலவில்லை.



ஆனாலும், அன்றைய தினம் தேவகிக்கு வித்தியாசமானது. தொல்காப்பியம் கூறும் பிரிவின் வகைகளினைக் கற்பித்த தேவகிக்கு அன்றைய தினம் வகுப்பின் நிறைவில் திடமான எண்ணம் உருவாகிற்று. ஓதல், பகை, தூது, காவல், பொருள், பரத்தை காரணமாக தன் தேவன் தன்னைப் பிரிந்திருக்கவில்லை. மாறாக நிகழ்ந்த போரின் ''திறத்தவர்களின் பகைமை'' காரணமான சந்தேகக் காரணிகளினால் தன் தேவன் காணாமல் ஆக்கப்பட்டிருக்கக்கூடும். இப்பிரிவு தொடர்வதற்கு தேவன் தேவனிடத்தே சென்றமையும் சிலவேளை காரணமாக இருக்கலாம். ஆதலினால் இப்போதைக்கு ஒரு முடிவுக்கு வருவோம். வாழ்கின்ற வயோதி பத்தினையும், வாழப்போகும் மகளினையும், கூடவே தன்னையும் திடப்படுத்தத் தயாரானாள். அழைப்பினைத் தானே மேற்கொண்டு முடிவினை அறிவித்தாள். உதவிகள் கிட்டின. அனைவரும் ஓரளவு மகிழ்வு வந்ததாகக் கருதினர். ஆனாலும் தேவனுக்கு என்ன நிகழ்ந்தது என்பது மட்டும் எவராலும் கண்டறியப்படவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகள் கடந்தும் இழந்த ஒரு ஆட்டினைத் தேடிச் செல்லும் ஆயர்கள் கூட்டமும் தேவனைப் போன்று காணாமல் போய்விட்டார்களோ! என்னவோ?! குளிருக்கு கம்பளிச்சட்டை வேண்டும் எனின் தேடிச் செல்லவேண்டிய ஆயர்களும் ஓநாய்களாக மாறிவிடும் கலியுகம் - நாம் வாழும் காலம். தேவனுக்கு என்ன நிகழ்ந்தது என்பதுவும் கூடவே தேவகிக்கு நிம்மதி எங்ஙனம் கொணர்வது என்பதுவும் எவராலும் கண்டறி யப்படவில்லை. தேவனே வந்தாலும் இன்று வரை எங்கிருந்தாய்!! இறந்துவிட்டார் எனின் எப்படி!! ஏன்! இனியும் மீளத்திரும்பாரா எனும் உறுதிப்பாடு பற்றிக்கூறு!! எனக் கேள்விக்கணைகள் பலவுண்டு தேவகிக்கு. நியாயமான நீதி கிடைத்திடும்வரை தேவகி ஓய்ந்திடமாட்டாள்.

# எழுதத் தூண்டும் எண்ணங்கள்...



பேராசிரியர்
துரை.மனோகரன்

## தேடிக்கிடைத்த இரு நூல்கள்

மலையகத்தின் அரசியல், சமுதாய, இலக்கிய வரலாற்றில் மறக்கமுடியாத, மறைக்க முடியாத ஒரு பாத்திரமாக விளங்குபவர், கோ. நடேசய்யர். அவரைத் தவிர்த்து, மலையக அரசியல், சமுதாய, இலக்கிய வரலாற்றை யாருமே எழுத முடியாது. அறுபது ஆண்டுகளைக் கொண்ட அவரது வாழ்க்கை வரலாற்றில், இருபத்தேழு ஆண்டுகளை அவர் இலங்கையிலேயே கழித்துள்ளார். தமக்கெனத் தனி ஆளுமையுடன் விளங்கிய அவர், தொடாத துறைகளே இல்லை என்னும் அளவுக்குப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டார். ஈழத்தின் சிறுகதை மூலவர்களாகக் கொள்ளப்படும் இலங்கையர்கோன், சி. வைத்தியலிங்கம், சம்பந்தன் ஆகியோருக்கு முன்னரே அவர் சிறுகதை படைத்துள்ளார். இதனை, நான் எனது இலங்கையின் தமிழ் இலக்கிய வளர்ச்சி என்னும் நூலில் பதிவு செய்துள்ளேன். அதேபோல நாவல், நாடகம் ஆகிய துறைகளிலும் அவர் அக்கறை செலுத்தியுள்ளார்.

கோ. நடேசய்யர் எழுதிய ஒற்றன் என்ற நாவல், பெயரளவில் மட்டுமே சிலரால் அறியப் பட்டிருந்தது. கைக்கு எட்டாத திரவியமாக இருந்த அந்நூலைத் தேடிக் கண்டுபிடித்து, அதனைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையைச் சேர்ந்த முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி பெ. சரவணகுமார். கோ. நடேசய்யரால் 1915இல் எழுதப்பட்ட இந்நாவல், சரவணகுமாரால் 2022 இல் பதிப்பிக்கப்பட்டது. முதலாம் உலகப்போர்ப் பின்னணியைக் கொண்டதாக இந்நாவல் விளங்குகிறது. இந்நூலுக்கான சிறந்த ஒரு பதிப்புரையைச் சரவணகுமாரும், 'கனவு மெய்ப்பட வேண்டும்' என்னும் தலைப்பில் இந் நூல் பற்றிய சிறந்த ஒரு விமர்சனக் கட்டுரையைத் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக அயல்நாட்டுத் தமிழ்க்கல்வித்துறை சார்ந்த பேராசிரியர் இரா. குறிஞ்சிவேந்தனும் எழுதியுள்ளனர்.

இதேபோல, நடேசய்யரால் 1941இல் எழுதப்பட்ட இந்தியா – இலங்கை ஒப்பந்தம் என்ற நூலையும், தமது தேடலின்போது கண்டு பிடித்து, தமிழ்கூறு நல்லுலகத்துக்கு அறிமுகப் படுத்தியுள்ளார், கலாநிதி சரவணகுமார். ஸ்ரீமாவோ – சாஸ்திரி ஒப்பந்தம், ஜே. ஆர். ஜெயவர்த்தனா – ராஜீவ் காந்தி ஒப்பந்தம் ஆகியவற்றுக்கு முன்னதாக இடம்பெற்ற ஒப்பந்தமாக இது விளங்குகிறது. இந்நூலுக்கும் சிறந்த ஒரு பதிப்புரையைச் சரவணகுமார் எழுதியுள்ளார். இந்நூலும் 2022இல் மீள்பதிப்பாக வெளிவந்துள்ளது.

கலாநிதி சரவணகுமாரால் பதிப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்ட இந்த இரு நூல்களின் அறிமுக விழா, கண்டித் தமிழ் மன்றத்தின் சார்பில் அண்மையில் கண்டியில் நிகழ்த்தப்பட்டது. எனது தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், கண்டித் தமிழ் மன்றத்தின் தலைவர் எஸ். பரமேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார். இரு நூல்களின் வெளியீட்டு ரையைப் பேராசிரியர் எம்.ஏ. நு∴மான் நிகழ்த்தினார். ஒற்றன் நாவலின் அறிமுக வுரையை எழுத்தாளர் கோ கணபதிப்பிள்ளை யும், இந்தியா – இலங்கை ஒப்பந்தம் என்ற நூலின் அறிமுகவுரையைச் சிரேஷ்ட ஊடக வியலாளர் இக்பால் அலியும் வழங்கினர். இவ்விரு நூல்களின் ஆய்வுரையை யாழ்ப் பாணப் பல்கலைக்கழகப் பொருளியல் துறையின் முன்னாள் விரிவுரையாளரும், கலை – இலக்கிய விமர்சகரும், ஆய்வாளரும், கலை ஒளி முத்தையாப்பிள்ளை அறக்கட்டளை இயக்கு நருமான மு. நித்தியானந்தன் நிகழ்த்தினார். ஒற்றன் நாவல் பற்றிக் குறிப்பிடும்போது, அது ஆங்கில நாவலாசிரியர் ஒருவரின் நாவலின் தழுவல் என்ற விபரத்தையும் அவர் தெரிவித்தார்.

இவ்விரு நூல்களின் பதிப்பாசிரியரான கலாநிதி பெ. சரவணகுமார் ஏற்புரையையும், நன்றியுரையையும் வழங்கினார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையின் உதவி விரிவுரையாளர் ச. வில்வரசன் நிகழ்ச்சித்

தொகுப்பினை நிகழ்த்தினார். பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ. சுதர்சனும், ஊடகவியலாளர் இக்பால் அலியும் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளைச் சிறப்பாகச் செய்திருந்தனர். கோ. நடேசய்யரின் பிற எழுத்துகளும் மீள்பதிப்புச் செய்யப்படவேண்டும். அதற்கு ஒரு நல்ல முன்னோடியாகச் சரவணகுமாரின் இப்பதிப்பு முயற்சிகள் இடம்பெற்றமை பாராட்டத்தக்கது.

## ஆளுமை மிக்க ஆய்வாளர்

பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையைப் பொறுத்தவரை, எப்போதும் நிகழ்ச்சிகளுக்குக் குறைவே இல்லை. அடிக்கடி ஏதாவது நிகழ்ச்சிகள் நடந்துகொண்டே இருக்கும். இவ்வகையில், அண்மையில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் ஸ்ரீ. பிரசாந்தன் தலைமையில் ஒரு நிகழ்வு இடம்பெற்றது. பலரும் நன்கு அறிந்த கலை – இலக்கிய விமர்சகர், ஆய்வாளர், முன்னாள் பொருளியல்துறை விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் இந்நிகழ்வில் கலந்துகொண்டு 'மலையக இலக்கியம் – தளமும் வளமும்' என்ற தலைப்பில் சிறந்த ஓர் உரையினை நிகழ்த்தினார்.

அவரது அச்சிறந்த உரை, எதிர்காலத்தில் விரிவாக்கம் பெற்று, நூல் வடிவம் பெறுவது நல்லது. மலையகம் தொடர்பான பல்வேறு விடயங்களையும் அக்குவேறு ஆணிவேறாக அலசிப் பார்க்கும் தனித்திறமை வாய்ந்தவராக அவர் விளங்குகிறார். அவர் பேச்சிலே எப்போதும் ஆழமும், சுவாரசியமும் நிறைந்திருக்கும். பரந்த தளத்தில் அவரது வாசிப்பு படர்ந்திருக்கிறது. ஓர் ஆய்வாளருக்குரிய சலியாத தேடல் முயற்சிகள் அவருடையவை. ஆளுமை மிக்க ஓர் ஆய்வாளராக அவர் திகழ்கிறார்.

பல ஆண்டுகளுக்கு முன்னர் நான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த் துறையில் தற்காலிக விரிவுரையாளராகக் கடமையாற்றியபோது நித்தியானந்தனுடன் பழகக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டது. நீண்டகாலத்தின் பின்னர் மீண்டும் இரண்டு நிகழ்ச்சிகளில் அவரைச் சந்தித்துப் பேசக்கிடைத்தமை, மனத்துக்கு மகிழ்ச்சியைத் தருகிறது.

## மகிழ்ச்சி தந்த பெருவிழா

கண்டியில் அவ்வப்போது நல்ல பல நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அந்த வகையில், அண்மையில் ஒரு நல்ல நிகழ்வு இடம்பெற்றது. சென்னையைத் தலைமை இடமாகக் கொண்ட பிறிட்ஜ் அக்கடமியின் கலைச் சங்கமம் என்ற சர்வதேசக் கலைவிழாவே அந்நிகழ்வாகும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக நானும், மத்திய மாகாண இந்துமாமன்றத்தின் தலைவர் துரைசாமி சிவசுப்பிரமணியமும் கலந்துகொண்டோம். சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இசைத்துறை முதுநிலை விரிவுரையாலர் கலாநிதி கிருபாசக்தி கருணா கலந்துகொண்டார். இவ்விழாவின் பிரதம ஏற்பாட்டாளராக பிறிட்ஜ் அக்கடமியின் இலங்கைக் கிளைத் தலைவர் ஸ்ரீசுடரோன் விளங்கினார்.

ஒரு மாபெரும் விழாவாக நடைபெற்ற இந்நிகழ்வில், இந்திய, இலங்கை இசை, நடனக் கலைஞர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். ஒரே மேடையில் சகல கலைஞர்களின் திறமைகளையும் கண்டுகளிக்கக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது. இந்தியக் கலைஞர்களுக்கு எந்த வகையிலும் சளைக்காத மிகத் திறமை வாய்ந்த கலைஞர்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள் என்பதைச் சிறந்த முறையில் இக்கலைவிழா உணர்த்தியது.

இந்நிகழ்வின் ஏற்பட்டாளர்களையும், விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த இந்திய, இலங்கைக் கலைஞர்களையும், அவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர்களையும் மனம் திறந்து பாராட்டவேண்டும். ஒரு முழுநாள் நிகழ்வாக இவ்விழா நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய சர்வதேச இசை – நடனக் கலைவிழா அடுத்த ஆண்டு மட்டக்களப்பில் நடைபெற இருப்பதாகத் தெரிகிறது.

## என்ன சொல்ல... என்ன சொல்ல...

இந்தப் பத்தியை எழுதிக் கொண்டிருக்கும் போது, ஒரு செய்தியைப் பார்த்து அதிர்ச்சி அடைந்தேன். ஓர் உயர்சபையில் ஒரு மந்திரி பிரதானி உரையாற்றியதைப் பார்த்துத்தான் நான் அதிர்ச்சியடைந்தேன். உயர்சபையில் அங்கம் வகிக்கும் ஓர் உறுப்பினரைப் பார்த்துக் கொஞ்சம் கூட நாகரிகம் இல்லாது, வாய்க்கு வந்தபடி உளறியிருக்கிறார், அந்த மந்திரிபிரதானி.

உயர்சபையில் ஒருவரின் கருத்தை எதிர்த்துத் தமது கருத்தைச் சொல்வதில் எந்தத் தவறும் இல்லை. ஆனால், பேச்சில் நாகரிகம் வேண்டும். அந்த நாகரிகம் ஒரு மந்திரி பிரதானிக்கு இல்லவே இல்லை. என்ன செய்வது? இத்தகையவர்களைப் பற்றி என்ன சொல்ல... என்ன சொல்ல...

❍❍❍

## கிடைக்கப் பெற்றவை...




**காட்டிக்கொடுக்கப்பட்ட கடலும் கைவிடப்பட்ட மக்களும்**
**– மரியநாயகம் நியூட்டன்**

இந்நூலானது இலங்கையின் வடக்குக் கடற்பகுதி மீன்பிடி சமூகத்தினர் எதிர்நோக்கும் பிரச்சினைகளின் தோற்றம் வளர்ச்சி மற்றும் பரிமாணம் பற்றி 10 அத்தியாங்களில் ஆராய்கிறது. மேலும் இந்து சமுத்திரப் பிராந்தியக் கடல் அரசியலை விமர்சனப் பார்வை யுடன் நோக்குகிறது. இலங்கையின் கடல்வளம் எவ்வாறு சர்வதேசச் சகதிகளால் கூறுபோடப்பட்டு சுரண்டப்படுகிறது என்பதையும் அதன் பின்னணியிலுள்ள உள்ளூர் சக்திகளை ஆதாரங்களுடன் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இலங்கைத் தமிழ் கடல்சார் மக்களின் இறைமை மற்றும் உரிமை பற்றியும் பேசுகிறது. பேசப்படவேண்டிய கருப்பொருள். நல்ல முயற்சி.

**மெட்டுப்போடு – பாலமுனை பாறூக்**

ஆசிரியரின் இரண்டாவது இசைப்பாடல் தொகுதியான இந்நூலில் 52 இசைப்பாடல்கள் உள்ளன. இவற்றில் காணப்பெறும் இஸ்லாமிய இசைப்பாடல்கள் தனித்த முத்திரையைப் பதிக்கின்றன. பிறைகாணல், நோன்பு நோற்றல், இறையருள் பெறல் போன்ற கருப்பொருள்களை அவை உள்ளடக்கியுள்ளன. மேலும், பாடல்களில் வாய்மொழி இலக்கியக் கூறுகள் மேலோங்கியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்நூலிலுள்ள பாடல்களில் சிலவற்றுக்குச் செயற்கை நுண்ணறிவு செயலிகளின் வாயிலாக ஒலிவடிவம் கொடுக்கப்பட்டுள்ள செய்தியையும் அறிய முடிகிறது. பல பாடல்கள் கலைஞர் கோவிலூர் செல்வராஜனால் பாடப்பெற்று காணொளி வடிவம் பெற்றுள்ளன. வாழ்த்துகள்.







**இளங்கோவன் படைப்புகள் (தொகுப்பு)**
**– வி.ரி. இளங்கோவன்**

ஆசிரியரின் ஏலவே பிரசுரமான சிறுகதைகள், கவிதைகள், மருத்துவ கட்டுரைகள், அறிஞர்கள் பற்றிய கட்டுரைகள், நேர்காணல்கள் ஆகியன தொகுக்கப்பட்டுள்ளன. அத்துடன் ஆசிரியரின் படைப்பு சார்ந்த முன்னுரைகள், ஆசிரியர் பற்றி பிறர் எழுதிய குறிப்புகள் உட்பட சில முகநூல் குறிப்புகளும் சேர்க்கப்பட்டு 868 பக்கங்களில் நூல் அமைந்துள்ளது. கடந்த ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இலக்கியத் துறையில் இயங்கிவரும் வி.ரி. இளங்கோவன் பற்றிய முழுமையான வரலாற்று பார்வையையும்,இயங்கு தளங்களையும், படைப்பாற்றலையும் இந்நூல் வெளிக்காட்டும் என்பதில் ஐயமில்லை.
பாரிய சுய ஆவண முயற்சி. பாராட்டுகள்.

GNANAM - Registered in the Department of Post of Sri Lanka under No. DOP/News/16/2025

**யாழ்ப்பாண நகரத்தின் வளர்ச்சி வரலாறு (1621–1948) – இ.மயூரநாதன்**




நவீன யாழ்ப்பாண நகரம் 2021ஆம் வருடத்தில் தனது 400 வருடகால இருப்பை நிறைவு செய்தது. இந்நகரின் தோற்றம் - வளர்ச்சி குறித்த விரிவான ஆய்வு மற்றும் ஆவண முயற்சிகள் இதுவரை மேற்கொள்ளப் படவில்லை எனலாம். 492 பக்கங்களில் அமைந்த இந்நூல் இன்றைய யாழ்ப்பாண நகரத்தின் தோற்றப்பின்னணி, அது இன்றைய வளர்ச்சி நிலையை அடைவதற்கு காரணமான காரணிகள் போன்ற விடயங்களை ஆராய்வதுடன், இன்றைய யாழ்ப்பாண நகரத்தின் கட்டமைப்புகள் உருவான வரலாற்றை அவ்வவ் காலத்துப் புவியியல், பொருளாதாரம், சமூகம், சமயம், அரசியல், தொழில்நுட்பம் போன்ற இன்னோரன்ன அம்சங்களின் பின்னணியில் விளக்கவும் முயற்சி செய்கின்றது. நிறுவனம்சார் அமைப்புகள் செய்யவேண்டிய பணியை தனிமுயற்சியாக செய்துள்ளமை மிகவும் பாராட்டி போற்றக்கூடிய விடயம். அரிய முயற்சி.




**19ஆவது மேசை**
**– உ. நிசார்**

நாவல், சிறுகதை, கவிதை, சிறுவர் சிறுகதைகள், சிறுவர் பாடல்கள் எனும் வகைகளில் முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டுள்ள ஆசிரியரின் 10 சிறுகதைகள் உள்ளடக்கிய புதிய சிறுகதைத் தொகுதி. அடக்கி வைக்கப்பட்டிருக்கும் பெண்களின் உணர்ச்சி உட்பட, மனிதர்களின் அறியாமை, ஆதிக்கம், பொறாமை, சூது, அன்பு, கருணை, தயவு போன்ற உணர்வுகள் படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. இவரின் கதைகளில் முஸ்லிம் பேச்சுவழக்கின் (உடுநுவரை மண்ணின் பேச்சு வழக்கு) மணம்வீசுவதைக் காணலாம். எழுத்துலகில் தொடர்ந்து பயணிக்க ஞானத்தின் வாழ்த்துகள்.

**Migrated Styles / Connected Histories: Murals in Jaffna**
**-பேராசிரியர் தா. சனாதனன்**

யாழ்ப்பாணத்தில் காணப்பெறும் சுவரோவியங்களை ஆவணப்படுத்தி ஆராயும் முதல் முயற்சியாக இந்த ஆங்கில நூல் அமைகிறது. கலை வரலாற்றிலே சுவர் ஓவியங்களின் வகிபாகங்கள் சரிவர கவனிப்புப்பெறாத நிலையில், இந்நூலானது அவ்விடை வெளியை சுட்டிக்காட்டி இயன்றவரை ஆவணப்படுத்தவும் முயன்றுள்ளது. பொது மக்கள் மத்தியில் செய்திகளை ஆழமாக பதியவைப்பதில் சுவரோவியங்கள் வகித்த தனித்துவமான பங்கினை இந்நூல் உரத்துச் சொல்கிறது. ஏறத்தாழ 70 வர்ணப்படங்களை உள்ளடக்கி உயர்ரக அச்சுப்பதிப்பில் வெளிவந்துள்ளது. இந்நூல் உருவாக்கத்திற்கான சிந்தனையும், உழைப்பும் மெய்ச்சுதலுக்குரியது.




**கிடைக்கப் பெற்றவை...**

9 772478 034009
ISSN 2478-0340

PRINTED BY UNIE ARTS (PVT) LTD., COLOMBO 13. TEL: 011 2330195